கல்கி



- காம்பாக்ட் டிஸ்கில் காந்தி!

  — விஞ்ஞான ஆச்சர்யம்

- மனதைக் கெடுக்கிறதா டி.வி?

  — ஒரு காரசார விவாதம்

- கே.பி.யுடன் உட்கார்ந்து படம் பார்க்க விருப்பமா?

  — விவரம் உள்ளே

புதிய

KKR

இந்தியாவின் முதல் முத்திரைப் பெற்ற பாமாயில்.

நவீன விஞ்ஞான முறையில் சுத்திகரிக்கப்பட்டது

போஷாக்கூட்டும் சமையல் எண்ணெய்



தாய்ப் பாலுக்கு சமமானது என நிரூபிக்கப்பட்ட கே.கே. ஆர் பாமாயில் தனித்தன்மை வாய்ந்தது. இதர சமையல் எண்ணெய்களிலிருந்து பல வகையில் மாறுபட்டது. பாமாயில் பாம் பழத்திலிருந்து பிழிந்தெடுக்கப்படுகிறது.

வைட்டமின் A & E இரண்டையும் மிக அதிக அளவில் கொண்டுள்ளதால் உயிரணுக்கள் சேதம் அடையாமல் பாதுகாத்து உடல் நலம் சீராக இருக்க உதவுகிறது. மாரடைப்பு, புற்றுநோய் மற்றும் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படக்கூடிய அபாயத்தை குறைக்க வல்லது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.



கே.கே.ஆர்
பாமாயில்
வெண்டிங் நிலையத்தில்
ரூ.28.50 (1 லிட்.)
பாக்கெட்
ரூ.32.00 (1 லிட்.)

சென்னையிலும் அதன் புறநகர் பகுதிகளில் மட்டும் கிடைக்கிறது

* கே. கே. ஆரின் செம் பனை பண்ணையில் இரண்டு யூனிட் (10 செண்ட் ஒரு யூனிட்) வாங்குபவருக்கு, ஒரு வருடத்திற்கு மாதந்தோறும் ஒரு லிட்டர் கே.கே. ஆர் பாமாயில் இலவசமாக வழங்கப்படும்.

KKR
பாமாயில் (இந்தியா) லிட்.,

NO. 121, மாதவரம் நெடுஞ்சாலை (வடக்கு), பெரம்பூர், சென்னை 600 011. Ph: 5375456, 5376796.

ADEPT/KKR/96

கே.கே.ஆர் பாமாயில், தூய்மை மற்றும் முழு குடும்பத்தின் ஆரோக்கியம்



‘கல்கி’ பாக்கறீங்களா கல்கி வாசகர்களே?

தீபாவளிக்கு ரிலீஸாகப் போகிற டைரக்டர் பாலசந்தரின் படத்தின் பெயர் ‘கல்கி’!

‘கல்கி வாசகர்களுக்கு ‘கல்கி’ படத்தைப் பார்க்கிற வாய்ப்பை பட ரிலீஸுக்கு முன்பே ஏற்படுத்தித் தர முன்வந்துள்ளார் கே.பி.

வெறுமனே படம் பார்ப்பதில் என்ன த்ரில் இருக்கிறது? பாலசந்தருடன் கூடவே அமர்ந்து படம் பார்த்தால்...?

அவருடன், படம் பற்றி உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள – விவாதிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தால்...?

எத்தனை மகிழ்வீர்கள்?

இதோ அந்த வாய்ப்பு!

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். ‘கல்கி’ பத்திரிகை பற்றி, உங்கள் கல்கியின் சிறப்பை வெளிக்காட்டும் விதமாக, பளிச்சென்று ஒரு ‘சுலோகன்’ – ஒரே வரியில் எழுதி 23.10.96க்குள் எங்களுக்கு அனுப்பி விட வேண்டியதுதான்.



மிகச் சிறந்த சுலோகன்களை எழுதும் மூன்று வாசகர்கள் ஆசிரியரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இயக்குநர் பாலசந்தருடன் அமர்ந்து ‘கல்கி’ படம் பார்த்து, அவருடன் விவாதிக்கும் வாய்ப்பைப் பெறுவர்.

- போட்டியில் வெல்கிற வெளியூர் வாசகர்களுக்கு, சென்னை வந்து செல்ல ஆகும் இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணம் அளிக்கப்படும்.
- ஒருவரே எத்தனை சுலோகன்கள் வேண்டுமானாலும் எழுதலாம்.
- தபால் கார்டில் மட்டுமே எழுதுங்கள்.
- முகவரிப் பகுதியில், ‘கல்கி – சுலோகன் போட்டி’ எனத் தவறாமல் குறிப்பிடுங்கள்.
- மறக்க வேண்டாம்... கடைசி தேதி **23.10.96**

ஆல் தி பெஸ்ட்!

காந்தி-சிடி ராம் ராம்!

அவர் சர்வ வல்லமை படைத்த ஆங்கிலப் பேரரசின் பிரதிநிதியோடு சிக்கலான அரசியல் பிரச்னை எதையோ விவாதித்துக் கொண்டிருக்கிறார். தடதடவென்று அறைக்குள் நுழைந்து ஒரு சாமானியன் சொல்கிறான், "நீங்கள் சொன்னபடி நான் ஒரு மாத காலம் சாப்பாட்டில் வெங்காயம் சேர்த்துக் கொள்ளவில்லை. இன்றையிலிருந்து திரும்ப வெங்காயம் சாப்பிடலாமா?"

வெள்ளைக்காரத் துரையோடு நடந்த பேச்சை ஒரு நிமிடம் நிறுத்தி, கரிசனமும்,- நேசமும் மாறாத குரலில் அவர் சொல்கிறார், "சரி... சாப்பிடு..."

வெங்காயப் பிரச்னையிலிருந்து, வெள்ளையர் ஏகாதிபத்தியம் வரை தீர்க்க வழி சொன்ன அந்த மனிதரின் பெயர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி.

'இப்படி ஒரு மனிதர் இங்கே உயிர் வாழ்ந்தார் என்பதை எதிர்கால உலகம் நம்ப மறுக்கும்' என்று அறிவியல்மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டின் மனமுருகித் துதித்த அந்த மகாத்மா இருந்ததும் நடந்ததும் பேசியதும் பொக்கைவாய்ப் புன்னகை புரிந்ததும் எல்லாம் இந்த மனிதகுலம் உள்ள வரை பார்த்து, கேட்டு, படித்துப் பரவசமடைய வழி செய்யப்பட்டு விட்டது - கம்ப்யூட்டர் மூலம்!

பெரிய இயந்திரங்களாக, குளிர்பதன அறைகளில் ஒதுங்கி உட்கார்ந்து கணக்குப் போட்டுக் கொண்டிருந்த கம்ப்யூட்டர்கள், உருவம் சிறுத்துப் பள்ளி வகுப்பறைக்குள்ளும் வீட்டு வரவேற்பறையிலும் புகுந்து கொண்டிருக்கும் காலம் இது.

ஒலிப்பலகை (SOUND CARD) யையும், சின்னஞ்சிறிய, 'அன்றெழுதியதை அழித்தெழுத முடியாத' தகவலை ஒலி, ஒளி, வரி வடிவமாகப் பதிந்து வைக்கும் தகவல் 'தட்டு' இயக்கியையும் (CD-ROM DRIVE- COMPACT DISK READ ONLY MEMORY DRIVE) கம்ப்யூட்டரில் இடம் பெறச் செய்து விட்டால் கணக்குப் போடுகிற கம்ப்யூட்டர் கதையும் சொல்லும்- காந்தி மகான் கதை.

கம்ப்யூட்டரை இப்படி சகலகலா வல்லவனாக அவதாரம் எடுக்கச் செய்யும் மல்ட்டி-மீடியா என்ற தொழில் நுட்ப உதவி கொண்டு, காந்தி பற்றிய சிடி-ராம் ('காந்தி- ராம்' என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்) வெளியீட்டு விழா சமீபத்தில் நடந்தது.

மேடையில் சி.சுப்ரமணியம், மூப்பனார், ஜெயகாந்தன், வலம்புரி ஜான் போன்ற பிரமுகர்களோடு கம்ப்யூட்டருக்கும் நாற்காலி போடவில்லையே தவிர, கதரும், காம்பாக்ட் டிஸ்க்கும் கை கோத்துக் கொண்டதை உணர முடிந்தது.

அமெரிக்கா வாழ் இந்தியர்களின் நிறுவனமான கிரியா டெக்னாலஜியின் அசுர சாதனை இந்த சிடி-ராம். நாலரை மணி நேரம் தொடர்ந்து கம்ப்யூட்டரில் இயக்கக்கூடிய, அறுநூற்றைம்பது மெகாபைட் அளவு (கிட்டத்தட்ட அறுபத்தைந்து கோடி எழுத்துக்கள்!) காந்திஜி பற்றிய தகவல்கள், இருநூற்றைம்பது தலைப்புக்களில் அவருடைய குழந்தைப் பருவம், தென்னாப்பிரிக்க வாசம், விடு தலைப் போராட்ட காலம் என்ற பெரும் பிரிவுகளாக அமைக்கப்பட்ட தகவல் தட்டு இது.


காந்திய அறிஞரும் அண்ணலின் எழுத்துக்களை நூறு தொகுதிகளாகத் தொகுக்கும் திருப்பணியைக் கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாகச் செய்தவரு





மான, (காலஞ்சென்ற) பேராசிரியர் சாமிநாதனின் தலைமையில் ஒரு பெரிய அறிஞர் குழுவே ஒவ்வொரு துணுக்குத் தகவலையும் பார்த்துப் பார்த்துப் பரிசோதித்துக் கொடுத்தது.

அருங்காப்பகத்தில் மகாத்மா பற்றிய டாக்குமெண்டரி படங்களிலிருந்து (மொத்தம் ஐந்து மணி நேரம் ஓடக் கூடியவை) தேர்ந்தெடுத்து, கம்ப்யூட்டர் மூலமே ஒளி, ஒலியைச் செம்மைப்படுத்தி வடித்த நாற்பத்தைந்து நிமிட ஒளிப்படங்களையும் (Video Clippings) சேர்த்திருக்கிறார்கள்.



• சிடி—ராமில் காந்தி

காந்தி பற்றிய இருநூறுக்கு மேற்பட்ட அரிய புகைப்படங்களும் தகவல் தட்டில் உண்டு.

எல்லாவற்றுக்கும் மேல், மனத்தை ஈர்க்கும் இதமான இசையும் (டி.வி.கோபாலகிருஷ்ணன்), பி.சி.ராமகிருஷ்ணா குரலில் கம்பீரமான ஆங்கில வர்ணனையையும் (எழுத்தாளர் லா.ச.ரங்கராஜனின் கைவண்ணம்) கொண்டது இந்த சிடி-ராம்.

இயக்கிப் பார்த்தோம்... 'வைஷ்ணவ ஜனதோ' கீதம் கம்ப்யூட்டரிலிருந்து எழ, எடுத்த எடுப்பிலேயே களை கட்டி விடுகிறது.

திரைக்குக் கீழே வரிசையாக இடம் பெற்ற ஆண்டு எண்களிலிருந்து '1931'ஐத் தேர்ந்தெடுத்தோம்.

திரையில் வட்ட மேஜை மாநாட்டுக்கு இங்கிலாந்து போகக் கப்பலேறும் காந்திஜி நிற்கிறார். அடுத்த நிமிடம் மாநாட்டில் அவருடைய புனிதக் குரலும் கேட்கிறது.

வட்டமேஜை மாநாடு பற்றிய தகவல்கள் திரையில் ஒளிவிட, துணைக்கு வருகிற ஆங்கில ஒலி வர்ணனை...

திரையில் பக்கவாட்டில் வரிசையாக அடுக்கப்பட்டுத் தெரியும் தலைப்புகளில் 'காந்தி பிறப்பு' என்று தேர்ந்தெடுத்தோம். போர்பந்தரும், அங்கே காந்தியடிகளின் பழமை மணக்கும் இல்லமும், அன்னை புத்லிபாயும், குடும்பமும் புகைப்படங்களாக விரிந்து நம்மைப் போன நூற்றாண்டுக்குக் கூட்டிச் செல்கின்றன.

கீழ்த் திரையில் வரலாறு படித்துக் கொண்டே வரும் போது, 'போர்பந்தர்' என்ற எழுத்துக்களைப் பார்த்ததும் அந்த ஊர் எங்கே உள்ளது என்று தெரிந்து கொள்ள ஆவல். பொத்தானை அழுத்த, இந்திய வரை படத்தில் போர்பந்தர் மின்னுகிறது!

இதெல்லாம் இருக்கட்டும்... திரையில் 'உப்பு சத்தியாகிரகம்' என்று எழுதிக் காட்டினால் போதும்... தண்டி யாத்திரைக்கு விறுவிறுவென்று மகாத்மா நடந்து போகிற வீடியோ படம்! (ஆட்டன்பரோவின் சினிமா காந்தி இல்லை... அசல் காந்திதான்).

நான்கு மாதத் தயாரிப்பாகத் திட்டமிடப்பட்ட இந்த மல்ட்டி-மீடியா காந்தி சிடி-ராம் தயாரித்து முடிக்க இரண்டு வருடம் பிடித்ததாம். ''ஒரு புனிதப் பணியில் எங்களை அர்ப்பணித்துக் கொண்டதாலோ என்னவோ, காலம் போனதே தெரியவில்லை'' என்று நம்மிடம் சொன்னார் கிரியா டெக்னாலஜியின் நிர்வாக இயக்குநர் நடேஷ்.

கம்ப்யூட்டர் நிபுணரான இந்த இளைஞரை ஈர்த்ததும் காந்தியத்தின் வெற்றிதான். பதினேழு லட்ச ரூபாய் செலவில் உருவான இந்தத் திட்டத்தின் மூலம் வெளியிடப்படும் சிடி-ராமின் விலை ஏறக்குறைய ரூ 2100/-. கூடிய சீக்கிரமே தமிழிலும், பிற மொழிகளிலும் வர இருக்கும் இந்த 'காந்தி-ராமை' அரசே வாங்கிப் பள்ளிகளுக்கு விநியோகம் செய்தால், அடுத்த தலைமுறை 'காந்தி யார்' என்று நமக்குச் சொல்லிக் கொடுப்பார்கள்.

ஏற்கனவே 'யோகா' பற்றிய பிரபலமான சிடி-ராம் வெளியிட்டுள்ள கிரியா டெக்னாலஜி, இன்னும் முப்பதுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் அடுத்து சிடி- ராம்களை வெளியிட இருக்கிறார்கள் என்று நிறுவனத் தலைவர் பாலசுப்ரமணியன் சொன்னார். காஞ்சி முனிவர், அன்னை தெரசா பற்றியவையும் இவற்றில் அடங்கும்.

பாரதிய வித்யாபவன் விற்பனை உரிமை பெற்றுள்ள இந்த சிடி-ராம் தென்னாப்பிரிக்காவிலும், லண்டனிலும், மும்பையிலும், தில்லியிலும் காந்தி பிறந்த நாளில் வெளியிடப்பட்டது.

சென்னையில் மூப்பனார் ரத்தினச் சுருக்கமாகப் பேசி வெளியிட, பெற்றுக் கொண்டவர் சி.சுப்ரமணியம். கூடவே காந்தி பற்றிய இரண்டு ஆங்கிலப் புத்தகங்களையும் வெளியிட்டு, பொதுவாழ்வில் நேர்மை குறைந்து வருவது பற்றியும், சட்டம் தன் வேலையைச் செய்ய ஆரம்பித்திருப்பது பற்றியும், (''காந்தியம் திரும்புகிற அடையாளம் இது'') பெரிய பெரிய தலைவர்கள் சிறைக்குள் இருப்பது பற்றியும், உள்ளே போகப் போவது பற்றியும் குறிப்பிட்ட சி.எஸ்.புத்தகத்தின் முதல் கட்டுரையைப் பற்றியும் சொல்ல மறக்கவில்லை.

காந்தியம் பற்றிய அந்தக் கட்டுரையை எழுதியிருப்பவர் — நரசிம்மராவ்!

- அச்வின்

உலகப் புகழ்பெற்ற புரூஸ் லீயின் சூப்பர் ஹிட் படங்களுள் ஒன்றான 'ஃபிஸ்ட் ஆஃப் ஃப்யூரி'யின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. படத்தின் ஸ்டண்ட் டைரக்டர், வித்தியாசமாய் ஏதாவது செய்ய விரும்பினார். அதுவரை எந்தப் படத்திலுமே இடம்பெறாத வகையில், மிக உயரத்திலிருந்து டைவ் அடிக்கும்படி ஒரு காட்சியை உருவாக்கினார்.

ரொம்ப ரிஸ்க்கான அந்தக் காட்சி, படத்தில் இடம் பெறுவதை டைரக்டர் விரும்பினாலும், அந்தக் காட்சியில், புரூஸ் லீ நிஜமாகவே குதிப்பதை விரும்பவில்லை. எனவே யாராவது ஒரு ஸ்டண்ட் நடிகரை வைத்து, அந்தக் காட்சியை எடுக்கவே விருப்பப்பட்டார்.

'இத்தனை உயரத்திலிருந்தா குதிக்க வேண்டும்?' என்று பல ஸ்டண்ட் நடிகர்களும்



தயங்கினபோது, துடிதுடிப்பான ஒரு இளைஞர், 'எனக்கு என்ன ஆனாலும் கவலை இல்லை; நான் அந்தக் காட்சியில் நடிக்க ரெடி' என்று முன்வந்தார்! டைரக்டர், ஸ்டண்ட் இயக்குனர் உட்பட அனைவரும் அந்த இளைஞரை வியப்புடன் நோக்கினார்கள். காட்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதும், படப்பிடிப்புக் குழுவுக்கே உள்ளூர திக்திக்!

டைரக்டர் ஸ்டார்ட் சொன்ன கணமே, மின்னல் வெட்டினாற்போல, குதித்தார் அந்த இளைஞர்! முதல் டேக்கிலேயே ஷாட் ஓ.கே.! அந்த இளைஞரைக் கட்டிப்பிடித்து, பாராட்டுவதற்கு வார்த்தைகள் இன்றித் தவித்த புரூஸ் லீயின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

அந்த தைரியசாலி இளைஞரின் பெயர் வோங் ஸாங் (Kwong Sang). சீனாக்காரர்.

வோங்ஸாங் என்றால் சீன மொழியில் 'பரந்த மனம் கொண்ட, துறுதுறுப்பானவன்' என்று அர்த்தம்.

ஸ்டண்ட நடிகரான வோங் ஸாங், நாளடைவில் ஸ்டண்ட் மாஸ்டராகி, கராத்தே, குங்ஃபூவை மையமாய்க் கொண்ட படங்களில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அவரே, ஹீரோவாய் நடிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தது. படம் "ஸ்நேக் இன் தி ஈகிள்ஸ் ஷேடோ." சினிமா ஹீரோவாக அறிமுகமானபோது, அவர் தமக்கொரு புனைபெயர் சூடிக் கொண்டார். ஜாக்கி சான்!

இன்று தமது அதிரடிப் படங்கள் மூலம் வசூலில் உலகையே கலக்கிக் கொண்டிருக்கும் ஜாக்கி சானின் ஆரம்பத்துப் படங்கள் (நி எங் மாஸ்டர், டிரங்கன் மாஸ்டர்.) சுமாராகத்தான் ஓடின. புரூஸ் லீயைப் போலவே நடிக்கிறார் என்ற விமர்சனம்தான் வந்தது.

அதை ஒரு பாராட்டாய் எடுத்துக் கொண்டு, அதே பாணியைத் தொடரலாம் என்று சிலர் ஆலோசனை சொன்னபோது, ஜாக்கி

உலகைக் கலக்கும் சூப்பர் ஸ்டார்!

அதனை ஏற்கவில்லை. 'எனக்கென ஒரு வித்தியாசமான பாணி வேண்டும்' என்று தீர்மானம் செய்தார். நாற்பது படங்களுக்கு மேல் நடித்துவிட்ட ஜாக்கி சான், தம் வாதம் சரிதான் என்பதை ஒவ்வொரு படத்தின் மூலமாகவும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்! தற்சமயம் ரிலீஸாகி, உலகெங்கும் (சென்னையில் கூட) ஓடிக் கொண்டிருக்கும் அவரது 'தண்டர் போல்ட்'டுக்குக் கூட்டம் அலை மோதுகிறது. ஒவ்வொரு சண்டைக் காட்சிக்கும் விஸில் வானைப் பிளக்கிறது!

புரூஸ் லீயின் ஆக்ஷன், சார்லி சாப்ளினின் ஸ்லாப்ஸ்டிக் காமெடி இரண்டையும் கலந்து, அமைத்துக் கொண்ட 'ஜாக்கி ஸ்டைல்' இன்று குங்க்ஃபூ, கராத்தே அடிப் படையில் சீன, ஹாங்காங் திரையுலகில் ஆண்டுக்கு சுமார் 150 சினிமாக்கள் வெளிவந்தாலும், தனித்து நின்று, ரசிகர்களைக் கவர்கிறது.

சீனாவில் பிறந்தவர் என்றாலும், தம் பெற்றோருடன் ஆஸ்திரேலியாவில் வளர்ந்தவர் ஜாக்கி சான். தம் ஏழாவது வயதில், ஹாங்காங் வந்து, அங்குள்ள சீன நாடக அகாடமியில் சேர்ந்து நடிப்புப் பயிற்சி தவிர பல்வேறு வகையான போர்க் கலைகளையும் கற்றுத் தேர்ந்தார். அந்த நாட்களைப் பற்றி ஜாக்கி சொல்கிறார் :

"காலை ஐந்து மணிக்கு ஆரம்பித்தால், மாலை ஐந்து மணி வரை டைட் ஷெட்யூல். ஒரு காலை மடக்கி உயர்த்திக் கொண்டு, மறு காலில் ஐந்து மணி நேரம்



அசையாமல் நிற்க வேண்டும். இதுபோல ஏகப்பட்ட பயிற்சிகள். அவைதான் என்னுடைய இன்றைய நிலைக்கு அஸ்திவாரம்."

புரூஸ் லீயின் மர்மமான மரணத்தையடுத்து, அந்த ஊரில் முப்பதுக்கும் அதிகமான நடிகர்கள் ஏதாவது ஒரு 'லீ' என்று பெயர் வைத்துக் கொண்டு, அவரைப் போலவே, ஆக்ஷன் படங்களைக் கொடுத்தார்கள். ஆனால் பலரும் எடுபடாமல் போக, ஜாக்கி சான் தம் தனி ஸ்டைலால் ரசிகர்களை ஈர்த்தார். என்றாலும், அவருக்கு வெகு நாட்களாகவே ஒரு குறை உண்டு.

கிழக்கு ஆசியாவின் சூப்பர் ஆக்ஷன் ஹீரோவாய்ப் பெயர் வாங்கிய போதிலும், ஹாலிவுட்காரர்கள் அவரை அங்கீகரிக்கவில்லை. அமெரிக்காவில் வெளியிடப்பட்ட, அவருடைய மிக விறுவிறுப்பான படங்கள் கூடத் தோல்வியே கண்டன. ஆனால், ஹாலிவுட்காரர்களை அசத்திவிட வேண்டும் என்று தீவிர வெறியுடன் ஜாக்கி உருவாக்கிய படம் 'ரம்பிள் இன் ப்ரான்ஸ்.'

அமெரிக்காவில் நடைபெறும் கதையில், ஜாக்கி ஒரு துடிப்பான போலீஸ் அதிகாரி. அமெரிக்காவெங்கும் நூறுக்கும் அதிகமான தியேட்டர்களில் வெளியான 'அந்தப் படம்,



• கனல் கண்ணன்

வசூலில் அமோக வெற்றி! அண்மையில் வெளியான தண்டர் போல்ட் திரைப்படமும் சூப்பர் ஹிட். ஒரு கனவு நிறைவேறிய திருப்தி, ஜாக்கி சானுக்கு.

தம் படங்களின் சண்டைக் காட்சிகளைத் தாமே உருவாக்கி, அமைத்துக் கொள்ளுகிறார் ஜாக்கி சான். ஷூட்டிங்கில், சாகசக் காட்சிகளில் நடிக்கிறபோது, ஜாக்கி சந்தித்த விபத்துக்கள் எண்ணிலடங்காதவை. அடுத்து வரவிருக்கும் இவரது படமான 'எ நைஸ் கை' படத்தின் ஷூட்டிங், ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது. மெல்போர்ன் நகரில் வில்லன்கள் துரத்துகிற ஒரு காட்சியைப் படமாக்கினார்கள்.

அப்போது, கட்டுமானப் பணி நிறைவு பெறாத ஓர் உயரமான கட்டடத்திலிருந்து தப்பி ஓடி, ஒரு கூரை வீட்டின் மேலிருந்து சறுக்கியபடி இறங்க வேண்டியிருந்தது.

கேமரா இயங்க, ஜாக்கி சறுக்கிக் கொண்டே வந்தார். ஆனால், பரிதாபம்! பாதுகாப்புக்காக விரிக்கப்பட்டிருந்த குஷனில் இல்லாமல், சற்றே தள்ளி, தரையில் அவரது தலை மோதியது!

ஜாக்கியின் கழுத்தில் பலத்த காயம். வலியில் துடித்த ஜாக்கிக்கு, தயாராக இருந்த டாக்டர் குழு, உடனடியாய் சிகிச்சையளித்துக் காப்பாற்றியது.

ஆனால் ஜாக்கிசானுக்கு, ஷூட்டிங்கின் போது விபத்துக்குள்ளாவது, புதிதில்லை. 'ஆர்மர் ஆஃப் காட்' படத்தின் படப்பிடிப் பின்போது, நாற்பது அடி உயர மரக்கிளையிலிருந்து விழுந்தபோது, மண்டையில் பலத்த அடிபட்டு, அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியதாகி விட்டது!

'ரம்பிள் இன் ப்ரான்க்ஸ்' படத்தின் சண்டைக் காட்சியின் போது, கண்ணாடித் துகள் முகத்தில் பட்டு, தழும்புகள் ஏற்பட்டன.

'தண்டர் போல்ட்' படப்பிடிப்பின் போது, 25 அடி உயரத்திலிருந்து, ஷூட்டிங்கிற்குப் பயன்படுத்தப்படும் பிரம்மாண்டமான கிரேன், ஜாக்கியின் வலது தோள்பட்டை மீது திடீரென்று விழுந்து பலத்த தாக்குதலுக்குள்ளானார் அவர்!

'போலீஸ் ஸ்டோரி' படப்பிடிப்பு, பனிமலைப் பகுதியில் நடந்தபோது, வில்லன்களைத் துரத்தும் காட்சியில், விரல்களில் செமை காயம்!

ஷூட்டிங்கில், ரிஸ்க்கான காட்சிகளில் நடிக்கும்போது, காயம்படுவதும் காயத்துக்குக் கட்டு போட்டுக் கொண்டு, அது வெளியே தெரியாதபடி பாண்ட், ஜெர்க்கின் அணிந்து, நடிப்பது என்பதும் ஜாக்கிக்கு தண்ணிபட்ட பாடு.

ஒருமுறை ஜாக்கி சானின் படம் ஒன்றுக்கு, அவரது முழு உருவ ஆக்ஷன் படம் ஒன்றைப் போட்டு, அவரது உடலின் எந்தெந்தப் பகுதி, எந்த படத்தினுடைய ஷூட்டிங்கில் விபத்துக்குள்ளானது என்று குறிப்பிட்டே விளம்பரப்படுத்தினார்கள்!

இன்னொரு வியப்பான செய்தி. ஜாக்கி சான் மற்றும் அவருடன் ஸ்டண்ட் காட்சிகளில் நடிக்கிற சகாக்களுக்கு விபத்துக் காப்பீடு இன்சூரன்ஸ் செய்ய, இன்சூரன்ஸ் கம்பெனிகள் மறுத்து விட்டனவாம்!

கதையம்சம் என்று பெரிதாக ஏதுமில்லாவிட்டாலும் ஜாக்கியின் படங்களில் ஆழமான ஒரு சென்ட்டிமெண்ட் நிச்சயம் இருக்கும். அம்மாவுக்கு ஏதாவது நேர்ந்திருக்கும். ஆசிரியரை வில்லன் கொன்றிருப்பான். குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு இவருக்கே வந்திருக்கும். இப்படி ஏதாவது ஒரு சென்ட்டிமெண்ட்டை அடிநாதமாக வைத்து அதன் மேல் ஸ்டண்ட் கோட்டை கட்டுவதே ஜாக்கி சானின் வெற்றி ரகசியம் என்கிறார்கள் சினிமா தெரிந்தவர்கள்.

தொட்டதெல்லாம் வெற்றி காணும் ஜாக்கி சானின் சண்டைப் பாணியை நம் உள்ளூர்த் திரையுலகம் கூடியவரை கவீகரித்திருக்கிறது என்பதை எந்த ஸ்டண்ட் மாஸ்டரும் ஒப்புக் கொள்வார்கள்!

"அந்த வேகம் அசாத்தியமானது. அதை நம் நடிகர்களை வைத்து வெளிக்கொண்டு வருவது என்பது சவாலான விஷயம்" என்று வியப்போடு பேசுகிறார்கள்.

பிரபல ஸ்டண்ட் மாஸ்டர் கனல் கண்ணன் சொன்னார் :

"ஜாக்கி சானின் ஸ்பெஷாலிடியே, காமெடி கலந்த, அதிரடி சண்டைதான். அது அவருக்கு மிகவும் பொருத்தமாய் இருக்கிறது. ஆனால், அவரது ஸ்டண்ட்களைத்தான் இங்கே நானும் மற்றவர்களும் படங்களில் அமைக்கிறோமே தவிர, அவரது காமெடி சக்ஸஸ்ஃபுல்லாக இங்கு ஒர்க் அவுட் ஆக மாட்டேன் என்கிறது.

"ஜாக்கி சானின் ஸ்டண்ட் காட்சிகளால் ரொம்பவும் இம்ப்ரஸ் ஆகி, நான் பணியாற்றிய படங்கள் பலவற்றிலும் அவற்றை புகுத்தியிருக்கிறேன்.

'ஆர்மர் ஆஃப் காட்' படத்தில் சுமார் 40 பேரை ஜாக்கி சான் அடித்து நொறுக்கும் ஒரு காட்சி. அதில் ஒரு மேஜையின் முனையில் நிற்கிற ஒருவரை ஜாக்கி அடிக்க, அவர் அப்படியே எழும்பி, ஒரு சம்மர் சால்ட் அடித்து, முன்பு காலூன்றி நின்ற மேஜை முனையில், இரு முட்டிகளையும் ஊன்றி நிற்பார். இன்னும் ஒரு அடி. மறுபடி ஒரு சம்மர் சால்ட். தரையில் போய் விழுவார். இந்தக் காட்சியின் போது அலங்கார் தியேட்டரில் செமை கிளாப்ஸ்! 'எல்லாமே என் ராசாதான்' படத்தில் ராஜ்கிரண் அடித்து நொறுக்கும் காட்சியில், 'ஆர்மர் ஆஃப் காட்' படத்தில் பார்த்த சண்டைக் காட்சியை அமைத்தேன். காட்சியை விளக்கியதும், பலரும் தயங்க, ஒரு துடிப்பான இளம் ஸ்டண்ட் கலைஞர், 'நான் அதைச் செய்கிறேன்' என்று ஆர்வமுடன் முன்வந்து, கிரிக்கெட் Padகள் அணிந்து, அதன் மேல் பாண்ட் போட்டுக் கொண்டு, அடிவாங்கி, சுழன்று, விழுந்தார். தியேட்டரில் இந்தக் காட்சிக்கும் நல்ல வரவேற்பு. ஆனாலும் நான் செய்தது, ஜாக்கிசான் செய்ததில் பத்து பர்சண்ட்தான். என்றாலும், ஏதோ ஏழைக்கு ஏற்ற எள்ளுருண்டை என்று திருப்தி கிடைத்தது!

"அதே போல, ப்ராஜக்ட் ஏ படத்தில், மிக உயரமான கட்டடத்திலிருந்து, மூன்று கட்டங்களில் கட்டப்பட்ட ஷாமியானா போன்ற துணியைக் கிழித்துக்கொண்டு, தரையில் விழுவார் ஜாக்கி சான். அரண்மனைக் கிளி படத்தில், உயரமான வீட்டின் மூன்று தள ஓட்டுக் கூரை மீது விழுந்து, பின் ராஜ்கிரண் தரையில் விழும்படி சண்டைக்காட்சியை அமைத்தேன். தியேட்டரில் ரசிகர்களிடம் அந்தச் சண்டைக் காட்சிக்கு நல்ல வரவேற்பு!

"ஆயுத பூஜை படத்தில், பைக் ஓட்டிக் கொண்டிருக்கும்போது, அசால்டாய் உயரே கிளம்பி, ஒரு புகைப் போக்கியைப் பிடித்துக் கொண்டு தொங்குவது கூட, ஜாக்கி சான் முன்னரே தம் படத்தில் செய்ததுதான்! தியேட்டரிலும், வீடியோவிலும் நிறைய ஜாக்கி சான் மற்றும் பிற ஆக்ஷன் அதிரடி ஹீரோக்களின் படங்களைப் பார்க்கும்போது, பிரமாதமான சீன்களை, அப்படியே மனத்தில் இருத்திக் கொண்டு விடுவேன். அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள சரியான வாய்ப்புகள் கிடைக்கும் போது, மறுபடி பட கேஸட்டைப் போட்டுப் பார்த்து, டைரக்டர் மற்றும் ஹீரோவுடன் டிஸ்கஸ் செய்து, சண்டைக் காட்சிகளை அமைப்பது என்னுடைய பழக்கம்" என்றார் கனல் கண்ணன்.

ஜாக்கி சானின் சண்டைக் காட்சிகள் தான் என்றில்லை, அவரது காமெடியைக் கூட நம் ஊர் சினிமாக்காரர்கள் காப்பியடிக்கிறார்கள்! 'ப்ராஜக்ட் ஏ' என்ற படத்தில், சைக்கிள் சேஸ் காட்சியில், ஒரு குறுகிய சந்தில், மின்னல் வேகத்தில் செல்வார் ஜாக்கி சான். அதனைத் தம் வீட்டின் சிறிய ஜன்னல் வழியே தலையை வெளியே நீட்டும்போது பார்த்துவிடும் ஒரு பெண்மணி, மிரண்டு போய், தலையை உள்ளுக்கு இழுத்துக் கொண்டு, கதவைச் சாத்திக் கொள்ளுவார். ஜாக்கி, அந்த ஜன்னலைக் கடக்கும்போது, 'எதற்கு வீணாய் பயந்து சாகிறாய்' என்பது போல கண்ணாலேயே கேட்டு, டக்டக் என்று கதவைத் தட்டி விட்டுப் போவார்.

சமீபத்தில், டீ.வியில் ஏதோ ஒரு தமிழ்ப் படத்தின் பகுதியைக் காட்டினார்கள். அதில் இதே போல ஒரு காட்சி இடம்பெற்றிருந்தது!

மேலை - கீழை நாடுகளில் சக்கைபோடு போடும் படத்தை - அதன் சிறப்பு அம்சங்களை 'தமிழ்ப் பாணிக்கு' மாற்றிக் கொள்வது நமக்குப் புதிய விஷயமல்ல.

அந்த வகையி நம்மவர்களுக்கு ஜாக்கி சான் செய்திருக்கிற உதவிக்கு, பீச் ரோடில் ஒரு சிலை வைத்தால் கூடத் தப்பில்லை!

— எஸ். சந்திரமௌலி

ஜாலி போட்டி – 9; முடிவு

29.9.96 இதழிலிருந்து சில வரிகளைக் கொடுத்து, 'யார் பேசியது' என்று கேட்டிருந்தோம்.

சரியான விடைகளை எழுதி, குலுக்கல் முறையில் ரூ. 5000 பரிசுபெறும் வாசகர் :

வி. ரெங்கநாதன்,
20/2 தேவர் தெரு,
வில்லிவாக்கம்,
சென்னை – 600 049.

சரியான விடைகள் :

1. அசோக் அமிர்தராஜ் (சின்னத்திரையில் புராணபிசினஸ்)
2. கிச்சா (அவ்வை சண்முகியில் இன்னொரு ரகசியம்)
3. ஸ்ரீராம் (உள்ளே வரலாமா)
4. பிரஹலாதன் (குறையொன்றுமில்லை)
5. இங்மார்பெர்க்மன் (சுஜாதா பக்கம்)
6. வெங்கட்ராமன் (கேட்டுப் பார்த்து சொக்கிப் போனோம்)
7. எர்பகான் (துருக்கியில் ஒரு சஸ்பென்ஸ்)
8. தராசு (நீங்கள் கேட்டவை)
9. மாத்ருபூதம் (இதில் கிடைக்கும் மகிழ்ச்சி வேறெதில் கிடைக்கும்?)
10. திருபர் (போயஸ் தோட்டத்தில் நீ சிரித்தால்)

'கோபுலு' வரைந்த ஸ்ரீராமர் பட்டாபிஷேக 1997 ஆம் ஆண்டு வண்ணத் தினசரிக் காலண்டர் இலவசம்

(தீபாவளி முதல் பொங்கல் வரைதான்)

4 1/2 ஆண்டுகளில் இரு மடங்கு!

ஸ்ரீராம் டிரஸ்ட்

(அமுதசுரபி வெளியீட்டாளர்கள்)

வழங்கும்

புதிய முதலீட்டுத் திட்டத்தில் சேருங்கள்

ரூ. 10,000 நாலரை ஆண்டுகளில் ரூ. 20,000 ஆகிறது



பொன்விழா ஆண்டை நோக்கி வெற்றி நடைபோடும் பொக்கிஷம் போன்ற அமுதசுரபி மாத இதழ்கள்

54 மாதங்களுக்கு இலவசம்

54 மாதங்களும் அமுதசுரபி இலவசமாகத் தங்களுக்கு அனுப்பப்படும். அமுதசுரபி தனிப் பிரதி விலை இன்று ரூ. 10- இன்னும் நாலரை ஆண்டுகளில் அதன் விலை இரட்டிப்பாகலாம். எனினும் தங்களுக்குக் கூடுதல் கட்டணமின்றி இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

5 வருட தீபாவளி மலர்கள்

1996-1997-1998-1999-2000 இலவசம்.

தீபாவளிமலர் ஓர் அரிய கலைப் பொக்கிஷம். 1995 இல் அதன் விலை ரூ. 50 நாலரை ஆண்டுகளுக்குப் பிறகு ரூ. 100 ஆகவும் விலை உயரலாம். தங்கள் முதலீடு எம்மிடம் இருக்கும் வரையில் உங்களுக்கு (எந்த விலையாக இருந்தாலும்) இலவசமாக எங்கள் செலவில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

ரூ. 10 ஆயிரத்திற்கு 'ஸ்ரீராம் டிரஸ்ட்' பெயருக்கு காசோலை அல்லது டிராபட எடுத்து கீழ்க்கண்ட படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவும். இதழ்கள்/மலர்கள் உங்கள் இல்லம் தேடி வரும்.

ஸ்ரீராம் டிரஸ்ட்

145, லிங்கச செட்டி தெரு
தபால் பெட்டி எண் : 5043
சென்னை - 600 001
போன் : 522 85 45 510535

பெயர் : ______________________

வாரிசுதாரர் பெர் : ______________________

முகவரி: ______________________

____

காசோலை எண் : __________ வங்கி : __________ தேதி : __________

54 மாதங்களுக்குப் பிறகே இரட்டிப்பாக
திரும்பப் பெற்றுக் கொள்ளச் சம்மதிக்கிறேன்.

டெபாஸிட்டர் கையொப்பம்

மனசுல இருந்தது: கொட்டிட்டேன்

-வழக்கறிஞர் கே.எம்.விஜயன்



இது அயோக்கியத்தனம்!

கடந்த ஐந்தாண்டு காலத்தில் நடந்து முடிந்த, மாநில, மத்திய ஆட்சிகள் பொது வாழ்க்கையின் மீது நாம் வைத்திருந்த நம்பிக்கையைத் தகர்த்தெறிந்து விட்டன.

'பாழ்பட்டு நிற்கும் பாரத தேசத்தை வாழ்விக்கச் செய்ய மீண்டும் ஒரு மகாத்மா பிறக்க மாட்டாரா?' என்று ஏங்குகிறது மனம்.

முதலில் நிர்வாகம். சராசரி விஷயங்களுக்கு தாசில்தார் மற்றும் ரேஷன் ஆபீஸர்களுக்கு லஞ்சம் கொடுக்காமல் காரியம் நடக்கும் நிர்வாக முறை வருமா? இப்போது 'கையூட்டு கொடுத்தால்தான் காரியம் நடக்கும்' என்ற நிலையை மக்கள் வாழ்க்கை முறையாகவே ஏற்றுக்கொண்டு விட்டார்கள். இது எத்தனை வெட்கக்கேடு? இதை மக்கள் எப்போது உணரப் போகிறார்கள்?

அடுத்த விஷயம், மற்றவர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு செயல்படாத அதிகாரிகளின் மெத்தனம். பொது மக்களின் பிரச்னைகளைப் பற்றித் துளியும் கவலைப்படாமல், கோப்புகளைப் போல் அஃறிணையாக செயல்படும் அதிகாரிகளைக் கண்டால் பற்றிக் கொண்டு வருகிறது.

'மதவாத சக்திகளை எதிர்க்கிறோம்' என்று குரலெழுப்பிக் கொண்டு, ஜாதிவாரியாக மக்களைப் பிரிக்கும் அரசியல்வாதிகள் பற்றியதுதான் எனது இன்னொரு பெரிய கவலை. இங்கே பெரும்பாலான மக்கள் நடைமுறை வாழ்க்கையில் ஜாதிகளைப் பார்ப்பதில்லை. ஜாதி பார்த்து பஸ் ஏறுவதில்லை; ஜாதி பார்த்து ஹோட்டலுக்குப் போவதில்லை; ஜாதி பார்த்து அலுவலகங்களில் வேலை செய்வதில்லை. திருமணம் போன்ற மிகச் சில விஷயங்களில்தான் ஜாதி பார்க்கிறார்கள். அதிலும் இப்போது சிலர் ஜாதி பார்ப்பதைத் தவிர்க்க ஆரம்பித்துள்ளார்கள். இதுதான் யதார்த்தம். ஆனால் யதார்த்தத்துக்குப் புறம்பாய், ஜாதியுணர்வை அரசியல்வாதிகள் திணிக்கிறார்கள். இது அயோக்கியத்தனம்!

இப்போது நமது நாட்டில், அரசியல் கட்சியின் சொத்துக்களுக்கும், வருமானத்துக்கும் வருமான வரியோ, முறையான தணிக்கையோ கிடையாது. ஆதலால், கொள்ளையடிக்கும் தலைவர்கள் லஞ்சப் பணத்தை கட்சிக் கணக்கில் சேர்த்து, அனுபவிக்கிறார்கள். பணத்தை பத்திரப்படுத்தத்தான் கட்சி பயன்படுகிறது. ஆகவே பொது வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தும் வழிகளில் ஒன்றாக எனக்குப் படுவது, உடனடியாக அனைத்து அரசியல் கட்சிகளின் வருமானம் மற்றும் சொத்துக்களை, தணிக்கை அதிகாரத்துக்கு உட்படுத்துவதுதான். இதைச் செய்யும் தைரியம் ஆட்சியாளர்களுக்கு வர வேண்டும்.

அப்புறம்... அன்றாடம் நகரங்களில் காணும் முறையற்ற போக்குவரத்தை நினைத்தால் பயமாக இருக்கிறது. சாலையில் ஒருவர் பின் ஒருவராகச் செல்லாமல் முந்திக் கொண்டு செல்வது என்பது அப்பட்டமான சுயநலத்தின் வெளிப்பாடு. இதன் காரணமாகத்தான் அனைத்துக் குழப்பங்களும் விபத்துக்களும் சாலைகளில் உண்டாகின்றன. விதிகளை அனுசரித்துச் செல்லும், ஒரு புதிய போக்குவரத்து கலாசாரம் இங்கு உருவாகுமா? இதில் அரசுக்கு பொறுப்பு ஏதும் இல்லை. நம்மிடம்தான் இருக்கிறது. இது மிகவும் முக்கியமான விஷயம் என்பது என் கருத்து.

சந்திப்பு : ப்ரியன்

படம் : பேஜர் கே. மூர்த்தி

ஒற்றுமையே வாழ்வின் சாராம்சம்



குடும்பப் பிணைப்பு

குடும்ப அங்கத்தினர் அனைவரது பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் மற்றவர்களின் மேன்மைக்காக உழைக்கும், நம்பிக்கைதரும் ஒரு அரிய உணர்வு.

நட்புணர்வு. ஒன்றுபடச் செய்யும் ஒரு உணர்வு. வாழ்வை அர்த்தமுடையதாக்கி ஒளிரச் செய்வது அது. நாளையத் தேவைகளான திருமணம், கல்வி இன்னும் பிற சுப காரியங்களுக்காகவும் திட்டமிட்டு சேமித்து எதிர்காலத்தை வாழ்வதற்குகந்த, பாதுகாப்புமிக்க இடமாக்குவதும் அதுவே. முக்கியமாக, சேமிப்பதற்கும், தேவை ஏற்பட்டால், உங்களது பணத்திலிருந்தே பெருமையுடனும் உரிமையுடனும் கடன் பெற்றுக் கொள்வதற்கும் ஏதுவாக அரியதொரு வசதியைத் தருகிறது. வாழ்க்கையை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் வாய்ப்பை நல்குகிறது.

நம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொள்ளீர்

ராம் காஷ்யப். உங்களது தேவைகளை புரிந்து கொள்கிறது. அத்துடன் அவற்றை நிறைவேற்றும் வழி முறைகளைத் தனது பல்வேறு சீட்டுத் திட்டங்கள் மூலம் அளிக்கிறது. இத்திட்டங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனத்திடையே நெருக்கத்தை ஏற்படுத்தி வாடிக்கையாளரின் தேவைகளைப் புரிந்து கொள்ளவும் தக்க சமயத்தில் அவற்றை நிறைவேற்றி வைக்கவும் வகை செய்கிறது. நிலையில்லாததோர் உலகினிலே பாதுகாப்பான ஒரு நங்கூரம் ராம் காஷ்யப் சிட்ஸ். எதிர் காலத்திற்காக முதலில் திட்டமிடுவது, பின் உடனேயே சேமிப்பில் இறங்குவது என்ற கருத்தினை உருவாக்கியவர்கள்.

Ram Kaashyap

Chits Private Limited

Member Ram Kaashyap Group

நிர்வாக அலுவலகம் : 1/1, சர் தேசிகா ரோடு, (ஆழ்வார்பேட்டை சிக்னல் அருகில்), மைலாப்பூர், சென்னை 600 004. போன் : 4970205, 4998325.

கிளைகள் : சென்னை : • ஆழ்வார்பேட்டை, மேற்கு மாம்பலம், அண்ணா நகர், அடையாறு, தி.நகர், • கோயம்புத்தூர் • கும்பகோணம் • மதுரை • தஞ்சாவூர் • திருச்சி • ஈரோடு • சேலம் • திருவாரூர் • ஹைதராபாத் • செகந்திராபாத் • விஜயவாடா • விசாகப்பட்டினம் • மிர்யால்குடா • ராஜமுந்திரி • மச்சிலிபட்டினம் • ஏலுரு • காகிநாடா

ஈடில்லா சேமிப்பு. இணையற்ற தேர்வு

Insight-400

உள்ளே வரலாமா?

12

இரா. முருகன்

அப்பா மர ஸ்டூலின் மேல் ஏறி வாசல்களில் மாவிலைகள் கட்டிக் கொண்டிருந்தார்.

"இன்னைக்கே கட்ட வேண்டாம், வாடிப்போயிடும்னு சொன்னா கேட்கவே மாட்டேங்கறேளே..."

உள்ளேயிருந்து குரல் அப்பாவை நோக்கி இவ்வளவு சுருதி உயர்ந்த ஒலித்ததை ஸ்ரீராம் இதுவரை கேட்டதில்லை.

'எல்லாம் கல்யாண டென்ஷன்' என்று நினைத்து புன்னகைத்தபடியே, வழியை அடைத்து ஸ்டூல் போட்டு நின்ற அப்பாவைக் கூப்பிட்டான்.

"அப்பா..."

அவன் குரலைக் கேட்டவர் சின்னப் பையனின் உற்சாகத்துடன் ஸ்டூலிலிருந்து குதித்தார்.

"பார்த்து பார்த்து...." சுகன்யா நீட்டிய கையைப் பிடிக்காமல் ஸ்ரீராமின் தோள்களைப் பற்றி நிலைப்படுத்திக் கொண்டார்.

"வசந்தி, சுச்சு... இங்க பாரு யார் வந்திருக்கான்னு..."

சமையலறையிலிருந்து தூக்கிச் செருகிய புடவையுடன் கோலமாவும் கையுமாக வெளிப்பட்ட வசந்தி "அண்ணா..." என்று ஓடி வர, ஸ்ரீராம் அவளைத் தன் விரிந்த கரங்களுக்குள் அணைத்துக் கொண்டான். அவன் முதுகுப் பக்கம் நீண்ட அவளுடைய இடது கையிலிருந்த மாவுக் கிண்ணம் சாய்ந்து, அவன் கருநீலச் சட்டையை வெள்ளைத் திட்டாக நனைத்தது.

வசந்தியின் கையிலிருந்த மாவுக் கிண்ணத்தையும் கந்தல் துணியையும் சுகன்யா மென்ன விடுவிக்க, அவள் வளைக் கரங்களின் பிடி அண்ணாவின் முதுகைச் சுற்றி இறுக்கியது.

ஏற்கெனவே பிரிந்து விட்ட ஏக்கத்துடன் புதிதாக நிகழப்போகும் பிரிவின் அச்சுறுத்தலும் அதன் கீழ் இழையோடிய இனம் புரியாத மகிழ்வுமாக முரண் பட்ட உணர்ச்சிகளின் விநோதக் கலவையை வசந்தியின் அந்த அணைப்பு ஸ்ரீராமுக்கு உணர்த்தியது. கடகட இரண்டு சொட்டுகள் கண்ணீர் அவள் அகன்ற பெரிய விழிகளிலிருந்து வெளிப்பட்டு அவனது உச்சந்தலையில் உதிர்ந்தது. நிமிர்ந்து பார்த்தவளின் உதடுகள் துடித்தன. விசும்பலும் கேவலுமாக அழுகை வெடித்தது.

பார்த்துக் கொண்டேயிருந்த சுகன்யா சற்று அதிர்ந்து போனாள். என்னதான் உணர்ச்சி வசப்பட்டாலும் இவ்வளவு கேவிக் கேவி அழுமளவுக்கு என்ன நடந்துவிட்டது...?

"ஏண்டி! நல்ல நாளும் அதுவுமா இப்படி அழுதுண்டு, மூக்கைச் சிந்திண்டு... அழப் படாது, வசந்தி!" சரஸ்வதி கடிந்து கொள்ள, ராமநாதன் கொஞ்சம் திகைத்துப் போய் நின்றார்.

"வசந்தி! வா... முகத்தை அலம்பிக்கலாம்..." மென்மையாகவும் உறுதியாகவும் அவளை அப்புறப்படுத்தி பின் பக்கம் அழைத்துப் போனாள் சுகன்யா. குழாயடியில் முகம் அலம்பச் செய்தாள். கொல்லைப் படியில் பறித்து வைத்த நித்ய மல்லி அரும்புகளின் அருகே செம்புத் தண்ணீரில் வாழை நார் ஊறிக் கொண்டிருந்தது. படிக்கட்டில் உட்கார்ந்து, தாலிச் சரட்டிலிருந்து பின் எடுத்து லாகவமாய் நாரைக் கிழித்தாள் சுகன்யா. இரண்டு நீள நார்த் துண்டுகளை முடிச்சுப் போட்டு அரும்புகளை



இரண்டிரண்டாக அடுக்கித் தொடுக்க ஆரம்பித்தாள்.

கண்களை அலம்பி வந்த வசந்தி, "ஹை! மன்னி, தொடுக்க கத்துண்டுட்டேனா....?" என்று கேட்டபோதுதான் சுகன்யாவுக்கு நிம்மதி வந்தது. 'அதெல்லாம் இருக்கட்டும்... நீ ஏன் அப்படி அழுதே...?' என்று கேட்க நினைத்தவள், அந்த எண்ணத்தைக் கைவிட்டுப் பேச்சை மாற்றினாள்.

"மத்தியானத்திலே சும்மாதானே இருக்கேன்... நீ சொன்ன மாதிரி பேப்பரைக் கத்தரிச்சு நூலை கட்டிப் பழகிக்கிட்டேன். அப்புறம் அங்க ஜவஹர்புரத்திலே சாயந்திரம் நாலு மணிக்கு மல்லி அரும்பு விற்பான் ஒருத்தன். அதை வாங்கி தினமும் கட்டுவேன். திடீர்னு ஒருநாள் தானாகவே சரியா கட்ட வர ஆரம்பிச்சிட்டுது...."

"இன்னிக்கு நீங்க கட்டித்தர பூவைத்தான் நான் வைச்சுக்கப் போறேன்..."

சுகன்யா பளிச்சென்று சிரித்தாள். "சரி நீ சொல்லு! எப்ப பொண்ணு பார்க்க வந்தாங்க... பார்த்தவுடனேயே உனக்கு அவனைப் பிடிச்சுடுத்தா....?"

மேற்கே அஸ்தமித்துக் கொண்டிருந்த சூரியனுடன் போட்டி போட்டுக் கொண்டு வசந்தியின் முகம் சிவந்தது.

"ஊம்..." என்றாள் அடங்கிய குரலில்.

"என்ன ஊம்...? பார்த்தவுடனே பிடிச்சுப் போச்சு இல்லே... ஆமாம் வசந்தி, அன்னைக்கு எனக்கு ஒரு போன் பண்ணியிருந்தா நானும் அண்ணாவும் வந்திருப்



தங்க நகை பரிசு

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

போயில்லையா...? என்னை விடு, அண்ணாவுக்கு எவ்வளவு ஏமாற்றமா இருந்திருக்கும்....?"

"எதுக்குமே நேரமில்லை மன்னி.... மத்தியானம் இரண்டு மணிக்குத்தான் அப்பா சொன்னார். நாலு மணிக்கு அவாத்துலேருந்து எல்லாரும் வருவான்னு... அம்மாவும் நானும் டிபனெல்லாம் தயார் பண்ணினோம். நான் போய் புடைவை மாத்திக்கிட்டேயிருக்கும் போதே வந்துட்டா எல்லாரும். அம்மா அப்படியே கசங்கின புடைவையோட போய், 'வாங்கோ'ன்னு சொல்லி உட்கார வைச்சா. எனக்கானா புடைவையைக் கொசுவ முடியாம கை உதற ஆரம்பிச்சுருத்து. எப்படியோ சமாளிச்சு ரெடியாகி வந்தேன்.."

"உன்னைப் பாடச் சொன்னாங்களா வசந்தி?..."

"ஐயோ! அதெல்லாம் ஒண்ணுமேயில்லை. அப்பா நமஸ்காரம் பண்ணச் சொன்னார். அதைக்கூட அவா வேண்டாம்னுட்டா..."

"சேகர்கிட்டே பேசினியா...? நீங்க தனியா பேசிக்கிறதுக்கு வாய்ப்புக் கிடைச்சுதா....?"

அதிர்ந்து போய் தலையசைத்து மறுத்தாள் வசந்தி. "நல்ல காலம் மன்னி.... அப்படியெல்லாம் எதுவும் அவா கேக்கலை. கேட்டிருந்தா நான் ரொம்ப நடுங்கிப் போயிருப்பேன். என்னத்தைப் பேசறது...! வந்தவாளே எல்லாரும் ஒருத்தருக்கொருத்தர் பொதுவான விஷயமா பேசிண்டா. 'எந்த காலேஜ், என்ன சப்ஜெக்ட்'னு, அவ்வளவுதான்... முந்தாநேத்திக்குத்தான் இது நடந்தது. நேத்திக்கு போன் பண்ணி எங்க பையன் சரின்னுட்டான். உங்க பொண்ணு என்ன சொல்றா...ன்னு அப்பா கிட்டே கேட்டிருக்கா. அவரும் சரின்னுட்டார், அப்படியே நிச்சய தாம்பூலத்துக்கும் தேதி வைச்சிட்டா..."

"உனக்கு அவனைப் பிடிச்சிருக்கா... வசந்தி?"

"போங்க மன்னி!" என்று வெட்கப்பட்டவளைப் பார்த்து சுகன்யாவுக்கு வியப்பு வந்தது. அரை மணி நேர சந்திப்பில் ஒரு திருமணம் நிச்சயமாக முடியுமா? எந்த நம்பிக்கையில் எப்படி நிச்சயமாகிறது?

யோசனையில் சற்று மௌனமானவளை வசந்தி அழைத்தாள்.

"மன்னி...!"

"என்ன...?"

"வந்து... நாளைக்கு நான் வரக்கூடாதாம் நிச்சயதாம்பூலத்துக்கு. கல்யாணம் ஆன பிறகுதான் அவா வீட்டுக்குப் போகலாமாம்..."

"இது என்ன அக்கிரமமா இருக்கு...?"

"இல்லை! சாஸ்திரம் அப்படித்தான்... அதனால நீங்க தான் எப்படியாவது அவரை நாளைக்கு இங்கே அழைச்சுண்டு வரணும்..." வெட்கத்தில் தலையைக் குனிந்து கொண்டு பேசினாள் வசந்தி.

"எவரை...?"

"என்ன மன்னி இப்படிக் கேட்கறேள்...?"

"பேரைச் சொல்லமாட்டியா வசந்தி?"

"ம்ஹூம்..."

"என்ன இங்கே தனியா லேடீஸ் கான்ஃபரன்ஸ்?" குமார் வந்து சுகன்யாவுக்கு அடுத்த படியில் உட்கார்ந்து கொண்டான்.

"அவரை நாளைக்கு வரச் சொல்லணுமாம்... வசந்தி ரிக்வெஸ்ட்"

"எவரை....? ஓஹோ! மாப்பிள்ளை சாரையா...? ஆமாம்! அவரை நான் எப்படிக் கூப்பிடறதாம்...? அக்கா ஆத்துக்காரர்னா அத்திம்பேர்னு கூப்பிடலாம். தங்கை ஹஸ்பெண்ட்னா... இரு, நான் அம்மாவைக் கேட்டுண்டு வரேன்."

"வேண்டாம்! வேண்டாம் நீ போய் இப்ப அம்மாகிட்டே எதையும் சொல்லி வைக்காதே..." வசந்தி அலற அலற, குமார் எழுந்து உள்ளே ஓடினான்.

சற்றைக்கெல்லாம் திரும்பி "அம்மா உங்க இரண்டு பேரையும் உள்ளே வந்து கதவைச் சாத்தச் சொல்றா..." என்றான்.

உள்ளே சரஸ்வதி காப்பி தயாரித்து வைத்திருந்தாள். ஸ்ரீராம் பூஜையறையில் தரையில் உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

"நாளைக்கு விசேஷத்துக்கு ஏதாவது உதவி வேணும்னா சொல்லுங்கம்மா..."

"எல்லாம் முடிஞ்சு போச்சு. கோலம் போடறதையும் மாவிலை கட்டறதையும் மட்டும் நாளைக்குப் பண்ணலாம்னு சொன்னேன்... அதையும் அப்பாவும் பொண்ணும் விட்டு வைக்காம இன்னிக்கே முடிச்சிட்டா... குமார் போய் வெற்றிலை பாக்கு பழமெல்லாம் வாங்கிண்டு வந்துட்டான்... பட்

சணமெல்லாம் போன்லயே நேத்தி ஆர்டர் பண்ணி இன்னிக்கே போய் எடுத்துண்டு வந்தாச்சு. நாளை வரைக்கும் காத்திருந்து, ஒருவேளை நேரம் தவறிப் போனா கஷ்டமில்லையா... எல்லாம் அங்கே உள்ளே இருக்கு... போய்ப் பாரு...."

பூஜையறை பக்கமாகக் கை காட்டினார் மாமியார். காப்பி தம்ளரைக் கழுவி வைத்துவிட்டு சுகன்யா பூஜையறையில் ஸ்ரீராமின் அருகே போய்த் தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

ஒவ்வொரு சாத்துக்குடி பழமாக எடுத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தவனின் முகத்தில் கூடைகூடையாக ஏமாற்றம். அதைக் கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டு, "சுகி, ஒன்னிரண்டு பழம் அழுகினாப்பல தெரியறது... பார்த்துத் தனியா எடுத்து வைச்சுடு..." என்றான்.

வெற்றிலையை வேறு விதமாக மாற்றி அடுக்கினான். பிரிக்காமல் வைத்திருந்த பாக்கு, மஞ்சள் பொட்டலங்களைப் பிரித்து தட்டுகளில் பரப்பி வைத்தான்.

'சேது பந்தனத்து அணில் மாதிரி உன் பங்குக்கு உதவி பண்றியா ஸ்ரீராம்...?' வார்த்தைகள் நாக்கின் நுனி வரை வந்துவிட, மாமனார் வருவதைப் பார்த்து அவற்றை அவசரமாக விழுங்கிக் கொண்டான்.

"என்னடா, ஸ்ரீராமா! எல்லாம் சரியா இருக்கா...?" என்றபடி அவனுக்கு மறுபக்கத்தில் உட்கார்ந்தார் ராமநாதன்.

"நீங்களும் அம்மாவும் பார்த்துப் பார்த்துப் பண்ணினால் சரியாயில்லாம போகுமா...?"

"எல்லாமே சடார் சடார்னு நடந்து போச்சுடா! மூணு மாசத்துக்கு முன்னாடி வந்த ஜாதகம் இது. பெரியத்தையோட சம்பந்தி மூலமா வந்தது. பொருந்தியிருக்குன்னு நாம சொல்லி ரொம்ப நாளைக்கு அவா பக்கத்துலேருந்து ஒண்ணும் பதிலேயில்லை. அப்புறம் திடீர்னு முந்தா நாள் பொண் பார்க்க வரேங்கறா... நல்ல காலமா நான் ஏற்கெனவே பையனைப் பத்தி விசாரிச்சு தெரிஞ்சு வைச்சுண்டிருந்தேன்..."

"ஏன்பா! எங்கிட்டே ஒரு வார்த்தை அவா வரான்னு சொல்லியிருக்கலாமில்லையா...?"

குப்பைக் காகிதங்களையும் பழம் சுற்றிய வைக்கோல் துண்டங்களையும் சேர்த்து எடுத்து, அவற்றை அப்புறப்படுத்தும் சாக்கில் சுகன்யா நாசூக்காக அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

அவள் அகன்றதை உறுதிப்படுத்திக் கொண்டு பேசினார் ராமநாதன். "எனக்கும் கொஞ்சம் பயமாயிருந்தது ஸ்ரீராமா... சுகன்யாவை இங்கே பார்த்தா, அவங்க என்ன கேப்பாளோன்னு யோசனையா இருந்தது. அந்தக் காரணத்துனாலே இந்தக் கல்யாணம் நடக்காம போயிடக்கூடாது இல்லையா...."

சற்றே அதிர்ந்தவன், அப்பாவின் விழிகளை நேருக்கு நேராகச் சந்தித்துக் கேட்டான். "எங்க கல்யாணத்தைப் பற்றின உண்மையை மறைச்சா வசந்தி கல்யாணத்தை நிச்சயம் பண்ணியிருக்கேள்...?"

"சே! சே..." அவசரமாக மறுத்தார் ராமநாதன். "அவா வந்தன்னைக்கு சம்பந்தியைத் தனியா கூப்பிட்டுச் சொல்லிட்டேன். அவருக்கு ஏற்கெனவே விஷயம் தெரிஞ்சிருக்கு. ஜாதகம் குடுக்கறச்சே பெரியத்தை சம்பந்தி சொல்லித்தான் குடுத்திருக்கார்... 'எனக்குத் தெரியும் மிஸ்டர் ராமநாதன். இதுல நீங்க சங்கடப்படறதுக்கே ஏதுமில்லை... இன்னைக்கு உங்க மூத்த பிள்ளை-மாட்டுப் பெண்ணைக் காணலியேன்னு தான் எனக்கு ஆச்சரியமா இருக்கு'ன்னார். நல்ல மனுஷர். வசந்தி ரொம்ப கொடுத்து வச்சவ ஸ்ரீராமா..."

"ஆமாம்பா!" என்றான் ஸ்ரீராம், பெருமூச்சை அடக்கி.

"ஒரேயொரு பயம்தான்... அவா ரொம்ப மாடர்ன் குடும்பமா தெரியறா... வசந்தி அதுக்கு ஏத்த மாதிரி மாற வேண்டி வரும்..."

ஸ்ரீராம் சிரித்தான்.

"என்ன சிரிக்கறே...?"

"இல்ல; கதை இங்க ரிவர்ஸ்ல போறது! போகட்டும். கல்யாணத்துக்குப் பணம் எப்ப வேணும்னு சொல்லுங்கோ. உடனே ஏற்பாடு பண்ணித் தரேன்."

"வேண்டாம், வேண்டாம், இப்போ நீ தனியா வேற இருக்கே! உனக்கு செலவு நிறைய இருக்கும். நான் பார்த்துக்கறேன்..."

"அப்பா! வசந்தி கல்யாணத்துக்கு அம்பதாயிரம் உன்கிட்டே எதிர்பார்க்கறேன்னு இரண்டு வருஷம் முன்னாடி சொன்னேளே... மறந்துருத்தா...?"

"அது அப்போ! இப்போ கதை வேறயாச்சே... வேண்டாம் ஸ்ரீராமா!" என்றார்.


வெளியே நிற்க வைத்து கதவைச் சாத்தியதைப் போல் உணர்ந்தான் ஸ்ரீராம்.

(தொடரும்)

"என்னது?... பக்திப் படத்துல கொஞ்சம் அரசியல் நெடியை சேர்த்து தயாரிக்கப் போறீங்களா? படத்தோட பேரு?"

"அம்மனுக்கு சம்மன்!"

-பி.ஆர்.மஹேந்திரநாத்ராவ்



தேவேந்திரா சாரீஸ்

மிக மிக உயர்ந்த பட்டும், நூலும் கலந்து தயாரிக்கப்பட்டது.


H.O.27, ஏலா கந்தப்பன் தெரு, சென்னை - 3, போன் : 5350213
கிளை ஷோ-ரூம் கடை என் 7, ராம்ஸ் பஜார் (பனகல் பார்க் எதிரில்)
தியாகராய நகர், சென்னை - 17. போன் : 8283367

தேவேந்திரா புடவைகள் கிடைக்கும் இடங்கள் :

★ **மதராஸ் டெக்ஸ்டைல்ஸ்,** 4/41, சரஸ்வதி மார்க், W.E.A. கரோல்பார்க், புதுடில்லி-110 005: ★ **காஞ்சிபுரம் சில்க் ஹவுஸ்** (சவுத் எண்டு) 9A/40, W.E.A. கரோல்பார்க், புதுடில்லி, போன் : 572398: ★ **பங்கஜம் சுந்தரராஜன்,** C6/A.D.D.A. Flats, முனிர்கா, புதுடில்லி - 67: ★ **நல்லீஸ் சில்க் சாரீஸ் சென்டர்,** 401, டெலாங் ரோடு, மாதுங்கா, மும்பை - 19: ★ **ஜெயஸ்ரீ,** 2/A, தேசப்பிரியா பார்க் ரோடு, கல்கத்தா - 26: **என். துர்காம்பாள்,** C-71, முதல் மாடி, 10th கிராஸ் மேற்கு விரிவு, தில்லை நகர், திருச்சி - 18. போன் : 34422. ★ **சித்ரா அசோசியேட்ஸ்,** 50/B, பாணாதுரை தெற்குவீதி, கும்பகோணம், போன் : 20972: ★ **ரங்காச்சாரி கிளாத் ஸ்டோர்ஸ்.** 123 சென்குப்தா தெரு, கோயம்புத்தூர் - 9: ★ **ஸ்ரீ முருகன் கிளாத் ஸ்டோர்ஸ்,** 3, ஆரோக்கியசாமி ரோடு கிழக்கு ஆர்.எஸ்.புரம், கோவை-2: ★ **முருகன் சில்க் ஹவுஸ்,** 439, என்.எஸ்.ஆர். ரோடு, சாய்பாபா காலனி, கோவை-11: ★ **பிரியா சாரீஸ்** 4, மஞ்சனக்கார தெரு, மதுரை-1. போன் : 33000: ★ **சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்,** 90, தெற்கு மாசி வீதி, மதுரை-1, போன் : 25122: ★ **மகாலட்சுமி சில்க் சென்டர்,** தீன் பில்டிங் (உள்புறம்), 175/11,மேலவீதி, சிதம்பரம்: ★ **ஹேமாவதி ஏஜென்ஸீஸ்,** 2711, நாணயக்கார செட்டித் தெரு, தஞ்சாவூர்: ★ **திருமதி சாவித்ரி பாலசுப்பிரமணியம்,** 27-வது தெரு, நங்கநல்லூர், சென்னை-61. (பிள்ளையார் கோவில் அருகில்), போன் : 2343737: ★ **பாலாஜி கிளாத் சென்டர்,** No. 22/A, கக்கன் தெரு, வித்யா தியேட்டர் அருகில், தாம்பரம், சென்னை - 45. போன் : 236 7752. ★ **திருமதி சுலோசனா கோவிந்த்,** 2, எம்.ஐ.டி. லெவல் கிராஸிங், குரோம்பேட்டை, சென்னை - 44: ★ **ஹோம் சாரி ஷாப்,** 15, வடக்கு மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை - 5: ★ **பர்வதா சாரீஸ்,** 1, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - 4: ★ **எஸ். பொன்னப்பன் டெக்ஸ்டைல்ஸ்,** 2வது பஜார் (மார்க்கெட் போலீஸ் ஸ்டேஷன் அருகில்), செகந்திராபாத்: ★ **கபில் டிரேடர்ஸ்,** நெ. 7, பெரிய கண்ணாரத் தெரு, மயிலாடுதுறை: ★ **திருமதி கமலா நாகஸ்வாமி,** 52, சரஸ்வதி நகர், கடலூர், போன் : 112: ★ **திருமதி பிரேமா குருராஜன்,** 33, ஆஞ்சநேயர் கோவில் தெரு, தருமபுரி - 2:

குறிப்பு : எங்களுடைய டிரேட் மார்க் KRD இருக்கிறதா என்று சரிபார்த்து வாங்கவும்.





1996 அக்டோபர் 20
தாது ஐப்பசி 4
மலர் : 55
இதழ் : 12

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



மீண்டும் மலிவு விலை மது....?

மலிவு விலை மதுவை அரசே விநியோகிப்பது குறித்து திறந்த மனத்துடன் விவாதிக்கத் தயார் என்று புதுக்கோட்டையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் பேசியிருக்கிறார் கருணாநிதி. இச் செய்தியை மறுநாளே மறுத்து, அது சமுதாயத்தின் பெரும்பான்மை மக்களின் கருத்தாக மாறினால் பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.


காந்தி ஜயந்தி முடிந்த கையோடு, தமிழகத்தில் கள்ளச் சாராயம் முப்பதுக்கும் மேற்பட்ட உயிர்களை பலிகொண்டது மாபெரும் சோகம்தான். ஆனால் இச்சம்பவம் காரணமாக முதல்வர் மனம் தளர்ந்து போய்விடக் கூடாது.

மதுவிலக்குக் கொள்கையை மறுபரிசீலனைக்கு உட்படுத்தக்கூடாது.

'மலிவான, ஆபத்தற்ற' சாராயம் விநியோகிப்பது குறித்து யோசிக்கலாம் என்கிறார் முதல்வர். ஆபத்தற்ற சாராயம் என்பதாக ஒன்று இருக்கவே முடியாது. இதற்கான காரணங்கள் கருணாநிதி அறியாதவை அல்ல... அவற்றை அவர் நினைவுகூர்ந்து பார்க்கட்டும்.

அரசே சாராயம் தயாரித்து விநியோகிப்பது தார்மிக ரீதியில் மிகவும் ஆட்சேபணைக்குரியது என்பது ஒருபுறமிருக்க, அந்த ஏற்பாடு மூலம் நல்ல நோக்கம் எதுவும் நிச்சயமாக நிறைவேறப் போவதில்லை.

கள்ளச்சாராயம் என்பது, புதுக்கோட்டையில் நிகழ்ந்ததுபோல் முப்பதுக்கும் மேற்பட்ட உயிர்களை



ஒரே வேளையில் பலிகொள்ளக்கூடிய விஷம்.

மலிவுச் சாராயமோ, முப்பது லட்சம் பேரை தினம் தினம் படிப்படியாகக் கொன்று தீர்க்கக்கூடிய நஞ்சு.


மலிவுச் சாராயத்தை அரசு நிர்ணயித்த விலையில் விற்றதாக சரித்திரமே கிடையாது! போதைக்கு அடிமையாகிவிடுபவர்களின் பலவீனத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு, விற்பனையாளர்கள் தங்கள் இஷ்டத்துக்கு விலையை நிர்ணயிப்பார்கள் என்பதே நடைமுறை உண்மை.

அந்த விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்குவதில் ஊழலும் கட்சி அரசியலும் புகுந்து விளையாடும் என்பதை சந்தேகமின்றி எதிர்பார்க்கலாம்.

மலிவு விலை மதுக்கடைகள் இயங்கி வந்த காலத்தில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மிக மோசமாகி, சில்லறைத் திருட்டுகள் உச்சத்தில் இருந்த அனுபவம் மறக்க முடியாதது. அதே போல், வீதிகளில் 'குடி மகன்'களின் அலங்கோலமும் அட்டூழியமும் சகிக்க முடியாத அளவுக்கு இருந்தன.

மிகவும் கஷ்டப்பட்டு காவல் துறையைச் சீர்திருத்தி, தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்று வரும் இன்றைய காலகட்டத்தில், முதல்வரின் மலிவு விலை மது யோசனை, அந்த முயற்சிகளில் பெரிய பின்னடைவை ஏற்படுத்தும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, மலிவு விலை மது தாராளமாகக் கிடைத்தாலும், தொடர்ந்து கள்ளச் சாராய வியாபாரமும் சீரும் சிறப்புமாக நடைபெறும். இது நாம் ஏற்கெனவே அனுபவித்துணர்ந்த உண்மை. மலிவு விலை மதுவை நாடுபவர்கள், நாளடைவில் அதன் 'வீரியம்' போதுமானதாக இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அதனினும் அதிக போதை தரக்கூடிய மதுவைத் தேட ஆரம்பிக்கிறார்கள். ஐ.எம்.எஃப்.எல் என்கிற உள்நாட்டில் உற்பத்தியாகும் மேல்நாட்டு மது



வகைகளை வாங்க இந்த ஏழைகளுக்குக் கட்டுப்படியாகாது. எனவே, மலிவான - ஆனால் காட்டமான - கள்ளச்சாராயத்தை நாட ஆரம்பிப்பார்கள். அவர்களின் இந்தத் தேவையை உணர்ந்து, கள்ளச் சாராயம் காய்ச்சவென்றே ஒரு கும்பல் உருவாகி, வளர்ந்து, தடபுடலாய்த் தொழில் நடத்தும். மலிவு விலை மதுவினால் கள்ளச் சாராயம் ஒழிந்துவிடும் என்கிற அனுமானத்தில் மண் விழும்!

இந்தப் பகைமையான கடந்த கால அனுபவத்தை கருணாநிதி எப்படி மறந்தார்...? கள்ளச் சாராய வேட்டையில் வெற்றிகாணும் காவல் துறையினருக்கு காந்தி பதக்கமும் பரிசும் வழங்க முன்வந்தவர், 'மலிவு விலை மது' என்கிற அபாயகரமான எண்ணம் முளைவிட எப்படி அனுமதித்தார்?!

அரசாங்கம் மதுவிலக்குக் கொள்கையில் உறுதியாக இருப்பதன் மூலம், ஒரு தலைமுறையினரை முற்றிலும் மது அருந்தும் வாய்ப்புப் (சட்டபூர்வமாக) பெறாதவர்களாக உருவாக்கிவிட முடியும். அப்படி ஒரு தலைமுறை உருவான பிறகு, தொடர்ந்து மதுவிலக்கை அமுல்படுத்துவது சுலபமாகும்.

மாறாக, மதுவிலக்கு குறித்த மறுபரிசீலனையைச் சட்டசபையில் எழுப்பும்படி முதல்வரே அழைப்பு விடுத்திருப்பதும், 'இவ்விஷயத்தில் தாம் வளைந்து கொடுக்கத் தயார்' என்று வெளிப்படையாக உணர்த்தியிருப்பதும் இதுவரை அவர் ஏற்படுத்திக்கொண்டுள்ள நற்பெயரையெல்லாம் கேள்விக்குள்ளாக்குகிறது.

பொதுத் தேர்தலின்போது, தமது பிரசாரக் கூட்டங்களுக்குப் பெண்கள் அதிகமாக வந்திருந்து பங்கேற்றதைப் பெருமையுடன் சொல்லிக் கொண்டார் கருணாநிதி. அவருக்கு வாக்களித்து முதல்வராக்கிய தமிழ்நாட்டுப் பெண்களின் சார்பாக உரிமையுடன் உத்தரவிடுகிறோம் :

கைவிடுங்கள் இந்த விஷமான சிந்தனையை. வேண்டவே வேண்டாம் மலிவு விலை மது; வேண்டாம், அது தொடர்பானதொரு விவாதம்!



இலவச இணைப்பு

பாலு மகேந்திரா, 'வீடு' என்றொரு படம் எடுத்தார். ஞாபகமிருக்கிறதா? ஒரு வீடு கட்டுவதில் நடுத்தர ஜனங்களுக்கு இருக்கிற பிரச்னைகளைச் சொல்கிற படம்.

அதையே ஆள் மாற்றி, ஆடை மாற்றி நாடகமாக்கியிருக்கிறார் (நியூஸ்) வரதராஜன். (கதை, வசனம்- வேதம் புதிது கண்ணன்.) முழுக்க முழுக்க சீரியஸாக பாலு கையாண்ட விஷயத்தைப் பிழியப் பிழிய நகைச்சுவையுடன் அணுகியிருக்கிறார்கள்.

ஒரு ஆள், ஒரே பிளாட்டை இரண்டு பேருக்கு விற்றுவிட, இரண்டு பேரும் அங்கே வீடு கட்ட முனை

மோதலில் தான் நாடகத்தின் முடிச்சே இருக்கிறது; அதிலும் மாமனார் – மாப்பிள்ளை மோதல்! பிடிவாதமான கொடவாசல் ராக வாச்சாரி, தன் மாப்பிள்ளை வரதராஜனிடம் தாம் பட்ட அவமானத்தை மனசிலேயே வைத்துக்கொண்டு சமயம் வரும் போதெல்லாம், வருகிற வர் போகிறவரிடம் எல்லாம், குத்திக் காட்டுகிறார். மாப்பிள்ளை வரதராஜன் பதில் தாக்கு! சின்ன வயசிலேயே விபத்தில் பெற்றோரை இழந்துவிட்ட தன் பேரன் மாதவனுக்கு, வரதராஜனின் பெண் மாலாவைக் கல்யாணம் செய்து கொடுக்க முடியாது என்று அதனாலேயே பிடிவாதம் பிடிக்கிறார். இந்த இருவரின் ஈகோ பிரச்னையில் மோதல் வலுக்க, நாடகத்தில் விறுவிறுப்பு கூடுகிறது.

மனித சுபாவத்தை தமது இயல்பான நடிப்பால் வெளிக்காட்டியிருக்கிற சுந்தர், கதை – வசனத்திலும் தாம் சளைத்தவரல்ல என்று நிரூபித்திருப்பது நாடகத்தின் ப்ளஸ் பாயின்ட். இடையிடையே மெலிதான நகைச்சுவை இழையோட வரும் ரங்குடுவை அழுத்தமான

நெருக்கு

கிறார்கள். ஒரே கொத்தனார்.

நாடகத்தனமான சில குழப்பங்களுக்குப் பிறகு இருவரில் ஒருவர் அடுத்தவருக்கு விட்டுத் தர, குருப் போட்டோ போஸில் சுபம்.

இந்த நாடகத்தில் பாராட்ட வேண்டிய சில விஷயங்களை முதலில் சொல்லி விடுவோம்.

முதலாவது வரதராஜனின் நடிப்பு. இவர் சீக்கிரம் சினிமாவுக்குப் போய் விடக் கூடிய சாத்தியங்கள் தெரிகின்றன. நகைச்சுவை இருக்கட்டும். உருக்கமான கட்டங்களில் கூட மின்னுகிறார். (அவரது கொய்யாப்பழக் கன்னம் அழுகிறபோது நிரம்ப உதவுகிறது.)

கண்ணனின் வசனங்களில் எந்த ஒரு பாசாங்குமில்லாத 'இயல்பு' இருக் கிறது. நீளம்தான் மைனஸ் பாயின்ட்.

சினிமாவின் கட் ஷாட் உத்தியைக் கையாண்டிருப்பது இன்னொரு சிறப்பு. குட்டிக் குட்டிக் காட்சிகளாக சட்டென்று மாற்றிக் கொண்டே போகிறார்கள். நடுநடுவே ஸ்கிரீனைப் போட்டு முழு நிமிடங்களை விழுங்கி அறுக்காமல் திறமையாக இயங்கியிருக்கிறாகள்.

இனி சில குறிப்பிட்டே ஆக வேண்டிய குறைகள்.

நாடகம் என்பது எட்டுமுப்பது செய்தி அல்ல என்பது வரதராஜனுக்குத் தெரிய வேண்டும். குரலில் இதற்கான ஏற்ற இறக்கங்கள் வேறு ஜாதி. சுருதி பிடித்து மேல் சட்ஜமத்தில் நிற்பது போல ஒரே ஸ்தாயியில் உரையாடு வதை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும்.

அப்புறம் நடிகர்கள் எல்லாரும் ஆடியன்ஸைப் பார்த்தே பேசுகிறார்கள். பஞ்சாயத்து எலக்ஷன் வேட்பாளர்கள் மாதிரி. (இந்த ஜுரம் நிறைய குழுக்களில் இருக்கிறது.) ஒரு கட்டத் தில் எழுந்து போய் முகத்தைப் பிடித்து திருப்பி விடலாமா என்று எரிச்சல் வருகிறது. கவனிக்க வேண்டும்.

டீவியை விட்டு மேடைக்கு ஆட்களை இழுக்க இவர்கள் படுகிற சிரமங்கள் புரிகிறது. முயற்சியில் கூடுதல் கவனம் — தொடர்ந்து செலுத்தினால் இந்த நூற்றாண்டுக்குள் அது சாத்திய மாகி விடக் கூடும்.


- ஆர்பிஆர்

பாத்திரமாக உருவாக்கியிருக்கிறார் சுந்தர். அரசியல் கூட்டங் களுக்கு ஆள் சேர்க்கும் சாதாரண ரவுடு. காட்சிக்குக் காட்சி உருமாறி, கடைசியில் சஃபாரி சூட்டில் வந்து கலகலப்பாக்கி நாடகத்தை முடிக்கிற விதம் இயல்பாக இருக்கிறது.

இயக்குநர் கே.எஸ். நாகராஜன் என்றால், நடிப்பில் யாரும் மிகை யில்லாமல் அடக்கித்தான் வாசிப் பார்கள்.

''க்ளீன் அன்ட் நீட் ப்ளே'' என்று பக்கத்து ஸீட்காரர் நாடகம் முடிந்ததும் அடித்த கமென்ட்டை முழுமையான பாராட்டாகவே எடுத்துக் கொள்ள லாம்!

- சாருகேசி



நேர்

வட்டமேஜை

✉ இக்கட்டான சூழ்நிலையில் வேறு வழியின்றி தான் நரசிம்மராவ் இந்த ராஜினாமா நாடகத்தை நடத்தியிருக்கிறார் என்ற மாபெரும் உண்மையை, தலையங்கம் மூலம், துணிச்சலாகக் கோடிட்டுக் காட்டி விட்டீர்கள். சபாஷ்!

கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

✉ பெண்களின் கௌரவத்தை வெகுவாய்க் குறைக்கும் அழகிப் போட்டி தேவையற்றது என்ற தமது கருத்தை அக்னியில் தோய்த்தெடுத்த கனல் பறக்கும் வார்த்தைகளில் விளாசிய ஜனநாயக மாதர் அமைப்பைச் சேர்ந்த வாசுகியின் முன்பு, ஜெயஸ்ரீ மணியனின் பேச்சு கொஞ்சம்கூட எடுபடாமல் போய்விட்டது. புயல் வேக ஜெயசூர்யாவிற்கு அனுபவமற்ற ஓர் ஹைஸ்கூல் பையன் பௌலிங் போட்டது போல் ஆகிவிட்டது அந்த சூடான விவாதம்.

மதுரை, எஸ். வைத்தியநாதன்.

✉ வித்தகர் கடுகு அவர்களைப் பற்றிய கட்டுரை படித்தேன். நான் டெல்லி கணேஷ் ஆவதற்கு முன்னால் டெல்லியில் வெறும் கணேஷாக இருக்கும்போதே என்னை மேடையில் நகைச்சுவை காட்சிகளில் நடிக்க வைத்த பெருமை PSR, கடுகு, அகஸ்தியன் என்ற வித்தகரையே சேரும்.

சென்னை-83, டெல்லி கணேஷ்.

✉ கல்கி 29.9.96 இதழில் 'ஒரு கலைக் களஞ்சிய வேட்டை' என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளது. தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் 1983ஆம் ஆண்டு புதிய கலைக் களஞ்சியங்களை வெளியிடும் பணியை மேற்கொண்டது. வாழ்வியல், அறிவியல் என்னும் பிரிவுகளில் முறையே 15, 20 தொகுதிகளைத் தொகுத்து வெளியிடும்

பொறுப்பை ஏற்று, இதுவரை வாழ்வியலில் 13 தொகுதிகளையும் அறிவியலில் 10 தொகுதிகளையும் வெளியிட்டுள்ளது. இப்பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

தஞ்சை, எம்.எஸ். கோவிந்தசாமி.

சுஜாதா சொன்னதை ஏற்பதற்கில்லை!

ரூ.20/- பரிசுக் கடிதம்

✉ 'வாலி + வைரமுத்து = ஆபாசம்' தொடர்பாக சுஜாதா தெரிவித்த கருத்துக்கள் ஏற்புடையதாக இல்லை. ஒரு தவறை சுட்டிக் காட்டும் போது, சுட்டிக் காட்டுபவர்களே அதைத் திருத்திக் கொள்வதற்கான தீர்வையும் சொல்ல வேண்டுமெனில், இவ்வுலகில் எந்தத் தவறுமே சுட்டிக் காட்டப்பட மாட்டாது. சங்க இலக்கியங்களிலும் விரசம் உள்ளதாக சப்பை கட்டும் சுஜாதா, மிக எளிதாக பாமரனையும் சென்றடையும் மீடியா சினிமா என்பதையும், சினிமா நடிகர்களைத் தலைவர்களாக வரித்துக் கொள்ளும் அளவிற்கு கல்வியறிவு குறைவாகப் பெற்றுள்ள மாநிலம் தமிழ்நாடு என்பதையும் மறந்தது ஏனோ...? இவர்கள் எழுதும் விரசப்பாடல்கள் நிலைப்பதில்லை என்பதால் மட்டுமே, அது நியாயமாகி விடாது. என்னதான் வக்காலத்து வாங்கவில்லையென சுஜாதா சொன்னாலும், தானும் 'சினிமா ஜாதி' என்பதை மறைமுகமாகச் சொல்வது போல்தான் இருந்தது அந்த ஒரு பக்கம்...!

கன்னிப்பாடி, கே. ஸ்டாலின்.

✉ பெண்கள் தாமாகவே முன்வந்து அழகிப் போட்டியில் கலந்து கொண்டால் மட்டுமே அழகிப் போட்டியை நடத்திட முடியும். எனவே அழகிப் போட்டியை அநாகரீகம் என்று கருதுபவர்கள் அப்போட்டிகளில் பெண்கள் பங்கேற்றுக் கொள்வதை நிறுத்துவதற்கு வழிவகை காண வேண்டும். அதை விடுத்து, அழகிப் போட்டி நடத்தப்படுவதை குற்றம் கூறி எதிர்ப்பு தெரிவிப்பதில் அர்த்தமில்லை.

பவித்திரமாணிக்கம், ஆர். பாஸ்கரன்.

✉ நான் சுமார் மூன்று ஆண்டுகள் தாம்பரம் ரயில்வே போலீஸில் சப்-இன்ஸ்பெக்டராகப் பணியாற்றினேன். நீங்கள் இண்டி ரயில்வே நிலையத்தின் அவல நிலை பற்றி எழுதியிருந்தது நூறு சதம் உண்மை. நான் பணியாற்றியபோது சில யோசனைகள் சொன்னேன். அதை ரயில்வே நிர்வாகம் செவிமடுக்கவில்லை. இண்டி ரயில் நிலையத்தில் உள்ளும் வெளியிலும் லைசன்ஸ் கொடுத்துவிட்டால் ரயில்வே நிர்வாகத்திற்கு வருமானம் வரும். ஏராளமான அநாதை கடைகள் தோன்றாமல் தடுக்கலாம். யூனிபாரம் அணிந்தும், போலீஸ், சுகாதார சான்றிதழ்களுடன் சுத்தமாகவும், பொதுமக்களிடம் மரியாதையாகவும் வியாபாரம் செய்வார்கள்.

விழுப்புரம், என். வீரப்பன்.

✉ கல்கி 29.9.96 இதழில் டாக்டர் மாத்ருபூதம் பற்றிய கட்டுரை படித்தேன். அன்னதானம் ராமசாமி என்று புகழ் பெற்றவர் மாத்ருபூதத்தின் தாத்தா ஆவார். தகப்பனார் அல்ல.


மதுரை, வி. சுந்தரம்.

KALKI SHOPPING PAGE

ஜாலி போட்டி – 12
பரிசு ரூ. 5000/-

கீழே ஐந்து புகழ் பெற்ற இடங்களின் படங்கள் உள்ளன. அவை எந்தெந்த இடங்கள்? கண்டுபிடித்து, வரிசைப்படுத்தி, கூப்பனில் எழுதி, 28.10.96க்குள் அனுப்புங்கள். சரியாக எழுதும் ஒருவருக்குப் பரிசு ரூ.5000/- பலர் சரியாக எழுதினால் குலுக்கல் தான்! ஆசிரியர் தீர்ப்பே இறுதி!


1



2



3



4



5



ஜாலி போட்டி - 12

1.

2.

3.

4.

5.

பெயர் : ____________________

முகவரி : ____________________

____

____

குளுக்கோஸ் வாட்டர் கொடுக்காதீர்கள்!

எங்க வீட்டுக்குப் பக்கத்து வீட்டுல ஒரு பஞ்சாப் ஃபேமிலி இருக்காங்க. தாடி, மீசையெல்லாம் வெச்சுக்கிட்டு அந்த ஆள் பார்க்க பயங்கரமா இருப்பாரு. அவரோட சம்சாரம் நல்ல குண்டா, உயரமா நம்ம பிந்து கோஷ் மாதிரி இருப்பாங்க. அவங்களுக்கு ஒரு குழந்தை. ரெண்டு வயசு. கஷ்க்முஷ்க்னு எப்பப் பார்த்தாலும் சிரிச்சிக்கிட்டு, ரோஜாப்பூ போல இருக்கும்.

எங்கிட்ட ஆசையா தாவி வரும். விளையாடும். மூக்கைப் பிடிச்சுக் கிள்ளும். ரொம்ப சமத்து.

ஆனா, திடீர்னு ஒரு பத்து நாளா அந்தப் பாப்பா வெளியில வரவேயில்லை. ஏதோ உடம்பு சரியில்லைன்னு சொன்னாங்க. விசாரிச்சப்ப, முதல்ல லேசா சளி இருந்தது. கண்டுக்காம விட்டிருக்காங்க. அப்புறம் இருமல், ஜுரம். எப்பப்பாரு அழுதுட்டே இருந்திருக்கு. டாக்டர் வீட்டுக்குக் கூப்பிட்டுப் போயிருக்காங்க. அவர் டெஸ்ட் பண்ணிப் பார்த்துட்டு, 'நிமோனியா'ன்னு சொன்னதும் பயந்து போயிட்டாங்க. 'ஏன் முதல்லேயே கொண்டு வரலை?'ன்னு டாக்டர் திட்டியிருக்கார்.

அந்தம்மா என்கிட்ட வந்து புலம்பினாங்க. 'வெறும் சளிதானேன்னு சிந்திப் போட்டுட்டு இருந்துட்டேன். இப்படி ஆகும்னு யார் கண்டாங்க?'ன்னாங்க.

பெரியவங்களுக்கு சளி இருந்தா வேணா சிந்திப் போட்டுட்டு சும்மா இருக்கலாம். குழந்தைங்க விஷயத்துல அப்படி அலட்சியமா இருக்கறது ரொம்பத் தப்பு.

ரெண்டு விஷயம். ஒண்ணு – சளி, இருமல். இன்னொண்ணு – வயிற்றுப்போக்கு. குழந்தைகளுக்கு இது ரெண்டுல எதாவது ஒண்ணு வந்துட்டா உடனே கவனிச்சாகணும். விஷயம் சீரியஸாயிட்டா, இதனால உயிருக்கே ஆபத்து.

எப்படி?

குழந்தைகளோட 'பாடி மெக்கானிஸம்' ரொம்ப சென்ஸிடிவானது. லேசான அதிர்வுகள் கூடக் கூடாது. இருமல் வந்ததுன்னு வெச்சிக்கங்க. பிஞ்சுக் குழந்தையோட தொண்டை நரம்புகள், நுரையீரல் அதிகமா பாதிக்கப்படும். தவிர அந்த இருமலால வர்ற ஸ்ட்ரெயின் இருக்கே, அது ரொம்ப அதிகம். தொண்டையில புண் வரும். காது வலிக்கும். ஜுரம் வரும். என்னன்னு அதனால விளக்க முடியுமா? வெறுமனே அழத்தான் செய்யும்! நாமதான் ஜாக்கிரதையா இருக்கணும்.

குழந்தைகளுக்கு சளி – இருமல் எதனால வருதுன்னு சொல்ல முடியாது. பொதுவா 'ஒவ்வாமை' காரணம்னு மேலோட்டமா சொன்னாலும் உணவுப் பொருட்கள், காற்று, நீர் இதெல்லாம் நூறு பர்சென்ட் சுத்தமா இருந்தாலொழிய இதைத் தடுக்க வழி இல்லை.

டாக்டர்கிட்ட போறதோட மட்டுமில்லாம அம்மாக்கள் சில காரியம் தவறாம பண்ணணும். முதல் + முக்கியமான விஷயம் – எக்காரணம் கொண்டும் தாய்ப்பால் தர்றதை நிறுத்தவே கூடாது. கூடவே கடவைத்து, ஆறவைத்த சுத்தமான தண்ணீரை அரை மணிக்கொருதரம் குடுத்துட்டே இருக்கணும். அதைவிட முக்கியம் – குழந்தை வயிறு காலியா இருக்கவே கூடாது. பசி அழுகை தொடங்கறதுக்கு முன்னாலேயே உணவு குடுத்துடணும்.

தாய்ப்பால் தர்ற வயசு வரைக்கும் மத்த உணவு வகைகள் (லே, பால் பவுடர், பசும்பால் எட்ஸட்ரா.) தேவையே இல்லை. தாய்ப்பாலைவிட பெஸ்ட் மெடிஸன் எதுவுமே இல்லைன்னு மருத்துவம் சொல்லுது. நவீன மருத்துவம் மட்டுமில்லை... அந்தக் காலத்து சித்தர்களிலேருந்து நூத்தம்பது வருஷம் முன்னாடி வாழ்ந்த ராமலிங்க வள்ளலார் வரைக்கும் கூட இதைத்தான் சொல்லியிருக்காங்க. (வள்ளலார் ஒரு பெரிய சித்த மருத்துவர் தெரியுமா?)

குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் உடனே டாக்டரைப் பார்த்துடணும். இல்லைன்னா என்னென்ன விளைவுகள் ஏற்படும்னு பட்டியல் போட்டால் பயந்துடுவீங்க. வேணாம்.

வயிற்றுப்போக்கு வந்துட்டா, குழந்தைகளோட உடல்ல இருக்கற நீர்ச்சத்து சுத்தமா வெளியேறிடும். அதை நிரப்பாட்டா ஆபத்து.

அதுக்காக பக்கெட் பக்கெட்டா தண்ணி குடுக்கணும்; அல்லது குளுக்கோஸ் குடுக்கணும்ங்கறது இல்லை.



முக்கியமான விஷயம் - யாராவது சொன்னாங்கன்னு குழந்தைகளுக்கு குளூக்கோஸ் வாட்டர் குடுக்கவே குடுக்காதீங்க.

இப்படிப் பண்ணிப் பாருங்க. ஒரு தம்ளர் தண்ணியில ஒரு சிட்டிகை உப்பும் நாலு ஸ்பூன் சர்க்கரையும் கலந்து அரை மணிக்கு ஒரு தடவை குடுத்துட்டே இருங்க. குழந்தை இதனால சக்தி இழக்காம இருக்கும்.

அந்த ஒரு சிட்டிகை உப்பு ரொம்ப அவசியம். பெரும்பாலும் அம்மாக்கள் இதைச் செய்யறதில்லை. வெறும் சர்க்கரைத் தண்ணிதான் தருவாங்க. அது தப்பு. உப்பு சேர்வது ரொம்ப முக்கியம்.

குழந்தைகள் பராமரிப்பு பத்தி சொல்லிட்டே போனா ஒரு கல்கி முழுக்கக் கூட எழுதலாம்.

இந்த ரெண்டு விஷயம் ரொம்ப முக்கியம்ங்கறதாலதான் இங்க சொன்னேன்.

- சுமி

ஹலோ சுகமா?







நாம் வருவதை அறிந்ததும் தானாகவே திறந்து மூடும் கதவுகள் முதல் பிரமிப்பு என்றால், உள்ளே இருக்கும் கம்ப்யூட்டர் இயந்திரங்கள் ஒரு மணி நேரத்தில் அறுபதாயிரம் தபால்களை ஊர்வாரியாகப் பிரித்துத் தள்ளிக் கொண்டிருப்பது இரண்டாவது பிரமிப்பு.

இப்படி ஊர்வாரியாகப் பிரிக்கப்பட்ட தபால்கள் கன்வேயர் பெல்ட்டில் வருவதை ஓர் ஊழியர் எடுத்து குறிப்பிட்ட இடத்தில் வைத்தால் போதும்; ஒரே வினாடியில் கட்டாகக் கட்டிவிடும் இயந்திரம். சம்பந்தப்பட்ட ஊழியர் அந்த இடத்தில் இல்லையென்றால் கன்வேயர் பெல்ட்டில் வருகிற தபால்கள் கீழே விழுந்துவிடுமே என்கிற கவலையும் இல்லை. ஊழியர் அங்கே இல்லையென்றால் கன்வேயர் பெல்ட் தானாகவே நின்றுவிடும்; அந்தத் தபால்கள் எடுக்கப்படுகிற வரை கன்வேயர் பெல்ட் நகரவே நகராது!

இப்படி ஏகப்பட்ட பிரமிப்புகள் உள்ள இடம்தான் சென்னை மீனம்பாக்கத்திலுள்ள தானியங்கித் தபால் பிரிப்பகம் (Automatic Mail Processing Centre). இந்தியாவிலேயே இப்படியொரு பிரம்மாண்டம் நிறுவப்பட்டிருப்பது மும்பையிலும் சென்னையிலும்தான். நமது தபால்துறைக்காக நிறுவிவிட்டுச் சென்றவர்கள் பெல்ஜியம் நாட்டுக்காரர்கள். செலவு, சுமார் இருபத்தைந்து கோடி.

இத்தனை செலவில் இதை நிறுவ வேண்டிய அவசியம் என்ன? ஒரு ஷிப்டுக்கு இருபத்தைந்து ஊழியர்கள் வீதம் மூன்று ஷிப்டுகளிலும் 75 ஊழியர்கள் வேலை பார்த்தாலே போதும்; ஒருநாளைக்குக் குறைந்தபட்சமாகச் சுமார் பன்னிரண்டு லட்சம் தபால்களை ஊர்வாரியாகப் பிரித்துக் கட்டுகளாகக் கட்டித் தள்ளிவிட முடியும் என்பதுதான். இதனால் தபால்கள், செல்ல வேண்டிய இடங்களுக்குத் தாமதமில்லாமல் சென்றுவிடும் என்கிற நல்ல நோக்கம்தான்.

ஆனாலும் கடந்த ஜனவரி இறுதியில் நிறுவப்பட்ட இந்த இயந்திரம் இன்னமும் ஒரு நாளைக்குச் சுமார் நான்கு லட்சம் தபால்களை மட்டும்தான் பிரித்துக் கொண்டிருக்கிறது. சென்னை நகரம் என்பது ஒருநாளைக்குச் சுமார் இருபது லட்சம் தபால்கள் வந்து போகிற இடமாக இருந்தும் கூட, இன்னமும் இந்த இயந்திரம் பிரித்துக் கொண்டிருப்பது வெறும் நான்கு லட்சம்தான் என்பது, யானையைக் கட்டி குப்பை

குப்பை வண்டியிழுக்க யானை வாங்கிய அரசு!

வண்டி ஓட்டுகிற வேடிக்கைதான்!

காரணம் என்ன?

ஒரு விஷயம் முழுக்க முழுக்க இயந்திரமயமாக்கப்படுகிறது என்றால், அதற்கு ஏகப்பட்ட முன்னேற்பாடுகள் தேவைப்படுகின்றன. அந்த முன்னேற்பாடுகளைச் செய்யாமல், இயந்திரமயமாக்கினால், அந்த இயந்திரத்தின் முழுப்பயனையும் நாம் பெற முடியாது என்பதற்கு இந்த பிரும்மாண்ட இயந்திரமே சரியான சாட்சி.

அதாவது, இந்த இயந்திரம்,



தபால்களின் அளவு எப்படியிருந்தாலும் ஏற்றுக் கொள்ளாது. போஸ்ட் கார்டு என்றால் தபால் ஆபீஸில் விற்கப்படுகிற போஸ்ட் கார்டு அளவில்தான் இருக்க வேண்டும். இன்லேண்ட் லெட்டர் என்றால் ஒருபுறம் மடிக்கப்பட்டு, மற்ற மூன்று புறமும் முழுமையாக ஒட்டப்பட்டதாக இருக்க வேண்டும். தபால் உறைகள் என்றால் குறைந்தபட்சம் 9X14 செ.மீட்டர்கள் நீள அகலம் கொண்டதாகவும் அதிகபட்சம் 16.2X25.5 செ.மீட்டர்கள் நீள அகலம் கொண்டதாகவும்தான் இருக்க வேண்டும்.

முகவரியில் பின்கோடு எழுதப்பட்டிருப்பது மிக மிக அவசியம். பின்கோடு முடிய முகவரி எழுதப்பட்ட பிறகும் அதற்குக் கீழே குறைந்தபட்சம் 15 மி. மீட்டர் காலியிடம் இருக்க வேண்டும். அப்போதுதான் பின்கோடுகளை பார்கோடுகள் என்கிற கம்ப்யூட்டர் பாஷையாக்கிப் படித்து ஊர்வாரியாகப் பிரிக்க முடியும்.

தனியார்கள் விற்கிற தபால் உறைகளின் காகிதத் தரம் நல்லபடியானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மணிக்கு அறுபதாயிரம் தபால்கள் என்கிற வேகத்தில் பிரிக்கப்படுகிறபோது அவை கிழியாமல் இருக்கும்.

இப்படி தபால் உறைகளின் நீள அகலங்கள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்ட அளவில் இருந்துவிட்டால் போதுமா? போதாது. ஒட்டப்பட்ட தபால் உறைகளின் கனம் குறைந்தபட்சம் 0.16 மில்லி மீட்டரிலிருந்து அதிகபட்சமாக 5 மி. மீட்டர் வரைதான் இருக்க வேண்டும். அதன் எடை, குறைந்தபட்சம் 3.27 கிராமிலிருந்து அதிகபட்சம் 50 கிராம் வரையில்தான் இருக்கலாம்.

> “இதன் பட்ஜெட் இருபத்தைந்து கோடி ரூபாய். டெலிபோன் மாதிரி இதிலும் தமது சொந்த வீட்டில் மணியடிக்கத்தான் சுக்ராம் அவசரப்பட்டாரோ?”

இவற்றோடு இன்னொரு முக்கியமான விஷயமும் உண்டு. அதுதான், தபால் உறைகளுக்குத் தகுந்தபடி தபால்களை மடித்துப் போடுகிற விஷயம். அதாவது அங்கீகரிக்கப்பட்ட அளவுகளிலான தபால் உறைகளாக இருந்தால் மாத்திரம் போதாது; அவற்றின் உள்ளே போடுகிற தபால்களை, அந்த உறைகளுக்குள் போடுகிறபோது, எட்டாக பத்தாக என்று தங்களிஷ்டத்திற்கு மடித்துப் போடக் கூடாது. அந்த உறை முழுவதும் அந்தத் தபால் பரவியிருக்கிற மாதிரி மடித்துப் போடுகிறபோதுதான் இயந்திரத்தால் பிரிக்க முடியும். கூடவே ஸ்டேப்ளர், மற்றும் பின்கள் போன்ற எதையும் தபால்களில் உபயோகிக்கக் கூடாது. அதுவும் இயந்திரத்துக்கு எதிரி.

சென்னை நகரில் வந்து போகிற சுமார் இருபது லட்சம் தபால்களில், சுமார் பதினாறு லட்சம் தபால்களில் மேற்சொன்ன விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படாத காரணத்தால்தான் அவற்றை இந்தத் தானியங்கி பிரும்மாண்ட இயந்திரத்தால் பிரிக்க முடியாமல் போகிறது. ஒரு நாளைக்குப் பன்னிரண்டு லட்சம் தபால்களைப் பிரிக்க வேண்டிய இயந்திரம், வெறும் நான்கு லட்சத்தை மாத்திரம் பிரித்துக் கொண்டிருக்கிறது!



"தலைவர் தார்மீக கோபத்துல இருக்கார்!"

"ஏன், என்ன விஷயம்?"

"அவரோட போஸ்டர்ல 'தார்' பூசிட்டாங்களாம்!"

— அம்பை தேவா



"முகத்தை மாற்ற பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணின டாக்டர் என்னை ஏமாத்திட்டார்!"

" 'பிளாஸ்டிக் போர்ஜரி'ன்னு சொல்லுங்க!"


- அம்பை தேவா

"மாசம் நாலாயிரம் ரூபாய் சம்பளத்தில் அந்த பைனான்ஸ் கம்பெனியில் வேலை கிடைச்சிருக்கு!"

"என்ன வேலை?"

"டெபாசிட்டை திரும்பக் கேட்பவர்களை நாலு தட்டுத் தட்டணும்... அவ்வளவுதான்!"

— உ.. ராஜாஜி



இந்த இயந்திரம் வாங்கப்படுவதற்கு முன்பே அரசு என்ன செய்திருக்க வேண்டும்? இந்த இயந்திரத்துக்கான முன்னேற்பாடுகளாகத் தனிப்பட்ட முறையில் தபால் உறைகள் தயாரிப்பவர்களை அழைத்து விஷயத்தைச் சொல்லி, அதன்படி தபால் உறைகளைத் தயாரிக்கச் சொல்லி வற்புறுத்தியிருக்க வேண்டும். விளம்பரங்களின் மூலம் பொதுமக்களுக்கும் இந்த இயந்திரம் பிரிப்பதற்கு வசதியான முறைகளில் எப்படியெப்படியெல்லாம் தபால்களை மடித்து உறையிலிட வேண்டும்; முகவரிகளை எப்படி எழுத வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்க வேண்டும்.

ஆனால், அரசு இவற்றில் எதையுமே இயந்திரம் வாங்குவதற்கு முன்பு செய்யவில்லை. வாங்கப்பட்ட பிறகுதான் அதிகாரிகள் தங்களால் முடிந்த அளவுக்கு, ஏராளமாகத் தபால்கள் போஸ்ட் செய்யும் வங்கிகள், எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களை அழைத்து, 'தயவுசெய்து எங்கள் இயந்திரம் பிரிக்கிற மாதிரியான முறைகளில் உங்கள் தபால்களை அனுப்புங்கள்' என்று வேண்டுகோள் விடுக்க, அவர்களும் 'நாங்கள் ஏற்கெனவே ஏகப்பட்ட கவர்களை அச்சடித்து வைத்து விட்டோம். இனி அச்சடிக்கிறபோது அதன்படியே செய்கிறோம்' என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். விளம்பரங்களின் மூலம் பலருக்கும் சொல்லலாம் என்றால் அதற்கு நிதி ஏதும் இதுவரை ஒதுக்கப்படவில்லை.

தனியார் நிறுவனங்கள் ஒருபுறம் இருக்கட்டும்; தபால் துறையே வெளியிடுகிற மணியார்டர் கூப்பன்களை இந்த இயந்திரத்தால் பிரிக்க முடியாது. காரணம், அதன் அளவு. இந்த இயந்திரத்துக்குத் தகுந்தபடியான அளவில் இனிமேல்தான் புதிய கூப்பன்களை தபால்துறை அச்சடிக்க வேண்டும்!

சுமார் இருபத்தைந்து கோடிக்கான இந்த இயந்திரத்தை வாங்கி, அதன் திறனில் மூன்றில் ஒரு பங்கை மாத்திரம்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்றால் அது தபால் துறைக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிற விஷயமல்லவா?

இப்படிப்பட்ட தவறு ஏன் நடந்தது?

இத்தனை கேள்விகளுக்கும் பதிலாக நமக்கொரு சந்தேகம் வருவதைத் தவிர்க்க முடியவில்லை. காரணம் சுக்ராம்! அவர் அமைச்சராக இருந்தபோதுதான் இந்த இயந்திரம் நிறுவப்பட்டது. இதன் பட்ஜெட் ஏறத்தாழ இருபத்தைந்து கோடி ரூபாய் என்பதால், டெலிபோன் மாதிரி இதிலும் தமது சொந்த வீட்டில் மணியடிக்கத்தான் அவசரப்பட்டாரோ என்னவோ, யார் கண்டது?

— இளங்கோவன்

'அமுதசுரபி' வெளியீட்டாளர்கள்
ஸ்ரீராம் டிரஸ்டும் வெல்வெட் இண்டர்நேஷனல்
மெமரி பிளஸ் நிறுவனத்தாரும் இணைந்து வழங்கும்

அமரர் சின்னிகிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி 1996

மொத்தப் பரிசு ரூ. 14,000/-

முதற் பரிசு	ரூ. 5000/-
இரண்டாம் பரிசு	ரூ. 3000/-
மூன்றாம் பரிசு	ரூ. 2000/-

தேர்ந்தெடுக்கப்படும் 8 சிறுகதைகளுக்கு ரூ. 500 வீதம் சிறப்புப் பரிசு ரூ. 4000/-

நிபந்தனைகள்

1. இந்தச் சிறுகதைப் போட்டியில் அனைவரும் கலந்து கொள்ளலாம். ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
2. கதை 'அமுதசுரபி'யில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதவாறு இருத்தல் வேண்டும். (முழு வெள்ளைத் தாளில் பத்து பக்கங்களுக்கு மேற்படாமல்) சரித்திரம், சமூகம், நகைச்சுவை என எந்த வகைக் கதையையும் எழுதலாம்.
3. எழுதுபவரின் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். மொழி பெயர்ப்பாகவோ, தழுவலாகவோ, மற்றவர்களின் சொந்த வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாகவோ இருக்கலாகாது.
4. கதைகளைச் சுருக்கவும், கதைத் தலைப்புகளை மாற்றி அமைக்கவும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.
5. பரிசு பெற்ற கதைகளின் பூரண காபிரைட் உரிமை 'அமுதசுரபி' வெளியீட்டாளர்களைச் சாரும்.
6. முழு வெள்ளைத் தாளில் தெளிவான கையெழுத்தில், ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும். பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் கதையைத் திரும்பப் பெற, கதையுடன் போதிய தபால் தலை இணைக்க வேண்டும்.
7. போட்டிக்கான சிறுகதைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 31.10.96 முடிவு தேதி எக்காரணம் கொண்டும் மாற்றப்பட மாட்டாது.
8. போட்டி சம்பந்தமாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ள இயலாது.
9. ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

'அமரர் சின்னிகிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி 1996' என்று மேல் உறையின் மீது குறிப்பிடவும்.

சிறுகதைப் போட்டி - 1996

மொத்தப் பரிசு ரூ. 14,000/-

முடிவு தேதி : 31.10.96

சிறுகதைகள் அனுப்ப வேண்டிய முகவரி :

'அமுதசுரபி'
த.பை. எண் . 5043
145 லிங்கச் செட்டி தெரு, சென்னை - 600 001.

உறவின் பட்டு இழைகள்

ஷாராஜ்

தலையைக் கோதிவிடும் ஸ்பரிசத்திலோ உதடுகளில் மென் முத்தம் பதிவதிலோ விழிப்பதாயிருக்கும். சில நேரம் இது தவறிப்போய் 'காப்பி ரெடியா?' எனக் குரல் எழுப்பினால் அவர்கள் குரலைத் திருப்பி அனுப்பி முகத்தில் மோத வைக்கும். ஒருவழியாக அன்றாடக் காலை நிகழ்வுகள் முடிந்து, டிபன் பாக்ஸை தோல் பையில் உள்ளடக்கி செருப்பணியும் போது கூட வழியனுப்பும் முக மலர்ச்சிக்காகக் கண்கள் உள்ளறையைத் தேடும்.

மாலையில் திரும்பின பிறகும் இதே அவஸ்தை. பகல் இரவென்று என் நாட்கள் சுழன்று, மீண்டும் மீண்டும் வெறுமையைக் காட்டின.

எனக்காவது பரவாயில்லை. சீக்கிரத்தில் பழகி விட்டது. அப்பாவைத்தான் வெகு நாளைக்கு சரிப்படுத்த முடியாமல் போயிற்று.

எதைச் சரிப்படுத்த? எல்லாம் சரியாகத்தானே இருந்தது. ஒன்றரை வருடத்தில் ஏதாவது தவறியதுண்டா? அப்பாவுக்கு ஸ்வீட்னர் கலந்தும், எனக்கு சர்க்கரை கலந்தும் பெட் காப்பியில் துவங்கி, அவருக்கு மாத்திரைகளும் எனக்கு ஒரு தம்ளர் பாலுமாய் இரவு முடிகிற வரையில்.

அப்பாவால் இதைத் தாங்கிக் கொள்ள முடிந்தது என்பது கூட ஆச்சரியம்தான். இழப்பைத் தாங்க முடியாமல் போகிற பந்தத்துக்கு ஆயுசு பரியந்தம் தேவையா என்ன? அடுக்களைக்குள் பதுங்கிப் பதுங்கிப் போய் தீப்பெட்டியோ, டப்பாக்களில் வைத்திருக்கிற நொறுக்குத் தீனிகளில் சிறு இனிப்புத் துண்டையோ எடுத்துவிட்டு, வெளியே வந்து முழிக்கிறாரே இப்பவும்? அப்பாவுக்கு சர்க்கரை வியாதி உண்டு. புகைக்க வேண்டாம் என்றும் டாக்டர் சொல்லியிருக்கிறார். அவரைத் தடுக்க ஜோதி இல்லை.

அதிகாலை ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்து, ஆறு மணிக்கு வாக்கிங் போகிறவர் அப்பா. முனிசிபல் ரோடு தாண்டி சிலபோது வடக்கே ரயில்வே ஸ்டேஷன் வரையிலோ, தெற்கே எம்.ஆர்.எஸ். தியேட்டர் வரையிலோ நடந்து திரும்புவார். வழியிலேயே ஒரு சிகரெட் பிடித்து விடுவார். வரும்போது ஒன்றிரண்டு அவரது ஜிப்பாப் பாக்கெட்டில் தூள்களை உதிர்த்தபடி கிடக்கும். பாத்ரூமில் திருட்டு தம் அடிப்பார். அவரது சுய சம்பாத்தியத்தில் அறுபத்து ஏழில் கட்டிய வீடு. பாத்ரூம், லெட்ரீன் எல்லாம் கொல்லைப்புறத்தில். சமையலறையின் குழம்பு வேகிற மணத்தையும் மீறி, அத்தனை தூரத்தில் இருந்து வரும் சிகரெட் புகையை ஜோதி நுகர்ந்து விடுவாள்.

"அப்பா... இன்னைக்கு ரெண்டு கொடம் தண்ணி..." அவள் குரல் இங்கிருந்து போகும்.

"அய்யோ... இல்லம்மா. இது வேற. நான் இல்ல. நம்ம பஞ்சாட்சரம் ஸார்தான் அவர் வீட்டுத் தோட்டத்திலிருந்து ஸ்மோக் பண்றார்" பாத்ரூம் பதில் சொல்லும்.

"சிகரெட் வாசத்துக்கும் சுருட்டு வாசத்துக்கும் வித்தியாசம் தெரியாதா என்ன? நீங்க குளிச்சிட்டு வாங்க சொல்றேன். டிபன் சாப்பிடறதுக்கு முன்னாடியே தண்ணி சொமக்க வெக்கறேன்."

அப்படியொரு தண்டனையை விதித்திருந்தாள் ஜோதி. சிகரெட் பிடித்தால் தெருமுனை குழாயடியிலிருந்து இரண்டு குடம் தண்ணீர் சுமந்து வர வேண்டும். எனக்குத் தெரிந்து இந்தத் தண்டனை நிறைவேறியதோ, அப்பா சிகரெட்டை வீட்டுக்குள்ளாவது தவிர்த்ததோ இல்லை. ஆனால் இந்த சம்பாஷணைகள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன.

"நீ எதுக்கும்மா ஜோதி. இங்கேயே இரு. என்னென்ன வேணுமோ லிஸ்ட் போட்டுக் குடு. நான் வாங்கிட்டு வந்துர்றேன்."

"இல்லப்பா, நானும் வர்றேன்."

"உனக்கெதுக்கும்மா சிரமம்?" என்றாலும் விட மாட்டாள். அப்பாவும் அவளுமாக மார்க்கெட்டுக்கு நடந்து போய், மளிகை சாமான்களையும் காய்கறிகளையும் சுமக்க மாட்டாமல் சுமந்து வருவார்கள். கனம் கூட இருந்தால் ஆட்டோவில்.

வெளியே போய்விட்டு களைப்பாக வந்து அமர்ந்ததுமே அவர், "ஜோதி... ஒரு சொம்பு தண்ணி எடுத்துட்டு வாம்மா" என்பது இப்போதும் ஏதாவது சில நாட்களில் கேட்கிறது. நான் எடுத்துப் போனால் நிமிர்ந்து பார்த்து வாங்கிவிட்டு, குடிக்காமல் தரையை வெறித்துக் கொண்டு இருப்பார் சற்று நேரமாவது.

அவரது காரியங்கள் பலவும் ஜோதியின்றி சரிவர நடந்ததில்லை. அப்பா போயி குளிங்க, அப்பா சாப்பிட வாங்கப்பா, மாத்திரை சாப்பிட்டீங்களாப்பா, ஏன்ப்பா இன்னும் ஷேவ் பண்ணாம இருக்கீங்க என்று ஒவ்வொன்றையும் ஞாபகப்படுத்துகிறவள் அவள்.

அது என்னவோ ஜோதி தனது மாமனாரை அப்பா என்றே கூப்பிட்டாள். என்னைத்தான் மாமா என்பாள்.


இதோ இந்த ஜன்னல் கம்பிகளைப் பற்றியபடி, சாய்ந்திறங்கும் கோடை மழைத் தூறலில் கிளம்பின மண் வாசனையை அவள் முகர்ந்து ரசித்தது இன்னும் நினைவிருக்கிறது. ரசிப்பதோடு நிற்காமல் வலது காலை விந்தியபடியே வெளியே போய் துளிகள் விழுந்த மண்ணை எடுத்துக் கொஞ்சம் போல வாயில் போட்டுக் கொள்ளவும் செய்தாள். உதட்டைப் பிதுக்கிச் சுவைத்து மண்ணை சப்புக் கொட்டியபடியே வந்தவளை நிலைப் படியில் வைத்துப் பிடித்துக் கொண்டேன்.

"ஏய்... என்ன இது, சின்னப் புள்ளையாட்டம். துப்பு..."

தலையசைத்து மறுத்தாள். பிடித்து இழுத்து கன்னத்தில் மெல்ல அடித்து, உதட்டைச் சுண்டி துப்ப வைக்க வேண்டியதாயிற்று. இத்தனையும் செய்த பிறகு, "ச்சே. ரொம்ப மோசம்ப்பா நீங்க" என்று சொல்லி கண்ணைக் கசக்கினாள். விளையாட்டாகத்தான்.

கல்யாணம் முடிந்து வருகிறபோது ஆரத்தி எடுத்த உறவுக்காரப் பெண் ஒருத்தி, "வலது காலை..." எனத் துவங்கித் தயங்கினபோது ஜோதியின் கண்களில் ஒரு வலியைப் பார்க்க முடிந்தது. என் சமாதானங்களை மீறி, "என்னோட திருப்திக்காக" என முதலிரவறையில் அவள் அழுத கண்ணீரின் வெம்மை இன்னும் என்னுள் தணிந்திருக்கவில்லை.

என் மனசறிய அதன் பிறகு அவள் அழும்படியாக எதுவும் நேரவில்லை இந்த வீட்டில். எங்கள் பக்கத்து ஆபீஸில் வேலை



பார்த்த அவளை சில மாதப் பழக்கத்திலேயே பிடித்துப் போய், என் விருப்பத்தைச் சொல்லி, இரண்டு வீட்டினரின் சம்மதத்துடன் திருமணம் செய்து... எல்லாம் நல்லபடியாகத்தான் முடிந்தது. அதற்குப் பிறகும் கூட எல்லாம் நல்ல படியாகத்தானே இருந்தது?

"நாலு கொழந்தைகளாவது பெத்துக்கணும் மாமா. நம்ம வீடே நெறைஞ்சு... கலகலப்பா இருக்கணும். எந்நேரமும் குழந்தைகளோட அழுகைச் சத்தமும் குறும்புத்தனமுமா நெறைஞ்சு இருக்கணும்."

முடியவில்லை. ஒன்று பிறந்தது. அதன் முதல் அழுகையைக் கேட்டபடியே என் ஜோதி போய் விட்டாள். இப்போது அந்தக் குழந்தையின் அழுகைகள் அதன் தாய் வழிப் பாட்டியின் வீட்டைத்தான் நிறைத்துக் கொண்டிருக்கிறது. பச்சைக் குழந்தையை கவனித்துக் கொள்ளும்படி இங்கே வேறு யார் இருக்கிறார்கள்? பிறந்தது முதலே அதற்கு பாட்டிதான் என்றாகிவிட்டது.



• வாழப்பாடியார் வீட்டில், மாடியில் உள்ள பார்வையாளர்களைச் சந்திக்கும் அறையில் வாசலை மாற்றி வைத்திருக்கிறார்கள். "நான் வெளிநாடு சென்றபோது, எனது தொழிலதிபர் நண்பர் ஒருவர் என் கவனத்துக்குக் கொண்டு வராமல் வாஸ்து சாஸ்த்திர அடிப்படையில் வாசலை மாற்றி வைக்க ஏற்பாடு செய்து விட்டார்" என்கிறார் வாழப்பாடியார்.

— கௌசல்யா

இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவையாவது போய்ப் பார்த்துவிட்டு வருவேன். அப்பா எப்போதாவது வருவார். அவருக்குப் பேரன் மேல் ஏதாவது மனத்தாங்கல் இருக்குமோ என்று சந்தேகம். எத்தனை படித்தாலும் தர்க்கம், தத்துவம் என்று தெரிந்தாலும் சில நம்பிக்கைகள் அல்லது மூடத்தனங்களை விட்டொழிக்க முடியவில்லை. தாயைத் தின்ற குழந்தை என என் மகனை அவரும் நினைக்கிறாரோ?

நான் கேட்டதில்லை. அது நல்லது என்றே படுகிறது. மனதுக்குள் மறைந்து கிடக்கிற விஷயத்தை வெளிக்காட்டுவது அவருக்கும், தெரிந்து கொள்வது எனக்கும் மிகுந்த வேதனையை உண்டாக்கி விடக்கூடும்.

மாமனாரின் ஊருக்குப் போய் வந்தால் 'எப்படி இருக்குது கொழந்தே?' என்று கேட்பார். ஏதோ கேட்கணுமே என்று. சொல்கிற பதிலை சிரத்தையாகக் கேட்கிறாரோ இல்லையோ, கடமைக்குச் சொல்லி விடுவது.

இது மாதிரி சமயங்களில்தான் ஜோதியின் மரணம் எத்தனை தூரம் எங்களை பாதிக்கிறது என்று புரிகிறது. அம்மாவை என் இருபத்தோராவது வயதில் இழந்த பிறகு எனக்கும் அப்பாவுக்குமான உறவில் நெருக்கம் கூடியிருந்தது. எனக்கு அவரும் அவருக்கு நானும் மட்டுமாக இருந்ததில் அந்தப் பிணைப்பு வலுவடைந்தது. எனக்கு வேண்டியதைச் செய்து கொடுப்பதும் என் விருப்பங்களை நிறைவேற்றுவதும் தான் அவரது முக்கிய காரியங்களாக இருந்தன.

பென்ஷன் காலத்தில் ஒற்றை உயிராக இந்த வீட்டுக்குள் அவர் கழித்த பகல் நேரங்களின் ரணங்கள் இப்போது மீண்டும் துவங்கியிருக்கின்றன. இந்த ஐந்து மாத காலமாக.

வழக்கம் போலக் குழந்தையைப் பார்த்து வர இந்த ஞாயிறிலும் புறப்பட்டேன். பழங்களும், குழந்தைக்கு லேக்டோஜென்னும் வாங்கிக் கொண்டு. சுருண்ட தலைமுடியும் விரல் சப்பும் வாயுமான குழந்தையை மடியில் கிடத்தியிருக்கும்போது மாமனார் வந்து பக்கத்தில் அமர்ந்து கொண்டார். கையில் ஏதோ கவர் இருந்தது.

"விசாலியும் மாப்பிள்ளையும் போன செவ்வாக்கிழமை வந்திருந்தாங்க மாப்ளே..."

"கொழந்தைங்க வல்லியா?"

"இல்ல. இவங்க மட்டும்தான் வந்தாங்க."

அவர்களின் நலம் விசாரித்த பிறகு குழந்தையை வேடிக்கை காட்டிச் சிரிப்பூட்ட முயன்று கொண்டிருந்தேன். இவர்கள் இருவருக்கும் இந்தக் குழந்தையால் எத்தனை கஷ்டம்? பச்சைக் குழந்தையை தாய்ப்பால் இல்லாமல் வளர்ப்பதே பாடுதான். தாயே இல்லாமல் வளர்ப்பது என்றால்? அதுவும் இதைப் பார்க்கும் போதெல்லாம் ஜோதியின் நினைவு வந்து விடுமே. அவள் ஜாடையை அப்படியே கொண்டல்லவா பிறந்திருக்கிறது இது?

எனக்கும் குழந்தையைப் பார்த்துவிட்டுப் போனால் இரண்டு மூன்று நாட்களுக்கு எதிலும் பிடிப்பற்றுப் போகிறது. இதற்கு பயந்தே தான் வாராவாரம் வருவதைத் தவிர்ப்பது. இன்னும் ஒரு வாரம் கூடும்போது துயரம் கொஞ்சம் குறையுமே?

விசாலி ஏதாவது காரியமாக வந்தாளா என்று தெரியவில்லை. அவளும் கணவனுமாக வந்திருக்கிறார்கள், அதுவும் குழந்தைகள் இல்லாமல் என்றால் ஏதாவது காரியமாகத்தான் இருக்கும். அவரே சொல்லட்டும் என்று விட்டுவிட்டேன்.

ஜோதிக்கு இளையவளானாலும் விசாலிக்குத்தான் முதலில் திருமணம் ஆனது. எங்களின் திருமணத்துக்கு மூன்று வருடங்கள் முன்னமேயே. அழகாக இருந்தாலும் ஜோதிக்கு குறையும் வேறு உண்டல்லவா. அதனால் வரதட்

சனை அதிகம் எதிர்பார்த்தார்கள். அல்லது பையனுக்கும் ஏதோ குறை இருந்தது. போதாக் குறைக்கு அவள் வேறு, எனக்குக் கல்யாணமே வேண்டாம் என்று வெறுத்திருந்தாளாம். இதெல்லாம் பிற்பாடு ஜோதி சொல்லித் தெரிந்தது எனக்கு.

"இதக் கொஞ்சம் பாருங்க..." கவரிலிருந்து உருவின போஸ்ட் கார்ட் சைஸ் ஃபோட்டோ ஒன்றை நீட்டினார் மாமனார்.

வாங்கிப் பார்த்தேன். இளம்பெண்தான். முகத்தில் இருந்தது வயதுக்கு மீறின முதிர்ச்சி போலத் தெரிந்தது.

"சின்ன மாப்பிள்ளை வகைல சொந்தம் இந்தப் பொண்ணு. அவருக்கு அத்தை மக மொறை ஆகுது. ஜாதகமும் கையோட குறிச்சுக் கொடுத்திருக்கறாங்க. குடுத்துட்டு விவரமும் சொல்லிட்டுப் போகலாம்னுதான் நேர்ல வந்தாங்களாம்."

"நாந்தான் மொதல்லயே சொல்லிட்டனே மாமா, இன்னொரு கல்யாணம்ங்கற பேச்சுக்கே எடமில்லைன்னு?" என்றபடி ஃபோட்டோவைத் திருப்பிக் கொடுத்தேன்.

"இந்தக் கொழந்தய நெனச்சுப் பாருங்க மாப்ள. எங்களுக்கு தெடம் இருக்கற வரைக்கும் நாங்க பாத்துக்குவம். அதுக்குப் பிறகு...? உங்களுக்குத்தான் இப்ப என்ன. கல்யாணமாயி ரெண்டு வருசம் கூட முடியல. அதுக்குள்ள போயிச் சேந்துட்டா மகராசி. அவளுக்குக் கொடுப்பினை இல்ல. இப்படி ஒரு மனுசரோட ஆயுசு முழுக்க வாழுறதுக்கு எத்தனையோ புண்ணியம் செஞ்சிருக்கணும். அவ செஞ்ச புண்ணியம் அவ்வளவுதான். ப்ச்... போனவளைப் பத்தி பேசி இனி என்ன பிரயோஜனம். நடக்கறதைப் பார்ப்போம். இது உங்கப்பா பாத்து செய்ய வேண்டிய காரியம். பாவம், அவரு உங்களுக்கு மேல ஜோதின்னா உயிரா இருந்தாரு. சரி, அதனால என்ன? யாரு செஞ்சாலும் ஒண்ணுதான்."

நான் பேசாமல் இருந்தேன். மாமியாரும் உள்ளிருந்து வந்து எங்களுக்குச் சற்றுத் தள்ளி தரையில் அமர்ந்து கொண்டார்.

"உங்களுக்கு எத, எப்படி சொல்லிப் புரிய வெக்கறதுன்னே தெரியலை மாமா. என் வாழ்க்கைல ஜோதி ஒருத்திக்குத்தான் எடம். அவ இப்ப உயிரோட இல்லங்கறதுனால அந்த எடம் காலியாயிருச்சுன்னு ஆயிருமா. இல்ல ஜோதியோட எடத்துல இன்னொருத்தியத் தான் வெச்சுட முடியுமா?"

"அதுக்காக, காலம் பூரா இப்படியே இருக்கணும்ங்கறீங்களா? ஒருத்தர் போயிட்டா அதுக்காக மத்தவங்களும் கூடப் போயிடறமா. இல்ல, சோறு தண்ணி எதுவும் வேண்டாம்னு கெடந்துர்றமா. இப்ப நாங்க நிக்கலையா, மகளப் பறி கொடுத்துட்டு."

"அவ போனது கூடப் பெரிசாத் தெரியல. இப்ப இவரு இருக்கற கோலத்தைப் பார்த்தா..."


• செங்குட்டுவன்

◆ தி.மு.க. ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்களுக்கு மேலாகியும், அறநிலையத் துறை அமைச்சர் செங்குட்டுவன் உட்பட நான்கு அமைச்சர்களுக்கு குடியிருக்க வீடுகள் இன்னமும் ஒதுக்கப்படவில்லை. ஆதலால் அவர்கள் கெஸ்ட் அவுஸில்தான் தொடர்ந்து இருக்கிறார்கள். அமைச்சர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் நீதிபதிகளுக்கு ஒதுக்கப்பட்டதால்தான், இந்தத் தட்டுப்பாடு. இப்போது இருக்கும் சூழ்நிலையில் நீதிபதிகளை காலி பண்ணச் சொல்லும் தைரியம் எந்த அரசுக்கும் வராது! 'தனியார் வீடுகளைப் பார்த்துக் கொள்ளுங்கள்; நாங்கள் வாடகை தருகிறோம்' என்று வீடு கொடுக்கப்படாத அமைச்சர்களுக்கு அரசு சொல்லியிருக்கிறது. ஆனால் பிரச்னை என்னவென்றால், 'அரசியல்வாதிகள், அமைச்சர்கள்' என்றாலே வீட்டை வாடகைக்கு விடப் பலர் தயங்குகிறார்களாம்!

– சென்னையார்

என்று மாமியார் எங்கோ பார்த்துச் சொன்னார். குறைந்தபட்சம் ஒரு மாத தாடியை ஷேவ் செய்து விட்டாவது வந்திருக்கணும் என்று தோன்றியது.

"இவ உங்களைப் பத்திப் பேசாத நாளில்ல மாப்பிள. சின்ன மாப்ளகிட்ட நான் பேசறதுக்கு முன்னாடியே இவளும் விசாலிகிட்ட சொல்லி வெச்சுட்டா. அதுக்கப்புறம்தான் அவங்க பாத்துட்டு வந்தது."

எனக்கும் அவர்களுக்குமான விவாதம் நீண்டுகொண்டே போனது. இடையில் குழந்தை அழவே, மாமியார் வந்து எடுத்துப் போனார். குழந்தையின் அழுகையைச் சமாதானப்படுத்தி நிறுத்திவிட்டு, மாமியார் சொன்னார்:

"தாயோ புள்ளையோ, ஒரு உசுருதான் பொழைக்கும்னு டாக்டர் சொன்னாரு. அதுக்கு முன்னாடியே ஜோதி சொல்லிட்டா. வலியால துடிச்சுட்டே, 'நான் பொழைப்பேன்னு எனக்கு நம்பிக்கை இல்லம்மா. பொறக்கப் போற கொழந்த எங்க வீட்டுல மூணாவது கொழந்தைதான். இன்னும் இரண்டு பெரிய கொழந்தைங்க இருக்குது. அவங்களுக்கும் ஒரு நல்ல வழிய ஏற்பாடு செய்யுங்க'ன்னு."

திரும்பிப் பார்த்தபோது சேலைத் தலைப்பால் வாயைப் பொத்தியபடி மாமியார் அழுது கொண்டிருப்பது தெரிந்தது. மௌனமாகத் தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்தேன். மாமனார் நெருங்கி வந்து அமர்ந்து என் கைகளைப் பற்றிக் கொண்டார். இரைஞ்சுவது போல. அதுவே எனக்கு ஆறுதல் சொல்வதாகவும் இருந்தது.

நிமிர்ந்து அவரது முகத்தைப் பார்த்தேன். சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல் தொண்டையை அடைத்தது.

மாமனார் தலையை ஆட்டிக் கொண்டார். என் கைகளில் லேசாகத் தட்டிக் கொடுத்தார். அது, நான் சொல்ல வந்ததைப் புரிந்து கொண்டது போல இருந்தது.

டி.வி.யால் சீரழிவா?

— ஒரு காரசார விவாதம்

தொலைக்காட்சியின் ஆதிக்கம் தவிர்க்க முடியாததாகி விட்டது. தூர்தர்ஷன் ஒருபுறமிருக்க, செயற்கைக்கோள் மூலம் ஒளிபரப்பும் தனியார் சானல்களும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. 'நம் கலாசார சீரழிவிற்கும், ஒழுக்கக் குறை விற்கும் இவை முக்கியக் காரணங்களாக விளங்குகின்றன' என்ற குரல்கள் அவ்வப்போது எழுந்து கொண்டிருக்கின்றன. இது எந்த அளவு சத்துள்ள கருத்து? எஸ்.வி. சேகரும், பட்டிமன்றப் பேச்சாளர் பாரதி பாஸ்கரும் இங்கே விவாதிக்கிறார்கள் :



சேகர் : அதிகரித்து வரும் தனியார் சானல்கள் என்பது தவிர்க்க முடியாத விஷயம். சிங்கப்பூரில் கூட 'தெருவில் எச்சில் துப்பினால் அபராதம்' என்பதைச் சட்டம் ஆக்கினப்போ, அதற்கும் தொடக்கத்தில் எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது. இப்போ அவங்களே 'ஊரே அழகாயிருக்கு. தேவையான சட்டம்தான்னு மனசை மாத்திக்கிட்டாங்க. மாறுதல்களை நாம ஏத்துக்கப் பழகணும். கலாசார சீரழிவுன்ற பொய் வார்த்தைகளையெல்லாம் பயன்படுத்தி சத்தம் போடுவது அநாவசியம்.

பாரதி : நீங்க தொழில்நுட்ப முன்னேற்றம்ன்ற கோணத்திலே மட்டும் சொல்றீங்கன்னு நினைக்கிறேன்.

சேகர் : அது மட்டுமில்லே. மேலைநாட்டு நாகரிகம் இங்கு புகுவதும், இங்குள்ள பழக்க வழக்கங்கள் அங்கே அறிமுகமாவதும் சகஜம்னு சொல்றேன். cultural clash என்பது தவிர்க்க முடியாதது.

பாரதி : ஆனால் தொலைக்காட்சிகள் சுவையான தகவல்களைத் தரும், புத்திசாலித் தனத்தை வளர்க்க உதவும் சாதனமாக இருக்க வேண்டாமா? குறைந்தபட்ச சமூகப் பொறுப்பு

கூட அவற்றுக்குத் தேவையில்லையா? என் தோழி ஒருத்தி வேலை மெனக்கெட்டு ஒரு சர்வே எடுத்தாள். அதன்படி ப்ரைம் டைமில் ஒரே வாரத்தில் வெவ்வேறு சானல்களில் 'உயிரே உயிரே' பாடல் 56 தடவைகள் ஒளிபரப்பாச்சாம்!

சேகர் : அது 'பம்பாய்' வெளி வந்த காலமாயிருக்கும்.

பாரதி : அதனால் என்ன? அடுத்த மாதம் லேட்டஸ்ட் படத்தில் ஹிட்டாகும் வேறொரு பாடலை அவ்வளவு முறை ஒளிபரப்பித் தள்ளப் போகிறார்கள்! பொழுது போக்கு என்ற பெயரில்



இப்படி மக்களை மூளைச் சலவை செய்து, அவர்களது பண்பாட்டைச் சிதைத்து நேரத்தையும் வீணாக்குவது ஆரோக்கியமான போக்கு இல்லையே!

சேகர் : இதெல்லாம் புது சம்சாரம் போலத்தான். முதல் பத்து நாள் அவளே கதி என்றிருக்கும் கணவன்; பிறகு தானாக மற்ற விஷயங்களில் கவனத்தைத் திருப்பிக் கொள்வான். தொலைக்காட்சியும் முதலில் இது போன்ற Jolஜக் கொடுத்தாலும், நாளடைவில் ஜனங்க தேர்வு செய்துதான் நிகழ்ச்சிகளைப் பார்ப்பாங்க. அமெரிக்காவிலே 74 சானல்கள் இருக்குதாம். அதனால அமெரிக்கர்களின் வாழ்க்கை முறை மாறினதா நான் நினைக்கல்லே.

பாரதி : நான் ஒத்துக்க மாட்டேன்! அங்கே பள்ளிச் சிறுவர்கள் கூட துப்பாக்கியைத் தூக்கிகிட்டு வன்முறையில் ஈடுபடும் சூழல் உருவானதுக்கு டி.வி.யும் ஒரு காரணம். 'மைக்கேல் மதன காமராஜன்' படம் தொலைக் காட்சியில் வெவ்வேறு சானல்களில் அடிக்கடி ஒளிபரப்பப்பட்டது. நல்ல நகைச்சுவைப் படம். வலிந்து திணிக்கப்பட்ட வன்முறைக் காட்சிகளும் இல்லை. இருந்தாலும் இதிலும் ஒரு காட்சியில் அப்பாவின் தலையில் உருட்டுக் கட்டையால் சாத்தி, அவரை மகன் மயக்கமடையச் செய்வது போல வரும். இளம் பள்ளிச் சிறுவர்கள் ஒரு மூதாட்டியை இதே முறையில் தாக்கி நகைகளைத் திருடியிருக்கிறார்கள். போலீஸ் கேட்டபோது மேற்படி படக் காட்சியைப் பார்த்துத்தான் அந்த ஐடியா வந்தது என்றிருக்கிறார்கள்.

சேகர் : ஜெயப்பிரகாஷ் கூட 'நூறாவது நாள்' படத்தைப் பார்த்துத்தான் அடுக்குக் கொலைகளைச் செய்ததாகச் சொன்னான். அதற்கப்புறம் இந்தப் படம் பல இடங்களில் காட்டப்பட்டு விட்டது. ஏன் வேறு யாருமே

இதைப் பார்த்துவிட்டு கொலையில் ஈடு பட்டதாச் சொல்லலே? ஒருவேளை அப்படி செய்தும் மாட்டிக்கலியா. நூறு கொலை செய் துட்டாலும் பொது மன்னிப்பு வழங்குவதைப் பற்றி யோசிக்கலாம். (சிரிப்பு)

பாரதி : ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளின் தரம் ஒருபுறம் இருக்க, நாள் முழுவதும் ஏதாவது ஒளிபரப்பு என்று ஆகிவிட்டதே கூட சில அடிப்படை பண்பாடுகளைக் காற்றிலே பறக்க விட்டிருக்கு. விருந்தாளிகள் வந்தாக்கூட, பண்பில்லாமல் அரைக்கண்ணால் டி.வி.யை யும், அரைக்கண்ணால் வந்தவரையும் பார்த் துப் பேசுகிறோம்.

சேகர் : அது அவங்கவங்களோட மனோ பாவத்தைப் பொறுத்த விஷயம். டி.வி. இல் லேன்னா பக்கத்து வீட்டு சண்டையில கவனமா இருந்துக்கிட்டு பாதி ஜன்னல், பாதி விருந்தாளின்னு இருப்பாங்க.

பாரதி : நீங்க வாதத்துக்காகச் சொல்றீங்க.

சேகர் : அப்படியில்லே! என் வீட்டில் டி.வி. பார்க்கும்போது விருந்தினர்கள் வந்தா, உடனே டி.வி.யை ஆஃப் செய்திடுவேன். இல்லேன்னா அவரை வேற அறைக்கு அழைச்சுகிட்டுப் போயிடுவேன்.

பாரதி : எல்லா வீட்டிலேயும் இப்படி யொரு வசதி இருக்கணுமே?

சேகர் : இது அறைகளின் எண்ணிக் கையைப் பொறுத்த விஷயமில்லை. சமூகம் கெடுதுன்றதெல்லாம் சரியில்லே. தனிப்பட்ட வர்கள் சுயகட்டுப்பாட்டோடு இருந்தால், அதுவே போதுமானது. என்னை எடுத்துக் குங்க. நான் இதுவரை ஸ்மோக் செய்ததில்லை. குடிச்சதில்லை. நான்-வெஜ் சாப்பிட்டதில்லை. இதுக்கு முக்கியக் காரணம் எங்க அப்பாவுக்கு இந்தப் பழக்கமெல்லாம் கிடையாதுன்றது தான். பெற்றோர் குழந்தைகளை ஒழுக்கத் தோடு வளர்த்தா, அவங்களை டி.வி.யாலே சீரழிச்சுட முடியாது.

பாரதி : உங்க குடும்பத்திலே 'Moral fibre' உறுதியானதா இருக்கலாம். உங்க அப்பா ஓர் உதாரணமா இருந்திருக்கலாம்...

சேகர் : என்னையும் மறக்காமச் சேர்த்துக் குங்க. என் குழந்தைகளுக்கும் இந்த ஒழுக்க விஷயத்தில் நான் ஓர் உதாரணமாத்தான் இருக்கேன்.

பாரதி : ஓ.கே... ஆனா பல குடும்பங்களில் இப்படி இருப்பதில்லையே? உறுதியில்லாத இளம் மனங்களைப் பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கெடுக்குதே?

சேகர் : குழந்தைகள் பார்க்கக் கூடாத நிகழ்ச்சின்னா 'டி.வி ஓடிக்கிட்டுதான் இருக் கும். நீ உள்ளே போய்ப் படி'ன்னு கண்டிப்பாக இருக்கணும். எனக்குத் தெரிஞ்ச சில குடும்பங்களிலே குழந்தைங்க படிப்பு கெடும்ன்

'' 'கலர் டி.வி. வாங்கியதில் ஊழல்'என்று குற்றம் சாட்டுகிறார்களே, நான் அவர்களைக் கேட்கிறேன்: இன்று விஞ்ஞானம் வளர்ந்துள்ள சூழ்நிலையில் எங்கள் தலைவர் ப்ளாக் அண்ட் ஒயிட் டி.வி.யிலா ஊழல் செய்ய முடியும்...?''

— பழ. சேதுராமன்

றதுக்காக கேபிள் கனெக்ஷனே கொடுக்கலை. ஒருவேளை படிப்பு கெடாமல் இருக்கலாம். ஆனா தெரிஞ்சிக்க வேண்டிய பல விஷயங் களை அவங்க மிஸ் செய்யறாங்கன்னுதான் படுது.

பாரதி : எதைத் தெரிஞ்சுக்கணும்? டமுக்கு டப்பா பாட்டுக்களையும், பெண்களை ஆபாசமாக வர்ணிக்கும் வரிகளையும் வன் முறைகளையுமா? கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கட்டையால் தாக்கும் காட்சி ஒன்றைச் சமீபத்தில் காண்பித்தார்கள்...

சேகர் : தொலைக்காட்சி என்பது கமர்ஷியலாகிக் கொண்டு வரும்போது, இப்படி தனித்தனி காட்சிகளை சுட்டிக்காட் டுவது சரியில்லை.

பாரதி : இந்த விஷயத்தில் தூர்தர்ஷன் பரவாயில்லை.

சேகர் : உண்மைதான்! வயலும் வாழ்வும், செய்திகளுக்கு அதிக கவரேஜ் எல்லாமே அதில் உண்டு. ஆனால் ஒன்று. இதெல்லாம் நம் வரிப்பணத்தில் தயாரிக்கப்படுபவை. வெளிநாடுகளிலிருந்து நன்கொடை கிடைக் கிறது என்றால் தனியார் சானல்களும் இதை யெல்லாம் தொடங்கிடும்னு நினைக்கிறேன்.

பாரதி : பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் இருக்கட்டும்! அதற்காக ஓர் அடிப்படை பொறுப்புணர்ச்சி கூட இருக்க வேண்டாமா?

சேகர் : நான் GECல் பொறுப்பேற்றி ருந்தபோது, நல்ல, உபயோகமான பல நிகழ்ச்சிகளைத் தயாரிக்கத் திட்டமிட்டேன். ஆனால் பம்பாயில் உள்ள முக்கிய ஸ்பான்ஸர் கள், கொடுக்கும் புள்ளிவிவரம் வேறாக இருக்கிறது. சினிமா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி களுக்குத்தான் அதிகபட்ச ரசிகர்கள் என்கிறது அவர்கள் சர்வே. இந்த நிலையில் என்ன செய்ய முடியும்?

பாரதி : சினிமா நிகழ்ச்சிகளைத் தொகுத் துத் தருவதை ஆட்சேபிக்க முடியாது. ஆனால் மூன்று மணி நேர சினிமாவில் ஆங்காங்கே சில நிமிடங்கள் தோன்றும் விரசங்கள், ஆபா சங்கள் அடங்கிய நடனக் காட்சிகளைப் பொறுக்கியெடுத்து, தொகுத்து அரை மணி நேர நிகழ்ச்சியாக்குவது எந்த விதத்தில் நியாயம்? இதனால் நிச்சயமாக மன விகாரங் கள் வளரும். போதாக்குறைக்கு இந்த நிகழ்ச்சி களைத் தொகுத்து வழங்கும் அறிவிப்பாளர்கள்



சிலரின் கண்ணியக் குறைவான தலையாட்டல்களும் சைகைகளும் வேறு! ஸ்டார் டீ.வி. அது இது என்று ஏகப்பட்டச் சானல்கள். ரிமோட் கண்ட்ரோலுக்கு வாய் இருந்தால் அழும். சுதந்திர தினத்தன்றும் கூட தியாகிகளைப் பற்றிக் காட்டுவதில்லை. குறைந்த பட்சம் 'கப்பலோட்டிய தமிழன்' கூடக் காணோம். இளம் நடிகைகள்தான் உடைந்த தமிழில் அநாகரிக உடைகளில் சுதந்திரம் பற்றிப் பொருத்தமில்லாமல் பேசுகிறார்கள். ராமர் பிள்ளையைப் பேட்டி எடுப்பதை விட தமிழ் பேசவே கஷ்டப்படும் நடிகை ரம்பாவைப் பேட்டி எடுக்கத்தான் தனியார் சானல்கள் போட்டி போடுகின்றன!

சேகர் : ரம்பா அளவுக்கு ராமர் பிள்ளை பாப்புலர் ஆகவில்லையே! 'ராமருக்கு காங்கிரஸ் ஆதரவு' அப்படின்னு நியூஸ் வந்தாலே, இவங்களும் பி.ஜே.பி. வழியிலா'ன்னுதான் கேட்கத் தோணுது. அப்புறம்தான் அது ராமர் பிள்ளைன்னு விளங்குது.

பாரதி : சமீபத்திலே ஒரு தனியார் சானலில் ஆறேழு வயதுச் சிறுவர்களுக்கான போட்டி ஒன்று ஒளிபரப்பானது. 'ஜூலை என்று தொடங்கும் சினிமாப் பாட்டு எது' என்று நடத்துபவர் கேட்க, 'ஜூலை மாதம் வந்தால் ஜோடி சேரும் மனசு' என்று டக்கென்று பாடுகிறான் ஒரு சிறுவன்.

சேகர் : தலைமுறை இடைவெளின்ற விஷயத்தை இதோடு கலக்கக் கூடாது. அப்படியே வச்சுகிட்டாலும் என் பன்னிரண்டாவது வயதில் நான் சைக்கிள் விட்டபோது, என்னை அவசரக்குடுக்கை என்று (பதினெட்டு வயதில் தான் சைக்கிள் விடத் தொடங்கிய) என் அப்பா கருதலாம். அதே சமயம் என் பதினாலு வயது மகன் ஸன்னி ஓட்டுகிறேன் என்றால் 'தொடக் கூடாது அதை' என்று அடக்குவதை விட, போக்குவரத்து விதிகளை அவனுக்குச் சொல்லித் தருவதுதான் புத்திசாலித்தனம். ஓஸோன் படலத்தில் ஓட்டை என்றால், இப்படி ஆகிவிட்டதே என்று புலம்புவதை விட, மாற்று ஏற்பாடு என்ன என்று பார்க்க வேண்டும்.

பாரதி : மேலும் மேலும் வேண்டாதவற்றையும் விபரீதமானவற்றையும் திணித்துக் கொண்டேயிருந்தால், தனிநபரின் சுய கட்டுப்பாடு மூலம் மட்டும் இதை எதிர்கொள்வது நடைமுறைச் சாத்தியமில்லை. எல்லா தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கும் நாடு தழுவி ஒரு சென்சார் அமைக்கப்பட வேண்டும்.

சேகர் : எந்த மீடியாவிலேயும் நல்லது கெட்டது இரண்டும் இருக்கும். அந்தக் காலத்தில் தெருக்கூத்துக்களில் கூட இரண்டு விதத் தரங்கள் உண்டு. மிகவும் உயர்வாகப் பேசப்படும் மராத்தி ஸ்டேஜில் கூட பல அதிர்ச்சிகளைக் காணலாம். ஒரு சிறுமி பெரியவளாவதைக் கூட மேடையில் நடித்துக் காட்டினார்கள்!

பாரதி : அதெல்லாம் வேறு விஷயம். சினிமா – நாடகம், காபரே – டிஸ்கோ இவையெல்லாம் நாமோ, நம் குடும்பத்தினரோ பார்க்காமல் இருப்பது நம் கையில்தான் இருக்கிறது. ஆனால் தொலைக்காட்சி அப்படியில்லையே? நம் வீட்டுக்குள்ளேயே அது நுழைவதால் இதன் தாக்கம் ரொம்ப அதிகம்.

சேகர் : ஏன் அந்த டீ.வி.யை ஆன் செய்வதும், வேறு சானலுக்கு மாற்றுவதும் உங்கள் கையில்தானே இருக்கிறது?

பாரதி : இலக்கியத்திலே வரும் அன்னப் பட்சி மாதிரி சராசரி மக்கள் பாலை மட்டுமே பிரிச்சு எடுத்துக்கணும்னு எதிர்பார்க்காதீங்க. இந்த டீ.வி. மோகத்தால், விளையாடக் கூட குழந்தைகள் வெளியே போவதில்லை. WWF என்று மாமிசமலை போன்ற குத்துச் சண்டை நிகழ்ச்சிகளைப் பார்த்து சிறுவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு ஆபத்தை விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள்.

சேகர் : பெரியவங்களுக்கும் ஆபத்துதான். பசங்க சண்டை போட்டுக்கிட்டு நம்ம மேல வந்துதானே குதிக்கறாங்க! 'காதல் கோட்டை' படத்திலே பார்க்காமலேயே காதலிக்கறாங்களாம். 'அல்வா'ன்னு ஒரு நாடகம் போடலாம்னு இருக்கேன். பார்க்காமலேயே ரெண்டு பேர் காதலிப்பதாலே (முகமூடி காதலர்கள்) ஏற்படும் கோளாறுகளையும் சிக்கல்களையும் அதிலே காட்டலாம்னு இருக்கேன். இப்படி எதிலேயும் ரெண்டு கோணங்கள் இருக்கு. ராணுவத்திலே சிலர் செத்துப் போறாங்கன்னா, அதனாலே எண்பது கோடி பேர் காப்பாத்தப்படறாங்கன்னு அர்த்தம். தகாத சில நிகழ்ச்சிகள் வருவதாலே மொத்தமாக தொலைக்காட்சியையே திட்டுவதில் எனக்கு சம்மதம் இல்லை. நான் சொன்னா மாதிரி, தீர்வு நம் கையில்தான் இருக்கிறது.

தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்.**

வண்ணப்படங்கள் : **பேஜர் கே. மூர்த்தி**

23

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

'விச்வ சப்தத்தினால் அறியப் படக்கூடியவன் வாமனன்' என்கிறார்கள் வித்வான்கள்.

வித்வான் என்பவர் யார்...? எந்த மந்திரத்தினால் ஒரு தேவதை பேசப்படுகிறதோ அந்த தேவதையை எதிரில் கொண்டு வந்து நிறுத்தக்கூடியவன் வித்வான். மந்திரங்களை வெறுமனே ஒப்பிப்பவன் வித்வான் அல்ல... பரப்பிரும்மத்தைக் கொண்டு வருவாயா...? காட்டுவாயா...? என்றால் அவ்வாறு கொண்டு வந்து காட்டக்கூடியவன் வித்வான்.

நாம் அப்படியில்லை. பெரியவர்கள் சொல்லித் தந்த மந்திரங்களைத் திருப்பிச் சொல்கிறோம் - அவ்வளவுதான். அந்தக் காலத்திலே அவர்கள் அனுஷ்டித்ததைப் போல் கடும் விரதங்கள், நோன்புகளை நாம் அனுஷ்டிப்பதில்லை. எல்லா பதார்த்தங்களும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று அன்றைக்கு அந்த வித்வான்கள் உபாஸித்து, தேவதைகளைக் கொண்டு வந்து நிறுத்தி வரம் கேட்டார்கள். அப்படியே கிடைத்து, க்ஷேமம் நிலவியது.

அப்படிப்பட்ட வித்வானின் உபாஸனையினாலே பகவான் சர்வவியாபியாய், விச்வ வியாபியாய் திரிவிக்கிரமனாய் அவதாரமெடுத்துப் பரவி நின்றான். அந்த விச்வத்தை ஆவிர்பவித்து எவர் யக்ஞம் செய்கிறாரோ அவருக்குப் பூரண பலம் கிடைக்கிறது.

யக்ஞம் செய்ய பலவித ரித்விஜ்கள் இருப்பார்கள். அவர்களுக்கு தக்ஷிணை கொடுக்கப்பட வேண்டும். அதைக் கொடுத்தால்தான் யக்ஞம் பூர்த்தியாகிறது. யக்ஞம் செய்பவர்களெல்லாம் விசாரமில்லாமல் இருக்க வேண்டுமல்லவா...? 'அது என்னாச்சு? இது என்னாச்சு...?' என்று எண்ணம் வந்தால் யக்ஞம் கெட்டுப்போய்விடும்.

ஆகையினாலே யக்ஞத்துக்கு ரித்விஜ்களை அழைக்கும்போது, 'ஒரு பகுதி தக்ஷிணையை இப்போதே கொடுத்து விடுகிறேன்' என்று சொல்லியே அழைப்பார்களாம். அதை வாங்கி அவர்களும் கிரஹத்திலே வைத்து விட்டு வந்து யக்ஞத்தை நடத்திவிட்டு பிறகு பூரண தக்ஷிணையை வாங்கிக் கொள்வார்களாம்.

லௌகிகத்திலே இதைத்தான் 'advance' என்று சொல்கிறோம்!

இப்படியிப்படி யக்ஞ கர்மா நடத்த வேண்டும் என்று ஆபஸ்தம்பர் சொல்கிறார். எதை தக்ஷிணையாகக் கொடுக்க வேண்டும் என்றால், குள்ளமான பசுவைக் கன்றோடு கொடுக்க வேண்டுமாம்!

'ஏன்? உயரமான பசுவைக் கொடுக்கக் கூடாதா...?' என்றால், பகவான் வாமன ரூபியான எம்பெருமானை நாம் நினைப்பதற்காகத்தான், குள்ளமான பசுவாகப் பார்த்து தக்ஷிணையாகக் கொடு என்கிறது வேதம்!

ஆகையினாலே குள்ளமான பசுவைக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கும் ஒரு பசுவின் உடலில் எத்தனை ரோமங்கள் இருக்கின்றனவோ, அத்தனை வருஷங்கள், இவனுக்கு (கொடுப்பவனுக்கு) சுவர்க்க லோகத்திலே வாஸம் கிடைக்குமாம்.

இவ்வாறு குள்ளப் பசுவால் நினைவூட்டப்படுகிற வாமன ரூபியானவனே உலகத்தை அளந்தவனும் ஆகிறான். 'உலகை அளந்தவனே' என்று திரும்பத் திரும்ப அவனைக் கொண்டாடுகிறது வேதம்.

நர்மதை நதி தீரத்துக்கு விச்வம் போனது என்று சொன்னேன் அல்லவா...? அது வாமன ரூபனாய்த்தான் அங்கே முதலில் எழுந்தருளியது.

வாமன அவதாரம் விச்வ சப்தத்தினால் அறியப்படுகிறது - என்று அதன் உயர்வுகளை எடுத்துச் சொல்லும்போது, 'நரசிம்ஹ அவதாரத்தை உயர்ந்ததுன்னு சொன்னீர்களே?' என்ற கேள்வி வரும். இனிமேல் சொல்லப் போகிற ராமர், கிருஷ்ணர் அவதாரங்களையும் அப்படித்தான் உயர்ந்தவையாகச் சொல்லப் போகிறேன். அதனாலே வாமன அவதாரமே மகிமை குறைந்து போய் விடாது. எல்லா அவதாரங்களுமே உயர்ந்தவைதாம்.

வாமன அவதாரத்துக்கு வருவோம்... அந்த அவதார மகிமையைத் தெரிந்து கொள்வதற்கு முன் ஆசார்ய (குரு) மகிமை பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆசார்யரைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை என்கிறார் சுவாமி தேசிகன். பகவானை எப்படியெல்லாம் உபாஸிக்

குறையொன்றுமில்லை

கிறோமோ அப்படியெல்லாம் ஆசார்யனையும் உபாஸிக்க வேண்டும் என்கிறது உபநிஷத்.

ஆசார்யன் என்றால் யார்...?

நிறைய சாஸ்திரத்தைப் படித்தவர் ஆசார்யன். எல்லா வித்யா ஸ்தானங்களும் அவர் நுனி நாக்கிலேயே தாண்டவமாடும். எதைக் கேட்டாலும் சொல்லக்கூடியவர். நல்ல வாக்கு உடையவர்.

வித்யை என்பது நிரந்தரமானது. பொருள் (செல்வம்) அப்படி இல்லை. வரும் – போகும். நாளை வரப்போகும் செல்வத்தை நம்பி இன்று ஒரு காரியம் பண்ண முடிகிறதா...?

இப்படிப்பட்ட நிரந்தரமான வித்யைகள் நிரம்பப் பெற்றதனால் மட்டுமே ஒருவர் ஆசார்ய ஸ்தானம் வகித்து விட முடியாது. தாம் எடுத்துச் சொல்லும் விஷயங்களை அனுஷ்டிப்பவராகவும் அவர் இருத்தல் வேண்டும். அப்படி அனுஷ்டிக்காதவர் (கடைபிடிக்காதவர்) ஆசார்யராக இருக்கவே முடியாது.

'கிருஷ்ணம் வந்தே ஜகத் குரும்' என்று பிரார்த்தனை பண்ணுகிறோம். ஜகத்துக்கெல்லாம் குரு அவன். எல்லா சாஸ்திரங்களிலும் குருவாக, பரமாசார்யனாகச் சொல்லப்படுகிறவன் நாராயணன். அந்த நாராயணன் கூட கீதாசாரியனாக கிருஷ்ணாவதாரத்திலே உபதேசம் செய்ததை அப்படியே ராமாவதாரத்திலே நடத்திக் காட்டினான்.

எனவே, கற்றதை அனுஷ்டித்து நடத்திக் காட்டி, பிறருக்கு உபதேசிப்பவன்தான் ஆசார்யன். அவர் எதை மனத்தால் நினைக்கிறாரோ அதையே



நாவால் சொல்ல வேண்டும். எதை நாவால் சொல்கிறாரோ அதையே நடத்திக் காட்ட வேண்டும்.

உடல் ஆரோக்கியத்துக்காக எத்தனையோ மருந்துகளைச் சாப்பிடுகிறோம். ஆனால், அதெல்லாம் மருந்தில்லை என்கிறது சாஸ்திரம். பின்னே எது நல்ல மருந்து...?

நினைவு, சொல், செயல் என்று மூன்றும் ஒன்றாக வாழ்க்கை நடத்துவதே உயர்ந்த மருந்து. அப்படியில்லாமல் நினைப்பது ஒன்று, சொல் வேறு, நடப்பது வேறு என்று இருந்தால்.... அப்படிப்பட்டவர்கள் துராத்மாக்கள்! மகாத்மாக்களுக்கு இந்த மூன்றும் – சிந்தை, சொல், செயல் – ஒன்றுபட்டிருக்கும்.

அப்படிப்பட்ட மகாத்மாக்களை ஆசார்யராக அடைவதால் நமக்கு என்ன பலன்...? அதற்கு ஒரு கதை சொல்கிறேன் :

திருப்பதி மலையை எல்லோரும் பார்த்திருக்கிறோம். இங்கே ஒரு சிகரம்; அங்கே ஒரு சிகரம். ஒரு சின்ன எறும்பு... ஒரு சிகரத்தில் ஊர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. அதற்கு, அதோ... அந்த மலைச் சிகரத்துக்குப் போக வேண்டும் என்று ஆசை!

எவ்வளவு அல்பமான ஜீவன் அந்த எறும்பு! ஒரு மலைச் சிகரத்திலிருந்து மற்றொன்றுக்கு ஏறிப் போவதற்குரிய அங்கங்களோ, அவயவங்களோ அதற்கு இல்லை. ஆனால் அதுவும் அந்த சிகரத்தை அடைந்தது. எப்படி...?

எப்படியென்றால், ஒரு சிங்கம் அந்த இடத்திலே மலைக்கு மலை தாவி ஓடிக் கொண்டிருந்தது. எறும்பு, தான் நினைத்த மாதிரியே சிங்கமும் இந்த சிகரத்திலிருந்து அந்த சிகரத்துக்குப் போக இருப்பதைப் பார்த்தது. உடனே, 'இதுதான் சமயம்' என்று அங்கேயிருந்து போய் அந்த சிங்கத்தின் சரீரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. சிங்கம் சிகரத்துக்குச் சிகரம் தாண்டியபோது, எறும்பும் தாண்டி விட்டது!

ஆகையினாலே, ஓர் ஆசார்யனின் திருவடியை நாம் கெட்டியாகப் பிடித்துக் கொண்டோமானால், சம்ஸார சாகரத்தை அவர் தாண்டும்போது நாமும் கூடவே தாண்டி விடுகிறோம்! அந்த மாதிரி உயர்ந்த கதியை நமக்கு அடைவிக்கக் கூடியவர்கள்தான் ஆசார்யர்கள்.

தனத்தை உடையவனை தனவான் என்கிறோம். குணம் உடையவனை குணவான் என்று அழைக்கிறோம். ஆனால் எப்படிப்பட்டவனும் ஆசார்ய சம்பந்தத்தோடுதான் இருக்க வேண்டும். அது மட்டும் இல்லாமல் போனால் வேறெது இருந்தும் பயனில்லை.

'ஆசார்யவான் புருஷோ வேதா – ஒரு நாளும் தனித்து இராதே. ஆசார்ய சம்பந்தத்தோடுதான் நீ இருக்க வேண்டும்' என்கிறது

கல்லூரி ஹீரோக்களே, ஹீரோயின்களே!



கல்லூரி மாணவ, மாணவியரே, உங்களுக்கு ஓர் அருமையான வாய்ப்பு.

உங்களுக்கு மட்டுமே தெரிந்த உங்கள் கல்லூரி ஹீரோ அல்லது ஹீரோயினை வெளியுலகத்தினரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களா?

இதோ, கல்கி உங்களுக்குக் கைகொடுக்கக் காத்திருக்கிறது!

குறிப்பிட்ட அந்த மாணவரோ அல்லது மாணவியோ உங்கள் கல்லூரியில் பிரபலமானவராக இருக்க வேண்டும். படிப்பில், விளையாட்டில், சமூக சேவையில், பேச்சாற்றலில், கவிதை எழுதுவதில் அல்லது ஆடல்... பாடலில்... என்று ஏதாவதொரு வகையில் அவர் உங்கள் கல்லூரியில் பிரபலமாயிருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட உங்கள் கல்லூரி ஹீரோ அல்லது ஹீரோயின் பற்றிய முழு விவரங்களையும்– அவரை எதனால் நீங்கள் ஹீரோ அல்லது ஹீரோயினாகக் கருதுகிறீர்கள் என்கிற முழு விவரங்களையும் எங்களுக்கு எழுதியனுப்புங்கள்.

கூடவே, அவர்களை ஹீரோ அல்லது ஹீரோயினாகக் காட்டும் கலர் போட்டோ (பாஸ்போர்ட் சைஸ் வேண்டாமே!) ஒன்றையும் அனுப்பி வையுங்கள்.

ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு ஹீரோ அல்லது ஹீரோயின் பற்றித் தொடர்ந்து பிரசுரமாகும்.

ஒரு கல்லூரியிலிருந்து ஒரு ஹீரோ அல்லது ஹீரோயின் பற்றி மட்டும்தான் வெளியிடுவோம் என்பதால், உங்களுடைய தேர்வு கவனமாக இருக்கட்டும்!

உங்கள் கல்லூரி ஹீரோ அல்லது ஹீரோயின் பற்றிய விவரங்களையும் கலர் போட்டோவையும் அனுப்புவதற்கு முன்பு, அவற்றை உங்கள் கல்லூரி சேர்மனோ அல்லது முதல்வரோ பரிந்துரை செய்து சான்றுக் கையெழுத்திட்டிருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

தீபாவளி சிறப்பிதழிலிருந்தே கல்லூரி ஹீரோ அல்லது ஹீரோயினின் அறிமுகம் ஆரம்பிக்க வேண்டும் என்பதால் அனைவரும் உடனடியாகச் செயலில் இறங்குங்கள்.

பிரசுரமாகும் ஒவ்வொரு கட்டுரையும் ரூ.100/- சன்மானம் பெறும். வெளியாகிற அத்தனை கட்டுரைகளிலும் சிறந்தது என்று ஆசிரியர் தேர்ந்தெடுக்கிற ஒன்றுக்கு ரூ.1000/- சிறப்புப் பரிசு காத்திருக்கிறது.

உறையின் மேல் 'கல்லூரி ஹீரோ/ஹீரோயின்' என்று குறிப்பிட்டு அனுப்புங்கள்.

சாஸ்திரம்.

ஆகாசத்தில் பிரகாசிக்கிறானே சூரியன்... அவன் கிரணங்கள் பட்டதுமே தாமரை புஷ்பமானது விகசிக்கிறது. எப்படி விகசிக்கிறது என்று யோசிக்க வேண்டும்.

ஒரு பெரிய தடாகத்திலே, தீர்த்தம் நிறைய இருந்தால், சூர்ய ரச்மி பட்டவுடனேயே தாமரை விகசிக்கிறது. ஆனால், தடாகத்திலே தீர்த்தமே இல்லையென்று வைத்துக் கொள்ளுங்கள், சூர்ய ரச்மி வந்து பட்டால்...? அந்தத் தாமரையானது வாடி வதங்கித்தான் போகுமேயொழிய விகசித்து மலராது!


அப்போ, தாமரை மலர்வதற்கு முக்கியமான பொருள் தீர்த்தம். தீர்த்தத்தில் இருக்கிற தாமரையை மலரச் செய்பவன் சூரியன். அதுபோல, ஆசார்ய சம்பந்தத்தைப் பெற்ற ஜீவனை பரமாத்மா அனுக்ரஹித்து விகசிக்கச் செய்வான். தாமரை – ஜீவன். தீர்த்தம் – ஆசார்யன். சூர்யன் – பரமாத்மா. தீர்த்த சம்பந்தம் போலே எப்போதும் ஆசார்ய சம்பந்தம் வேண்டும். மோக்ஷம் பெறுவதற்கு இந்த சம்பந்தம் கட்டாயம் வேண்டும்.

யோகத்திலே கெட்டிக்காரரான ஒரு ஆசார்யர் இருந்தார். சமாதி நிலையிலே அவர் அமர்ந்தாரானால் எம்பெருமானை நேருக்கு நேரே பார்க்கக்கூடியவர்! ஒருநாள் அப்படி அவர் யோகத்திலே இருந்தார். பகவானை நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டே இருந்தார். ஆனால், வழக்கமாக இவர் பார்வையை நேருக்கு நேராக சந்தித்த பகவானின் நோக்கு அன்று மட்டும் வேறு திசையில் திரும்பியிருந்தது.

அந்த யோகிக்கு இந்த மாற்றத்தைக் குறித்து வியப்பும் விசாரமும் உண்டாயிற்று.

பகவானின் பார்வை மாறியதற்குக் காரணம் என்ன...? அடுத்த வாரம் சொல்கிறேனே...

(தொடரும்)


கடலோரக் கொலைகள்
கதை : பெனிட்டோகுமார்
படம் : சசி
12
வயர்லெஸ் செய்தி மதிவாணனை எட்டவும்...
இருட்டுல பதுங்கி, இடை வெளி விட்டு, பின்தொடர்ந்து போங்க. நாங்களும் வ்ரோம்.
கடற்கரையில், ஆஷா பேட்டரி லைட் அடிக்க, குழிக்குள் நாகராஜன்...
எவ்வளவு நேரம் நானே தோண்டறது? பிரதீப்! நீ இறங்கி வா; நான் மேல ஏறி ரெஸ்ட் எடுக்கறேன்.
மணல்மேட்டின் மறைவில்...
ஸார்! பாயலாமா?
வேண்டாம்... இன்னும் ரெண்டு நாள் காத்திருக்கணும்னாலும் சரி; அவங்க காரியம் முடியட்டும்.
சற்று நேரத்தில்... குழிக்குள்ளிருந்து பிரதீப்...
கிடைச்சுடுச்சு! கிடைச் சுடுச்சு! பணக்காரங்களா யிட்டோம்!
அதே சமயம் ஆஷா கையில் இருந்த பாட்டரி லைட் ஒரு கல்லால் தாக்கப்பட...
ஆ! ஐயோ!


நாகராஜனின் அலறல் கேட்டு இன்ஸ்பெக்டர் கோபி...
மதிவாணன்! என்னமோ நடக்குது! தப்பிடப் போறாங்க! சீக்கிரம்!
ஜீப் ஒளி சிந்தி, குழியை நெருங்க, எதிர் திசையிலிருந்தும் டார்ச் லைட்டுகளுடன் போலீஸ் ஓடி வர...
நாகராஜ்! துப்பாக்கியைக் கீழே போடு. இல்லே, சாகத் தயாராகு!
பிரதீப்! நாலாபுறமும் போலீஸ் சூழ்ந்திருக்கு!
சரண்டர் ஆகறோம் ஸார்
குழிக்குள்ளிருந்து ஒரு ஸூட்கேஸ் வெளியே வர...
பூட்டை உடைங்கடா!
வேண்டாம் மதி! ஸ்டேஷனுக்குப் போய் பார்த்துக்கலாம்!
நாகராஜ்! ஆஷா என்ன ஆனா?
என்னைக் குழில தள்ளிட்டு தப்பி ஓடிட்டா!
ஸ்பாட்ல மாட்டினவங்க நீங்கதான். நடங்க, ஸ்டேஷனுக்குப் போவோம்!

(தொடரும்)

டி.வி. சங்கரநாராயணன் சட்டம் படித்தவர்! வழக்கறிஞராகப் பதிவும் செய்து கொண்டவர். சென்னை சட்டக் கல்லூரியில் இவரது சக மாணவர் இன்றைய மத்திய அமைச்சர் ப. சிதம்பரம்!

"மாமா சொன்னார். சங்கீதத்திலே கவனம் செலுத்து. அது போறும், அப்படின்னு. அதனாலே சட்டத்தை விட்டுட்டு சங்கீதம்தான்னு வந்துட்டேன்..." என்கிறார் டி.வி.எஸ்.

மாமா?

மதுரை மணி அய்யர்! டி.வி.எஸ்ஸின் அப்பா வேம்புஐயர், முப்பது ஆண்டுகள் மணி அய்யரோடு இணைபிரியாமல் உடன்பாடியவர்!

"எனக்கு குரு, தெய்வம் எல்லாமே மாமாதான்..." என்று வார்த்தைக்கு வார்த்தை மாமாவின் புகழ்பாடும் டி.வி.எஸ். மாமாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, விட்டது வக்கீல் தொழிலை மட்டுமல்ல- அவருக்கு மிகவும் விருப்பமான கிரிக்கெட்டையும் கூட!

"வெயிலில் விளையாடினால் தொண்டை கெட்டுடும். வேண்டாம்.. பாடறவனுக்கு வேறே ஜோலியே ஒதவாது. ஆத்திலே ஒரு கால், சேத்திலே ஒரு கால் எல்லாம் கூடாது. பாட்டுலே மெனக்கெடணும்..." என்பாராம் மணி அய்யர்.

"மாமா மஹான். யாரையும் கடிந்து ஒரு வார்த்தையும் சொல்ல மாட்டார். அவர் போட்ட அஸ்திவாரத்தில் தொடங்கினேன். அவரை 'இமிடேட்' பண்ணக்கூடாது என்பதற்காக, என்னுடைய குரலுக்கு ஏற்ற மாதிரி ஒரு தனிப்பட்ட பாணியை ஏற்படுத்திக் கொண்டேன். 'டி.வி.எஸ். ஸ்டைல்' என்று ஒன்றை நிறுவிய திருப்தி இருக்கிறது..." என்கிறார்.

"சரளி வரிசை முதல் மாமாவிடம் பாடம்... அவ்வளவும் பெரிய உருப்படி கற்றுக் கொள்கிற அதே நேர்த்தியில் கற்றுத் தருவார். தினசரி காலையில் மாமா எப்போது கூப்பிடுவார் என்று காத்திருப்பேன். ஏழு - ஏழரைக்குத் தொடங்கினால் கல்லூரிக்குப் போகிற வரை பாடம் இருக்கும்... அபூர்வ ராகங்களை - மானவதீ, ரஞ்சனி, உமா பரணம், ஜயந்த சேனா, விஜய நாகரி என்று நிறைய மேடைக்குக் கொண்டு வந்தவர் அவர்தான். தமிழிசை இயக்கம் தொடங்கியபோது அதற்கு ஆதரவாகப் பெரிய உருப்படிகளைத் தமிழில் நிறையப் பாடினார்!"

சங்கரநாராயணனின் குடும்பத்தில் மூன்று தலைமுறைகளாக நூறு ஆண்டுகளுக்கும் மேலாக சங்கீத தேவதை அருள்பாலித்துக் கொண்டிருப்பது தனிச்சிறப்பு. மதுரை புஷ்பவனம், அவருடைய சகோதரர் மகன் மதுரை மணி அய்யர், அவருடைய மருமான் டி.வி.எஸ்.

அடுத்த தலைமுறைக்குக் கூட இது தொடர்கிறது.

• ஜனாதிபதியிடம் பரிசு பெறுகிறார்—



மகள் அம்ருதா, பாட்டிலும் மகன் சங்கரமகாதேவன் மிருதங்கத்திலும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

சங்கர நாராயணன் தனியாகக் கச்சேரி செய்வதற்குத் தூண்டுகோலாய் அமைந்தவர் டி.என். கிருஷ்ணன்தான்.

"எத்தனை நாளைக்கு ராமன் (டிவிஎஸ்ஸின் வீட்டுப் பெயர்) உங்க கூடவே பாடிண்டு இருக்கறது? அவனையும் கச்சேரி பண்ணச் சொல்லுங்கோ" என்றார் டி.என்.கே. வீட்டின் முன் அறையில் முதல் கச்சேரி, மாமா முன்னால் நடந்தது. டி.என்.கே. வேலூர் ராமபத்ரன், ஆலங்குடி



கிருஷ்ணன் தூண்டி விட்ட 'ராமன்'!

ராமச்சந்திரன பக்கவாத்யங்களோடு இரண்டு மணி நேரம் பாடிக் காட்டிய பிறகுதான் மாமா சம்மதம் தந்தார். மறுநாளே இராயப்பேட்டை ஆஞ்சநேயர் கோவிலில், கோதண்டராமசுவாமி சந்நிதியில் அரங்கேற்றத்துடன் அவர் பயணம் தொடங்கியது.

சமீபத்தில் 'சங்கீத சூடாமணி' விருது பெற்றார் டி.வி.எஸ். அனேகமாக அவருடைய அத்தனை கச்சேரிகளும் ஹவுஸ் புல்!

1960 ஆம் ஆண்டில், பாபு ராஜேந்திரபிரசாத் கையால் மதுரை மணி அய்யர் ஜனாதிபதி விருது வாங்கியபோது உடன் சென்றிருந்தவர் பதினைந்து வயதுச் சிறுவனான சங்கரநாராயணன்.

"அப்போ இப்படி ஒரு சந்தோஷம் எனக்கும் கிடைக்கும்னு நான் கனவு கூடக் காணவில்லை. ஆனால் பெரியவர்கள் ஆசிர்வாதத்தால் அடுத்த முப்பதாண்டுகளில் ஜனாதிபதி ஆர்.வி. கையால் அதே விருதை நானும் பெற முடிந்தது..." என்று அடக்கத்தோடு கூடிய மனநிறைவில் சொல்கிறார் டி.வி.எஸ்.

• சங்கர நாராயணன்

சங்கீதத்தைத் தவிர, மற்ற விஷயங்களில் எல்லாம் மிகவும் 'அடக்கி வாசிக்கும்' டி.வி.எஸ்., தமிழில் நிறைய ஆர்வமும் பயிற்சியும் உள்ளவர் என்பது பலருக்குத் தெரியாது. இசை நிகழ்ச்சிகளில் கணிசமாகத் தமிழில் பாடும் இவர், கல்லூரி நாட்களில் தீவிரமான படிப்பார்வம் கொண்டவராக இருந்தார். இப்ஸன், ஷா, ஹெச்.ஜி.வெல்ஸ், டென்னஸி வில்லியம்ஸ் என்று ஒரு பெரிய பட்டியலே இவருக்குப் பிடித்த நூலாசிரியர்கள். எழுபத்தைந்தில் அமெரிக்கப் பயணம் போகும் வரை சென்னை நூலகங்கள் எல்லாவற்றிலும் இவரைப் பார்த்திருக்கலாம்.

அப்புறம் படிப்பார்வம் ஓரளவு குறைந்து விட்டது. பாரதி பக்தரான டி.வி.எஸ்., தம்முடைய சிந்தனைகளைக் கீர்த்தனைகளாக வடிக்கவும் கூடியவர்! அவ்வப்போது பயண நேரங்களில் மனசில் அரும்பும் கவிதை வரிகளைக் குறித்தும் வைத்திருக்கிறார். இதுவரை 'பாட' என்று பயன்படுத்தியிருக்கும் சொந்த சாகித்யம் பிருந்தாவனி ராகத் தில்லானா அமைப்பில் மாங்காடு காமாட்சியைப் பணிந்திருப்பதுதான்.

"நதியெனப் பெருகும் அருளினைப் பெறவும்
விதியென வந்த வினைகள் தீரவும்
கதியென வந்தேன் காமாட்சி, முழு
மதியெனத் திகழும் மதுரமணிநேசன்..."

என்ற இந்தப் பாடல் வரிகளை அந்த குருநாதர் இருந்து கேட்க முடிந்திருந்தால், சிஷ்யனின் இந்தத் திறமைக்குச் சட்டத்துக்கும் கிரிக்கெட்டுக்கும் செய்த மாதிரி, தடைசெய்திருக்க மாட்டார்!

நாலாயிர திவ்யப் பிரபந்தங்களில் மிகுந்த ஈடுபாடுடையவர் டி.வி.எஸ். சனிக்கிழமைகளில் தவறாமல் இந்தப் பாராயணம் உண்டு. சங்கரநாராயணனின் மனைவி விஜயலெக்ஷ்மி சங்கீதத்தில் எம்.ஏ. தங்கப்பதக்கம் பெற்றவர்!

- சுப்ர.பாலன்

அர்த்தத்தைத்

சரசுராம்

விளக்கை அணைக்காமல் மனைவியின் முகத்தருகில் நெருங்கியது தப்பென ரவிக்குத் தோன்றியது. அவள்தான் முதலில் தாடியில் நரையைக் கண்டுபிடித்தாள். நிஜமாவாவென ரவி கன்னத்தை அதிர்ச்சியோடு தடவிப் பார்த்தான். உடனடியாகக் கட்டிலை விட்டு எழுந்து கொண்டான்.

"கவலைப்படாதீங்க.. அப்புறம் மொத்தமும் நரைச்சிரும். முகத்துக்கும் சேர்த்து இனி 'டை' அடிச்சுக்கலாம்.."

"கிண்டலா.. இது பித்த நரை."

"பித்தம் தலைக்குத்தான் ஏறும். முகத்தில யுமா பரவும்?"

"வயசு ஆயிடுச்சுங்கறயா?"

"பின்ன ஆகலையா? பனிரெண்டு வயசுல ஒரு பையன். ஞாபகமிருக்கா..."

ரவி அவளைத் தலையணையால் செல்லமாக அடித்தான். அதில் அவள் நரையைக் கண்டுபிடித்த கோபமும் இருந்தது. லட்சுமி திரும்பிப் படுத்துக் கொண்டாள். சிரிப்பு கேட்டது. ரவிக்கு தூக்கம் போய் விட்டது. மறுபடியும் கன்னத்தைத் தடவிக் கொண்டான்.

"என் சுயநலமில்லாம... இதுவரைக்கும் ஏதாவது நல்லது பண்ணியிருக்கேனா?" என்று லட்சுமியிடம் கேட்கத் தோன்றியது அவனுக்கு.

"அதான் ஒண்ணே ஒண்ணு. கண்ணே கண்ணு போதும்னு கவர்ன்மென்ட்டெ ஃபாலோ பண்ணியிருக்கீங்களே. பத்தாதா?" என்பாள் கிண்டலாய்.

லட்சுமிக்கு எப்போதும் கிண்டல் அதிகம். ரவி அவளைத் திரும்பிப் பார்த்தான். தூங்கியிருந்தாள். எழுந்து கண்ணாடி அருகே வந்து மறுபடியும் கன்னத்தைப் பார்த்தான். உண்மையிலேயே நரைத்துத்தான் போயிருக்கிறது. கும்மென ஒரு பாரம் நெஞ்சை அழுத்தியது.

அவனுக்கு இரண்டு நாள் தொடர்ந்து ஷேவிங் செய்யாமல் விட்டது ஞாபகம் இல்லை. வாத்தியார் வேலையில் தினமும் குழந்தைகளோடான சந்திப்பில், பொலிவான முகமே பழக்கமாகியிருக்கிறது. விடிந்ததும் டீ குடித்தபடி பத்திரிகையில் செய்தி மேய்வது. படிக்கிற ஷியாமிற்கு, கேட்கிற சந்தேகம் தீர்ப்பது. பிறகு ஜன்னலில் கண்ணாடி மாட்டி ரோட்டைப் பார்த்தபடி ஷேவிங். எப்படியோ வந்து ஒட்டிக் கொண்டு முணுமுணுக்கிற பிடித்த பாடல். ஒருநாள் ஷேவ் செய்யாமல் விட்டாலும் இந்த வயசிலும் அப்பாவிடம் திட்டு விழும். ஷேவிங் முடிப்பதற்குள் லட்சுமி பாத்ரூமில் வெந்நீர் வைத்து, 'என்னங்க' என்பாள். குளித்து வந்ததும் எண்ணெய் தேய்த்து, தலையைப் படிய சீவி - பவுடர் பூசி - நெற்றியில் சந்தனம் தீற்றிக்கொண்டு பளிச் சென்று மின்னல் வெட்டியதும் சாப்பிட உட்காருவான்.

ஒன்பது மணிக்குப் பள்ளிக்கூடம். வாசலில் வண்டி துடைத்து, ஷியாம், "அப்பா, ரெடி!" என்பான். இருவரும் கிளம்பும் வரையான அன்றாட நிகழ்ச்சியில் எப்படி நரையை உணராமல் போனேன் என ரவிக்கு வருத்தம் வந்தது.

ரவி படியேறி மொட்டை மாடிக்கு வந்தான். அப்பா படுத்திருந்தார். கழுத்து வரை போர்வையிருந்தது. எத்தனை பனியிலும் தொடர்ந்து எப்படி அப்பாவால் மொட்டை மாடியிலேயே தூங்க முடிகிறது என ஆச்சர்யமாகவே இருக்கும் ரவிக்கு. கேட்டால் இயற்கையோடு இயைந்த வாழ்வு என்று தத்துவம் சொல்லுவார். ஓய்வுபெற்ற வாத்தியார் உத்தியோகத்தில் புத்தகங்களில் தத்துவம் தேடுகிறார். 'இதுவரையான வாழ்வில் வேறென்ன தேடினீர்கள்' என அப்பாவை எழுப்பிக் கேட்க வேண்டும் போலிருந்தது.

கிடைத்த நிலா வெளிச்சத்தில் அப்பாவின் முகத்தைப் பார்த்தான். நரைத்த முடிகள் அப்பாவின் புன்னகையோடு மின்னியது. எதையோ தேடி, கிடைத்த திருப்தி அப்பாவுக்குக் கிடைத்திருக்குமோ எனக் கேள்வி வந்தது. நிமிர்ந்து நிலாவைப் பார்த்தான். வளர்பிறை. வளர்ந்து தேய்ந்து - தேய்ந்து வளர்ந்தென காலகாலமாய் வாழ்ந்தும் பிரகாசமாய் இருப்பதெப்படி என ஆச்சர்யம் வந்தது. நிலவின் மொத்த வெண்மையே அதற்கு நரைத்த அடையாளமோ என யோசித்தான்.

ஜன்னலில் வெளிச்சம் வந்தது. ரவி கண்கள் எரிய விழித்துக் கொண்டான். மொத்தம் இரண்டு மணி நேரமே தூங்கியிருக்கக்கூடும். ஷியாம் படிக்கிற கவனத்தில் இருந்தான். அப்பா பேப்பரில் மறைந்து இடுப்புக்குக் கீழே தெரிந்தார். லட்சுமி வாசல் தெளிப்பது கேட்டது. ரவி பிரஷ்ஷுடன் வாசலுக்கு வந்த போது, லட்சுமி கோலத்தில் பத்து புள்ளிகள் வைத்திருந்தாள். அவளையே பார்த்தான் ரவி. லட்சுமி அவ்வளவு கவரில்லை. தனிப்பட்ட

தேடி...

ஏதோவொரு கவர்ச்சியில் மயக்குவாள். குளித்து - கூந்தலை நுனியில் கட்டியிருந்தாள். இலேசான மஞ்சள் முகத்தில் அவசரத்தில் தீட்டின குங்குமம். தலைமுடியில் ஒரு நரையைத் தேட முடியாது. இதுவரை கண்ணில் பட்டதில்லை. லட்சுமி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"என்ன ஏழு மணிக்குக் கோலம்?" என்றான் எச்சிலைத் துப்பிக் கொண்டு.

"நான் எழுந்திரிச்சதும் லேட்தான். அய்யா நைட்டெல்லாம் மொட்டை மாடியில காவல் போலிருக்கு. ரொம்ப நேரம் கீழே ஆளையே காணம்?"

"காவலுக்குத் தான் எங்கப்பா இருக்காரே! எனக்கு வேற யோசனை. இப்பச் சொல்ல முடியாது. எனக்கு லேட்டாகுது."

வகுப்பறை. அட்டெண்டென்ஸ் மட்டும் எடுத்தான். பாடம் எதுவும் நடத்தவில்லை. நேற்றைய பாடத்தைப் படிக்கச் சொன்னான். மொகமொகவென சப்தம் பெரியதானது. எழுந்து அவர்களுக்கு மக்கியில் நடந்தான். படிக்கிற சப்தம் இறங்கி ஏறியது. வராந்தாவில் வந்து நின்றான். பள்ளிக்கூடத்தின் மொத்தப் படிப்பும் எதிரொலித்தது. மல்லிகா டீச்சர் சிரித்தபடி வந்தார்கள்.

"என்ன சார்... வந்ததுமே யோசனையா நின்னுட்டீங்க? வீட்டில எதுவும் பிரச்னையா..." என்றாள்.

"சே... சே... அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல மேடம்..."

"இல்லைன்னு சொன்னாலும்... கவலை முகத்திலேயே தெரியுது சார். தாடி கூட நரைச்சிடுச்சே..." என்றபடி மல்லிகா டீச்சர் நகர - ரவி மறுபடி கன்னத்தைத் தடவிக் கொண்டான். சந்தேகம் கேட்க வந்த கணேஷிற்கு அப்புறம் சொல்கிறேன் என்றான். இங்கே நிற்க வேண்டாமெனப் பட்டது. உள்ளே வர, ராமசாமி வாத்தியார் கூப்பிட்டார். உதவி தலைமையாசிரியர். இன்னும் மூன்று வருடத்தில் ஓய்வு கிடைக்கும். முழுவதும் நரைத்த தலைமுடி. ஷேவ் செய்யாமல் விட்டால் முகத்திலும் அப்படியே இருக்கும்.

"என்ன சார்..." என்றான் ரவி.

"இல்ல... நேத்து பணம் கேட்டேனே... பொண்ணுக்கு அடுத்த வாரம் கல்யாண



ஏற்பாடு பண்ணியிருக்கேன்..."

"இன்னும் ரெண்டு நாள்ல ஏற்பாடு பண்ணிடறேன் சார்..."

"எப்படியோ பார்த்து ரவி. முடிச்சு கொடுத்திருங்கோ. ரெண்டு மாசத்தில திருப்பி தந்துடறேன்..."

"ஒண்ணும் கவலைப்படாதீங்க... சார் முடிச்சுறலாம். சார் அப்புறம் உங்ககிட்ட ஒண்ணு கேட்டா தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே.."

"அட... என்னங்க ரவி. பத்து ரூபா வேண்ணா கூட நான் உங்ககிட்டத்தான் தயக்கமா கை நீட்டறேன். அதைவிட தப்பா நீங்க என்ன கேட்கப் போறீங்க?"

"இல்ல... உங்களுக்கு முதல் முதலா எப்ப நரைச்சது?"

ராமசாமி வாத்தியார் வாய் விட்டுச் சிரித்தார். வகுப்பறை குழந்தைகள் திரும்பிப் பார்த்தன. ரவிக்கு ஒரு மாதிரி பட்டது.

"எப்ப நரைச்சதுன்னா... என்ன சொல்றது? நரைக்கும்போது நரைச்சது. நீங்க வேற... என் பிறந்த நாளே எனக்கு மறந்து போச்சு..."

"உங்களுக்கு முடியெல்லாம் நரைச்சு போச்சேன்னு எப்பவாவது உறுத்தியிருக்கா?"

"உறுத்தியிருக்கு. உறுத்தும் போது ஷேவ் பண்ணிடுவேன்..."

"சார்.. நான் கேட்கறது அதல்ல. இந்த வயசு வரைக்கும் வேற யாருக்காகவும் வாழலையேன்னு கவலைப்பட்டிருக்கீங்களா?"

"மத்தவங்களுக்காக கவலைப்பட சொல்றீங்களா? அதுகெங்கே ரவி நேரம்? மூணும் பொண்ணா பொறந்தது. ஓரளவு படிக்க வைச்சேன். ரெண்டை கட்டிக் கொடுத்துட்டேன். இன்னும் ஒண்ணு பாக்கி. எப்படியோ தலைகீழா நின்னு அதுக்கும் ஏற்பாடு பண்ணிட்டேன். அது முடிச்சுட்டாலே ஏதோ வாழ்க்கையில சாதனை பண்ணின மாதிரிதான். அப்புறம் ரிடையர்மெண்ட். அதில வர்ற பணம்... அப்புறம் வயசான என் வாழ்க்கை... ஏன் ரவி, என்ன ஆச்சு உங்களுக்கு?"

"ஒண்ணுமில்லை சார்..."

ரவி வகுப்பறைக்குள் வந்தான். குழந்தைகள் படிக்கிற சப்தம் அதிகமானது. சேரில் வந்து உட்கார்ந்து கொண்டான். சரளா புத்தகத்தோடு எழுந்து வந்தாள்.

"சார்.. இனிமே கண்ணன் டியூசனுக்கு வர மாட்டான் சார்..." என்றாள்.

"ஏன்... கண்ணனுக்கு என்னாச்சு?"

"கண்ணனுக்கு ஒண்ணுமில்ல சார். கண்ணனோட அப்பாவுக்குத்தான் வயித்தில கட்டி சார். ஒரு வாரமா வண்டியில பழம் விக்கறதுக்குக் கூட போகல சார். நேத்து ஆஸ்பிடல்ல சேர்த்துட்டாங்க. ஸ்கூலுக்கு நாளைக்குத்தான் வருவான்னு அவங்கம்மா சொல்லி விட்டாங்க. ஆனா... இனிமேல் கண்ணன் டியூசனுக்கு வரவே மாட்டானாம் சார்..."

"டியூசனுக்கு அவன் ஏன் வர முடியாதாம்...?"

"அவங்கப்பாவுக்கு நிறைய செலவாயிடுச்சாம். டியூசனுக்கெல்லாம் அவங்கப்பாவால பணம் கட்ட முடியாதாம். அப்புறம்... என்னோட டியூசன் பீஸை அம்மா சாயந்திரம் தர்றேன்னு சொன்னாங்க சார்."

ரவிக்கு, தன்னை சவுக்கில் யாரோ அடிக்கற மாதிரி இருந்தது. தொடர்ந்து அடிபட வேண்டும் போலவும் இருந்தது.

"கண்ணனைப் பார்ப்பியா சரளா?" என்றான்.

"பார்ப்பேன் சார்..."

"பார்த்தா, சாரு சாயந்திரம் டியூசனுக்கு வரச் சொன்னேன்னு சொல்லு" என்றான்.

சாயந்திரம் வீடு. டியூசனுக்கு குழந்தைகள் கூடியிருந்தன. முப்பது குழந்தைகள் இருக்கும். வீடே வகுப்பறையாய் இருந்தது. எப்போதாவது ரவிக்கு அப்பா உதவி செய்வார். ரவி இல்லாத நேரத்தில் மட்டும் லட்சுமி பாடம் எடுப்பதுண்டு.

ரவி பயந்தடி வந்த கண்ணனைக் கூப்பிட்டான்.

"அப்பா எப்படியிருக்கார்?" என்றான்.

"பரவாயில்ல சார். இன்னும் மூணு நாள்ல வீட்டுக்கு வந்துருவாரு..." என்றான்.

"இனிமேல் டியூசனுக்கு வரமாட்டாயா?"

"அப்பாவால பணம் கட்ட முடியாதாமா சார்!"

"உனக்கு படிக்கற ஆசை இருக்கா?"

"நிறையப் படிக்கணும் சார். எங்கப்பா மாதிரி கஷ்டப்படாம படிச்சு பெரிய ஆளா வரணும் சார்..."

ரவி ஒரு நிமிஷம் அமைதியாய் இருந்தான். திரும்பிப் பார்த்தான். லட்சுமி வாசல்படியில் கோல நோட்டில் புள்ளி வைத்துக் கொண்டிருந்தாள். பேசினால் கேட்கிற தொலைவுதான். ரவி பேசினான்.

"கண்ணன்... தினம் நீ டியூசனுக்கு வரணும். ஆனா பணம் தர வேண்டாம். இனி எப்பவும் டியூசனுக்குப் பணமே தர வேண்டாம். சரளா.. உன் பீஸையும் உங்கம்மாகிட்டேயே தந்துரு. இனி யாரும் டியூசனுக்கு பீஸ் கொண்டு வர வேண்டாம். படிக்க மட்டும் வந்தாப் போதும். உங்க வீட்டுக்கு பக்கத்தில படிக்க ஆசைப்படற குழந்தைகள் இருந்தா ரவி சார் சொல்லித் தருவாருன்னு கூட்டிட்டு வாங்க..." என்றான்.


குழந்தைகள் என்னவோ புரிந்த மாதிரி பார்த்துக் கொண்டிருந்தன. ரவி திரும்பி லட்சுமியைப் பார்த்தான். லட்சுமி தொடர்ந்து நோட்டில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

42. வாட்கள் மோதின!

கூக்குரலிடவும் அவகாசமின்றி கழுத்தின் நரம்புகள் வெட்டப்பட்டதால் அந்த இளம் துறவி சுவடிகளின் மீதே குருதி பொங்கச் சரிந்து உயிரற்று விழுந்தார். காய்ந்து கிடந்த ஓலைகளில் பஞ்சை விட வேகமாகப் பற்றிய நெருப்பு, பக்கங்களிலிருந்த சீலைகளிலும், மரப்பொருட்களிலும் பாய்ந்து பரவத் தொடங்கியது. புகை வெளியே தெரிந்த அரை நாழிகை நேரத்தில் காடவ வீரர்கள் அந்த மண்டபத்தை நோக்கி குவியத் தொடங்கினார்கள். அரண்மனை வீரர்களும், கோட்டை மீதிருந்து புகையைக் கண்டு ஓடிவந்த வீரர்களும் காடவராயனின் வீரர்களைக் கண்டு திகைத்தாலும் வாட்களை உருவிக் கொண்டு உள்ளே நுழைய முற்பட்டதால், அரண்மனையின் அந்தப் பகுதியில் துவங்கி வாட்களின் ஒலி பரவத் தொடங்கியது. வீரர்களில் பாதிப் பேரை காடவ மன்னன் சிறையிருந்த மாளிகையை நோக்கி விரையுமாறு உத்தரவிட்ட காடவராயன், தனது வீரர்களை அழைத்துக் கொண்டு சிற்ப மண்டபத்தை நோக்கிப் பாய்ந்தான். மண்டபத்தின் வலது மூலையில் புலிச்சின்னம் வரையப்பட்ட சீலைகளால் மூடப்பட்டுக் கிடந்த பகுதியைக் கண்டவன், காடவ மன்னன் அடையாளம் கூறிய பகுதி அதுவாகத்தானிருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டதால் விரைந்து சென்று சீலைகளை விலக்கினான். உச்சியில் சூரிய பிரபை வரையப்பட்ட பெரும் சிம்மாசனம் ஒன்று வெகு கம்பீரமாக நின்றது. அதன் கைப்பிடியிலும் கால்களிலும் கூட யாளியின் வடிவமும் புலியின் வடிவமும் செதுக்கப்பட்டு பொன் தகடுகளால் மூடிக் கிடந்தது. சிவப்புக் கற்கள் பதிக்கப்பட்ட புலியின் கண்கள் காடவராயனை நோக்கித் தீ விழி விழித்து அங்கு அத்துமீறுவது அபாயம் என்று எச்சரிப்பது போல் தோன்றின. காடவராயன் எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை. தனது வீரர்களை அழைத்து அந்த சிம்மாசனத்தைப் பின்புறமாகத் தள்ள உத்தரவிட்டான். நீரில் ஒரு சலனம் ஏற்பட்டதும் வழுக்கிச் செல்லும் மீனைப் போல சிம்மாசனம் பின்நோக்கி நகர்ந்து, அது நின்ற இடத்தில் சதுரமான பள்ளம் ஒன்றும் தோன்றியது. இருபுறங்களிலும் யாளிகளின் வரிசை கைப்பிடிக்கு வசதியாக அணிவகுத்திருக்க, படிகள் சுழன்று சுழன்று கீழே சென்றன. வீரர் பதின்மரைத் தன்னுடன் வரவும் எஞ்சியவர்களை மேலே காவலுக்கு நிற்கவும் உத்தரவிட்டான் காடவராயன். படிகளில் இறங்கத் தொடங்கினான். பூமிக்குள் குடைந்து சென்ற படிகள் சுழன்று சுழன்று ஏதோ பாதாள உலகிற்கே செல்வதாகத் தோன்றின. காடவராயனின் கால்கள் மடங்கி மடங்கித் தொய்ந்து, கண்கள் இருண்டு தலையும் சுழலும் நிலை வந்து சேர்ந்தபொழுது படிகள் முடிவுற்று, சிறிய அறையொன்று தெரிந்தது. சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டவன், அங்கு எந்தப் பொருட்களுமில்லாததையும் அறையின் எதிர்புறம் கருங்கற்சுவர் ஒன்று தெரிவதையும் கண்டு திகைத்தான். கருங்கற்சுவரை வாளால் தட்டிப் பார்த்தவனுக்கு, அது கருங்கல் அல்ல என்பதும் கரியவர்ணம் பூசப்பட்ட மரச்சுவர் என்பதும் புரிந்தது. நிதானத்தை அறவே இழந்து விட்ட காடவராயன், அதைத் திறப்பதற்குரிய விசையேதும் அவனுக்குத் தென்படவில்லை. ஒதுங்கி நின்றவன், வீரர்களை அழைத்து அந்த மரச்சுவரை மோதி உடைத்துத் திறக்க உத்தரவிட்டான்.



அரண்மனையைச் சுற்றிலும் கேட்ட வாட்களின் ஒலியும், வீரர்களின் கூச்சல்களும், காற்றில் உடன் கலந்து துளைத்த நெடியும், புகையும் இனிய கனவுகளுடன் உறங்கிக் கொண்டிருந்த பூங்கோதையைத் திடுக்கிட்டு எழ வைத்தன. பணிப் பெண்களும் வீரர்களும் அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருப்பதையும் கீழேயிருந்து வாட்களின் ஒலிகள் கேட்பதையும் உணர்ந்தவள் குழப்பத்துடன்



வெளியே வந்தாள். கொங்கு மன்னன் அவநிதன் அவளை நோக்கி விரைந்து வருவது புலப்பட்டது. கலவரமும் அச்சமும் அவள் முகத்தில் படர்ந்து கிடக்க, பூங்கோதை "தந்தையே, என்ன நேர்ந்தது? ஒன்றும் விளங்கவில்லையே?" என்றாள் குரலே எழாமல்.

அவநிதன் குரலில் இன்னமும் பதற்றம் தெரிந்தது. "மகளே, உள்ளே சென்று விடு. அரண்மனையைக் காடவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். சிற்ப மண்டபத்தில் தீப்பிடித்திருக்கிறது. நம் துறவியாரையும் எங்கும் காணவில்லை. காடவர்களால் ஏதும் தீங்கு நேர்ந்து விட்டதோ என்றும் தெரியவில்லை. நீ அறைக்குள் வந்து விடு மகளே."

திகைத்து நின்றுவிட்ட பூங்கோதையின் செவிகளில் சிற்ப மண்டபத்தில் தீப்பிடித்திருப்பதாக அவநிதன் கூறிய வார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் விழவில்லை. அடுத்த கணம் சட்டென்று திரும்பியவள், சிற்ப மண்டபமிருந்த திசையை நோக்கிப் படிகளிறங்கி ஓட ஆரம்பித்தாள். பதற்றத்துடன் அவளை அழைத்தபடி பின்தொடர்ந்த அவநிதனின் குரல் அவளுக்கு எட்டவேயில்லை.

எதிர்பாராத இந்தத் தாக்குதலில் தஞ்சையின் வீரர்கள் முதலில் சற்றுத் திகைத்தாலும், பின்னர் இயற்கையான துணிவாலும், சோழ வீரர்களுக்கே உரிய வாட்போர் லாகவத்தாலும் காடவ வீரர்கள் எதிர்த்துத் தாக்கத் தொடங்கி விட்டிருந்தனர். போதாக்குறைக்கு தஞ்சைக் கோட்டைத் தலைவனின் நீண்ட காலப் போர் அனுபவமும், எந்தச் சிக்கலான சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் திறமையும், சிறு சிறு பிரிவுகளாக வீரர்களை அணி வகுக்கச் செய்து காடவர்களை மடக்கியவிதமும் சோழ வீரர்களுக்குத் துணிவையும் காடவ வீரர்களுக்கு அச்சத்தையும் ஏற்படுத்தின. ஆனால் எங்கிருந்தோ கோட்டைக்குள் நுழைந்து வந்துகொண்டேயிருந்த காடவர்களின் எண்ணிக்கையும் கூடி விட்டதால், போரின் உக்கிரம் உயர்ந்து கொண்டே போனது. போரிட்டபடியே அரண்மனையெங்கும் நுழைந்து தேடிய கோட்டைத் தலைவன் இளவரசியையும் கொங்கு மன்னனையும் காணாமல் திகைத்தான். அதைவிட, துறவியாரைக் காணாததால் அதிகமாகத் திகிலடைந்தான். அவனை வழியில் சந்தித்த அமைச்சருக்கும் துறவியார் போன இடம்

விஷ்வக்சேனன்



இங்கிலாந்தில் செஸ்டர் மிருகக் காட்சிசாலையில் இருக்கிறது இந்த ஆசிய யானைக் குட்டி. தாயிடமிருந்து பிரிந்த இந்த குட்டி, புட்டிப் பால்தான் குடிக்கிறது. அது மட்டுமில்லை. தினமும், மிருகக்காட்சிசாலை ஊழியரான கவின் போர்செர், யானைக்குட்டியைப் படுக்க வைத்து, அன்புடன் தட்டிக் கொடுத்தால்தான் தூங்குகிறது. தாலாட்டு பாடச் சொல்லிக் கேட்குமோ?

– கௌதம்

தெரியவில்லை.

கோட்டைத் தலைவனும் பேரமைச்சரும் அரண்மனை வீரர்களும் பதற்றத்துடன் தேடிக் கொண்டிருந்த துறவியார், எந்த ஒலிகளும் எட்ட இயலாத இடத்தில் ஏகாந்தமாகப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். சோழ மன்னனின் அந்தரங்க அறையின் வழியே பொக்கிஷ நிலவறையை அடைந்திருந்தவர் தரையிலமர்ந்து பூங்கோதைக்காக ஆபரணங்களையும், முத்துச் சரங்களையும், இதர நகைகளையும் பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்து, பேழையொன்றில் அடுக்கிக் கொண்டிருந்தார். அவரது விசால விழிகளில் பெரும் சந்துஷ்டி நிலவிக் கிடந்தது. புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட பெரும் தந்தப் பேழையொன்றைத் திறந்தவர், உள்ளிருந்து ஒளிவீசிய கற்களையும், மாணிக்க மாலைகளையும், அணிகலன்களையும் கண்டு, அவை சோழ ராஜேந்திரனின் பட்டத்தரசிக்கு உரியவை என்பதைப் புரிந்து கொண்டதால் அவர் இதழ்களிலிருந்த முறுவல் இன்னும் விரிந்தது. அந்தப் பேழையை அப்படியே நகர்த்தி பூங்கோதைக்காகத் தாம் தேர்ந்தெடுத்த ஆபரணங்களுடன் சேர்த்தார்.

பேழையை நகர்த்திவிட்டு நிமிர்ந்தவரை அடுத்திருந்த அறையிலிருந்து எழுந்த ஒலிகள் திடுக்கிட வைத்தன. சோழவம்சத்தின் வம்சாவளிகளும், பட்டயங்களும், அரசகுலத்து ரகசியங்களும் ஓலைகளாகப் பேழைகளில் அடுக்கப்பட்டிருந்த அந்த அறையின் ரகசிய வாயிலான மேற்குப்புற மரக்கதவை எவரோ பலமாக மோதும் ஒலி எழுந்து, மண்டபத்தில் எதிரொலித்தது. துறவியார் இரண்டடி எடுத்து வைக்குமுன் அந்த மரக்கதவு உட்புறமாகப் பெயர்ந்து பேழைகளைச் சரித்தபடி தடாலென்ற பெரும் ஒலியுடன் விழுந்தது.

அறையெங்கும் பரவிய தூசிப் படலத்தினூடே பலகையை மிதித்துக் கொண்டு பந்தங்களுடனும் வாட்களுடனும் பலர் நுழைவதும் புலப்பட்டது. முன்னால் உருவிய வாளுடன் நுழைந்தவன் காடவராயன் என்பதைக் கண்டுகொண்ட துறவியாரின் விழிகளில் அவரது பூர்வாசிரமத்திலிருந்ததும், துறவு பூண்ட பிறகு அடியோடு மறைந்து விட்டதுமான போர் வெறியும், அசாத்திய கோபமும் தோன்றி, அவை சிவக்கத் தொடங்கின. சிவந்த விழிகள் கொலைப் பார்வையாக அவனை வெறித்தன.

உள்ளே நுழைந்து நின்ற காடவராயனும் மறுபுறத்தில் ஆஜானுபாகுவாக நின்றிருந்தவர்களும் துறவியாரைக் கண்டதும் ஒருகணம் திகைத்தனர். அடுத்து அவன் குரலில் பெரும் ஆக்கிரம் ஒலித்தது. "வீரர்களே, முதலில் அந்தத் துறவியைக் கொன்று விடுங்கள்!"

பொக்கிஷ அறையை இணைத்த குறுகிய வாயிலின் வழியே காடவ வீரர் பதின்மரும் ஓங்கிய வாட்களுடன் துறவியாரை நோக்கிப் பாய்ந்தனர்.

தம்மருகில் வெறும் ஆபரணங்களே சிதறிக் கிடப்பதையும், வேறு ஆயுதங்களேதும் இல்லாததையும் கவனித்தார் துறவியார். அவருடைய பெருவிழிகள் அருகில் வெளிச்சத்திற்காக எரிந்து கொண்டிருந்த உயரமான பாவை விளக்கின் மீது பதிந்தன. இருவர் சேர்ந்து நகர்த்தக்கூடிய அந்த கனமான வெண்கல விளக்கைப் பற்றி உயர்த்தி, இரு கரங்


களாலும் முழுவேகத்துடன் காடவ வீரர்களை நோக்கி எறிந்தார். இரண்டு மூன்று காடவ வீரர்களை அந்தக் கனமான பாவை விளக்கு வீழ்த்தி விட, வேகத்துடன் பாய்ந்த துறவியார், அடுத்து நின்ற காடவ வீரனின் வாள் பிடித்த கரத்தைப் பற்றி, அதை அவன் உடலிலிருந்து பிய்த்து எறிபவர் போல ஓர் இழுப்பு இழுத் தார்! தரையில் கால்கள் பாவாமல் ஏறக்குறைய பறந்தே சென்ற அந்த வீரன், எதிர்ச் சுவரில் பலமாக மோதி விழுந்தான்! அந்தக் குறுகிய வாயிலை ஏறக்குறைய அடைத்தே நின்ற துறவியாரின் மீது மற்றொரு வாள் இறங்க முற்பட்டது. அதைத் தவிர்க்க, சுழன்று தழைந்து வெகு லாகவமாகத் திரும்பிய துறவியாரை பக்கவாட்டிலிருந்து தாக்கிய மற் றொரு வாள், அவரது இடது புஜத்தில் பதிந்து, வேகத்துடன் முன்புறமாக இழுக்கப்பட்டது.


ஒருகணம் தடுமாறிய துறவியார், அந்தக் காடவ வீரனின் அடுத்த வீச்சைத் தவிர்த்து சுழன்று திரும்பினார். சுழன்ற வேகத்தில் பக்கச் சுவரின் மேல் பகுதியில் பதிந்த அவரது வலது கரத்தில் ஏதோ தட்டுப்பட்டது. நீண்ட கால மாக அங்கேயே தொங்கிக் கொண்டிருந்த வாள் அது. அதைத் தொடுவதற்குக் கூட எந்த சோழ வீரனுக்கும் அருகதையில்லையென அவரே பல திங்களுக்கு முன்பாகக் கூறி யிருந்தார்!

வேங்கி முதல் குமரி வரை ஒரே குடையின் கீழ் ஆண்ட குலோத்துங்களின் அற்புத வாள் அது. அதைத் தொட்டதுமே துறவியாரின் உடலில் மின்னல் பாய்ந்தது. இமைக்கும் நேரத்தின் பாதிப் பொழுதில், அந்த வாளை உருவியவர், திடமாகக் கால்களைப் பதித்து நின்றார். சிம்மத்தின் கர்ஜனையைப் போல் ஓர் ஒலி எழுந்தது அவரிடமிருந்து.

வீரர்களிடம் துறவியாரைக் கொல்ல உத்தரவிட்ட காடவராயன் பின்னர் எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை. அறைக்குள் உருண்டு கிடந்த பேழைகளைப் புரட்டிப் புரட்டிப் பந்தத்தால் ஆராய்ந்தவனின் விழி களில் இறுதியாக அந்தப் பேழை தென்பட் டது. "இந்திர தனுசு" என்று பொறிக் கப்பட்டிருந்த அந்தப் பேழையைப் பாய்ந்து எடுத்தவன், திரும்பிப் படிகளில் ஏறி, மேலே விரைய ஆரம்பித்தான். வளைந்து சுழன்று மேலே ஏறிய படிகளில் நான்காவது வளைவை எட்டும் போதுதான் அவனுக்குக் கீழேயிருந்து ஒரு சிம்மத்தின் கர்ஜனை கேட்டது. அடுத்து காடவ வீரர்களின் அலறல் ஒலிக்கத் தொடங் கியது. வேகத்துடன் படிகளைத் தாவித் தாவிக் கடந்தவன், மீண்டும் சிற்ப மண்டபத்தை அடைந்தான்.

சிற்ப மண்டபத்திலும் வெளியிலும் உக்கிரமான போர் தொடங்கியிருந்தது. பேழை யுடன் இரண்டடி எடுத்து வைத்தவன், ஏதோ மின்னலால் தாக்குண்டவன் போல சட் டென்று நின்றான். சிற்ப மண்டபத்தின் வாயில் வழியே அதிவேகமாக நுழைந்து கொண்டிருந்தான் யுவான். கடல் நாகம் பதித்த அந்தப் பதக்கம் சீற்றத்துடன் விழிக்க, அந்த சீனத்து வாள் அசாத்திய வேகத்தில் சுழன்று காடவ வீரர்களைப் பட்பட்டென்று சரித்துக் கொண்டே முன்னேறத் தொடங்கியிருந்தது. யுவானின் சிறு விழிகள் தன்னையே நோக்கு வதையும் அவன் வாளின் வேகம் கூடுவதையும் கவனித்த காடவராயனுக்கு நெருங்கி வரும் அபாயம் புரிந்ததால் கரத்திலிருந்த பேழை யையும் மண்டபத்தின் பல்வேறு பகுதி களையும் மாறி மாறி நோக்கி விழித்தான். அவன் பார்வையில் மண்டபத்தின் ஒரு கோடியில் பூங்கோதை காடவ வீரர்களுக்கு இடையே நிற்பதும், கொங்கு மன்னன் அவநிதன் ஆவேசமாக வாளை வீசிக் கொண் டிருப்பதும் புலப்பட்டது. என்ன செய்ய வேண்டுமென்பதை உடனே தீர்மானித்த காடவராயன், தன் கரத்திலிருந்த பேழையை உபதலைவன் ஒருவனிடம் அளித்து விட்டுப்





"நேயர்களே ஆயுத பூஜையையொட்டி இன்று சிறப்பு நிகழ்ச்சியாக பிளேடு பக்கிரி, பிச்சுவா பிச்சுமணி, ஹாக்ஸா ஹரி, சைக்கிள் செயின் சிங்காரம் ஆகியோரைச் சந்திப் போமா?"

— அலமு

பூங்கோதையை நோக்கிப் பாய்ந்தான். அவன் கரத்தைப் பற்றி முரட்டுத்தனமாக இழுத்தவன், தன் வாளை உயர்த்தி அவள் கழுத்தில் பதித்து யுவானை நோக்கி இரைந்தான்: "யுவான், இன்னும் ஓர் அடியெடுத்து வைத்தாலும் இந்த வாள் இளவரசியின் உயிரைக் குடித்து விடும். அங்கேயே நில்."


வாட்கள் மோதிய ஒலிகள் சட்டென்று ஓய்ந்து மண்டபத்தில் அமைதி நிலவியது. அவநிதனும் யுவானும் சோழ வீரர்களும் அசைவற்று நிற்க, இளவரசியை இழுத்தபடி வாயிலை நோக்கி ஓடினான் காடவராயன். வெளியில் இன்னும் உக்கிரமான போர் நடந்து கொண்டிருக்க, தூரத்தில் போர் ரதமொன்றில் காடவமன்னனை விடுவித்து விட்ட வீரர்கள், தன்னை நோக்கி வருவதையும் கவனித்தான். பூங்கோதையையும் இழுத்தபடியே படிகளில் இறங்கியவன், ரதத்தை நோக்கி விரைய ஆரம்பித்தான்.

சிற்ப மண்டபத்திலிருந்து காடவராயனைப் பின்தொடர்ந்து வந்த யுவானைப் படிகளிலேயே காடவ வீரர்கள் சூழ்ந்து கொண்டனர். தனது கண்ணெதிரிலேயே இளவரசியைக் காடவராயன் கடத்திச் செல்லவிட்டால் பிறகு ஆதித்யனும் இளைய பாண்டியரும் தன்னை மன்னிக்கவே மாட்டார்கள் என்பதை உணர்ந்தாலும், அபாயமின்றி இளவரசியை மீட்க வழியை சிந்தித்தபடியிருந்தான் அவன். மஞ்சள் முகத்தில் சீற்றம் அதிகரித்திருந்தது. நெருங்க முயன்ற காடவ வீரர்களை மளமளவென்று அவனுடைய வாள் சரித்துக் கொண்டே வர, காடவராயனை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தான் யுவான்.

அதே சமயத்தில், துறவியார் குருதியில் நனைந்த நீண்ட வாளுடன் சிற்ப மண்டபத்தில் தோன்றினார். உடலெங்கும் வழிந்த குருதியையும், இடதுபுஜத்திலிருந்து குருதியைப் பொங்க விட்ட காயத்தையும், சிவந்து கிடந்த அவரது பெருவிழிகளையும், அவரது வயிற்றும், துறவி உடைக்கும் சற்றும் பொருந்தாமல், காடவ வீரர்களைச் சரமாரியாக வெட்டிச் சாய்க்கத் தொடங்கிய அந்த வாள் வேகத்தையும் கண்ட சோழ வீரர்களும், அவநிதனும் கால ருத்திரன் இப்படித்தானிருந்திருக்க வேண்டும் என்றே தீர்மானித்தார்கள். சிற்ப மண்டபத்திலிருந்த காடவ வீரர்களை துவம்சம் செய்தவாறே துறவியார் வாயிலை நோக்கி விரைந்தார்.

காடவ கோப்பெருஞ்சிங்கனிருந்த ரதத்தை நெருங்கிவிட்ட காடவராயன், இளவரசியை ரதத்தில் காடவ மன்னனிடம் தள்ளி, உபதலைவனிடமிருந்த இந்திர தனுசு பேழையையும் ரதத்தினுள் வைத்து விட்டுத் திரும்பினான். யுவானிருந்த திசையில் பார்வையைச் செலுத்தியவன், அந்த சீனத்து வாள் மின்னல் வேகத்தில் சுழல்வதையும், காடவ வீரர்கள் வரிசையாகச் சரிந்து விழுவதையும், சொற்பமாக இருந்தாலும் சோழ, பாண்டிய வீரர்கள் தனது வீரர்களைப் பலமாகத் தாக்குவதையும் கண்டான். அவன் மனத்தில் ஆத்திரம் பொங்கியது. சிற்ப மண்டபத்துப் படிகளில் துறவியாரும் காடவ வீரர்களைத் தீர்த்து விட்டு வந்து கொண்டிருப்பதைக் கண்டவனின் நிதானம் அறவே தொலைந்து போனதால் இருவரில் ஒருவரையாவது கொன்று பழிவாங்கிவிடுவது என்று தீர்மானித்தான். அருகிலிருந்த உபதலைவனிடமிருந்து ஈட்டியொன்றைப் பிடுங்கியவன், சற்று நெருக்கத்தில் போராடிக் கொண்டிருந்த யுவானைக் குறி வைத்துப் பலமாக வீசினான்.

(தொடரும்)



"இந்த ஆயுதமெல்லாம் பூஜையிலே வைக்கணும்னு பய ஒரே பிடிவாதம்!"

- மலர்



செய்திகள், வாசிப்பது செம்பியன்...

உ.பி. தேர்தலில் எந்தக் கட்சிக்கும் முழு மெஜாரிட்டி கிடைக்கவில்லை. உள்ளதற்குள் பி.ஜே.பி. மிக அதிகமான இடங்களைப் பெற்றிருந்த போதிலும், ஆட்சி அமைக்குமானால், மத்தியில் சில மாதங்களுக்கு முன் நடந்தது போலவே, நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்றுப்போகும். ஆக, ஆட்சி அமைக்காமலிருப்பதே மேல். ஆனால் அத்வானி ஒரு பிடிவாதத்துக்காக, பி.ஜே.பி.யைத்தான் முதலில் ஆட்சி அமைக்க ஆளுனர் அழைக்க வேண்டும் என்று கூறலாம். இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமது "ஹிந்துத்வா" கொள்கையைக் கழற்றி விட்டு விட்டால், மத்தியிலும், பல மாநிலங்களிலும் நிலையான, சிறந்த ஆட்சியை அமைக்க பி.ஜே.பிக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இதை எப்போதுதான் அக்கட்சியின் தலைவர்கள் புரிந்துகொள்ள போகிறார்களோ?

பி.ஜே.பி.யை அடுத்து, அதிக இடங்கள் பெற்றுள்ள ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்க, அதற்கு மூன்றாவது இடத்திலுள்ள காங்கிரஸ் - பி.எஸ்.பி. கூட்டணி ஆதரவு அளிப்பதுதான் தர்ம நியாயமாக இருக்கும். ஆனால் பி.எஸ்.பி. கூட்டணியானது ஆட்சி அமைக்க, அதற்கு ஐக்கிய முன்னணி ஆதரவு தரும் நிலைக்குத் தள்ளப்படும். மத்தியில் காங்கிரஸின் ஆதரவைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள ஐக்கிய முன்னணி இந்த விலையைக் கொடுக்கும். மாயாவதி முதல்வராவது 99 சதம் உறுதி. மிகக் குறைந்த இடங்களைப் பெற்று, மூன்றாவது இடத்திலுள்ள அணி ஆட்சி அமைப்பது என்பது ஜனநாயகத்தையே தலைகீழாக மாற்றுகிற விஷயம். இத்தகைய அபத்தம் இந்திய ஜனநாயகத்தில் அன்றி உலகில் வேறு எங்குமே நடக்காது. இருகட்சி ஜனநாயகம் நோக்கி நாம் முன்னேறாத வரை இந்த முரண்பாடு தொடரும்.

பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ்வின் மாட்டுத் தீவன ஊழல் பிரதம கணக்காயரின் பலத்த கண்டனத்தைப் பெற்றுள்ளது. தவிரவும், இந்த ஊழலை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பாட்னா உயர்நீதி மன்றம், ஸி.பி.ஐ. உயர் அதிகாரி பிஸ்வாஸைக் கேட்டுக் கொண்டிருந்தது. அதன்படி பிஸ்வாஸ் தயாரித்த அறிக்கையை வாங்கிப் பார்த்த ஸி.பி.ஐ. தலைவர் ஜோகிந்தர் சிங், அதில் சில இடங்களை இருட்டடிப்பு செய்தும் சில இடங்களை மாற்றியும் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கச் செய்தார். இதனால் வெறுப்படைந்த பிஸ்வாஸ், அறிக்கைக்குத் தாம் பொறுப்பு ஏற்க முடியாது என்றதுடன், தமக்கும் ஜோகிந்தர்சிங்குக்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்தையும் பாட்னா உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்து விட்டார். உயர்நீதி மன்ற நீதிபதிகள் கொதித்துப் போயினர். இவ்வாறு ஜோகிந்தர் சிங் தலையிட்டு, 'அறிக்கையிலிருந்து சதித்திட்டம் பற்றிய பகுதியை நீக்கியது பெரும் தவறு; அவரது இந்த நடத்தை நீதிமன்றத்தையே அவமதிப்பதாகும்' என்றெல்லாம் அழுத்தம் திருத்தமாகக் கண்டித்துள்ளனர். இந்நிலையில் ஜோகிந்தர் சிங் மானமுள்ளவராக இருந்தால் ராஜினாமா செய்திருக்க வேண்டும். ஆனால் நடப்பது என்ன? 'உயர்நீதி மன்றத்தின் கண்டனம் முறையற்றது; இதனை வாபஸ் பெறுமாறு உச்சநீதி மன்றம் உத்தரவிட வேண்டும்' என்பதாக ஸி.பி.ஐ. உச்சநீதிமன்றத்தில் முறையிடுகிறது! மத்திய அரசின் ஆதரவுடனும் ஆசிகளுடனும் நடக்கும் இந்த அவல நாடகத்தின் பின்னணி என்ன? அரசியல்! ஜனதா தளத்தின் தலைவர் லல்லு பிரசாத் யாதவ். அவர் தயவு ஆட்சியில் நீடிக்க தேவேகௌடாவுக்குத் தேவை. ஆகமொத்தத்தில் நீதி நிலைக்க வேண்டும் என்பதை விட, தாங்கள் ஆட்சியில் நிலைக்க வேண்டும் என்பதே நமது தலைவர்களுக்கு முக்கியமானதாகப் போய்விட்டது. நல்லவேளையாக நமது நீதிபதிகள் இதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார் என்றாலும் ஒரு நிமிஷமேனும் கைதானார் என்பதே பெரிய அவமானம் தான். ஆனால் சுரணை உள்ளவர்களுக்கல்லவா அந்தக் கவலை? 'யானோ பிரதமர்? யானே கள்வன்!' என்று துடிதுடித்து ராவ் சரிந்து விடப் போகிறாரா என்ன? உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை 64 விதமான திடீர் நோய்கள் தமக்கு வந்து விட்டதாகக் கணக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் கோர்ட்டுக்கே போகாமலிருக்க என்னென்ன ஓட்டைகள் சட்டத்தில் உள்ளன என்று அவரது வழக்கறிஞர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் கேட்டவை - தராசு

● பி. ராஜேந்திரன், ஹைதராபாத் - 31.

? மன்மோகன் சிங் என்ன செய்து கொண்டிருக்கிறார்...?

! காங்கிரஸ் காரிய கமிட்டிக்கு வந்து சேர்ந்திருக்கிறார். மேலும் முக்கிய பொறுப்பு அவரை எதிர்நோக்குகிறது என பயமுறுத்துகிறார்களே! அவர் ஒருத்தர் யோக்கியமாக இருப்பது இதர காங்கிரஸ்காரர்களின் கண்களை உறுத்துகிறது போலும்!

● வ. திருநாவுக்கரசு, தெங்கால் அஞ்சல்.

? உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர்கள் போஸ்டர் மற்றும் நோட்டீஸ்களில் 'ஜெ' பெயரையும் படத்தையும் பயன்படுத்த பயப்படுகிறார்களாமே...?

! நிஜம்தான். பல இடங்களில் வாக்குக் கேட்டு வழங்கப்படுகிற துண்டுப் பிரசுரங்களில் எம்.ஜி.ஆர். படமும் இரட்டை இலைச் சின்னமும் அவற்றுடன் வேட்பாளர் படமும்தான் இருக்கின்றன. 'ஜெ' படம் போட்டால் எடுபடாது என்று அவர்களுக்குத் தெரியாதா என்ன...?

● கே. எம். ரவிச்சந்திரன், மதுரை - 20.

? அண்மையில் தங்கள் மனத்தை வருத்தமடையச் செய்த நிகழ்ச்சி...?

! விஷச் சாராய சாவுகளுக்குக் காரணம், உள்ளாட்சித் தேர்தல் வேட்பாளர் ஒருவர் தமக்கு ஆதரவு தேட, கள்ளச்சாராய விநியோகத்தில் ஈடுபட்டதுதான் என்கிற செய்தி...

● அழகன், பட்டுக்கோட்டை.

? 'பால் வற்றித் தவிக்கும் தாய் போல தான் உள்ளேன்; பாலுக்காக அழும் குழந்தைகள் போல தொண்டர்கள் இருக்கிறார்கள்.... காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரியுங்கள்' என்று குமரி அனந்தன் உருக்கமாக வேண்டியுள்ளாரே?

! சட்டமன்றத் தேர்தலின்போது பணப்பால் ஏகமாகச் சுரந்ததே... அப்போதும் மக்கள் ஒன்றும் ஆதரிக்கக் காணோமே? வார்த்தை ஜாலங்களில் மக்கள் மயங்கிய காலம் மலையேறி விட்டது.

● சூர்யநிலா, சேலம் - 2.

? காங்கிரஸ் விரல் அசைத்தால் தமது அரசு காணாமல் போய்விடும் என்பது தெரிந்தும், 'எங்கள் அரசு பாறை போல் உள்ளது. அதை அசைக்க முடியாது' என்கிறாரே தேவேகௌடா... சிரிப்பாக இல்லை?

! இல்லை. காங்கிரஸின் பலவீனம்தான் தமது பலம் என்று அவர் உணர்ந்திருக்கிறார்.

● சுதந்திரச் செல்வன், சித்தமல்லி.

? 'டிராக்டர்'- இதற்கு தமிழில் என்ன பெயர்...?

! மேல்நாட்டுத் தயாரிப்பான டிராக்டரை நாம் ஏற்கும்போது, டிராக்டர் என்ற பெயரை மட்டும் ஏற்கத் தயங்குவானேன்...?

● செல்லம் பூ. கிருஷ்ணன், மணலூர்ப்பேட்டை.

? பிரபல பத்திரிகைகளுக்கு ஜெயலலிதா எழுதிக் கொண்டிருக்கும் கண்டனக் கடிதங்கள் எதைக் காட்டுகின்றன?

! அவர் நெருக்கடியில் சிக்கியிருப்பதால் அஸ்தியில் ஜுரம் கண்டிருப்பதை!





* பயமுறுத்தல்


* வாய்ப்பு என்ன...?

கேசரி பிரதமராவாரா...?

● ஏ. பாலமுருகன், திருநெல்வேலி - 8.

? கடவுள் மனிதனைப் படைத்தான். மனிதன் பல அற்புதங்களைக் கண்டுபிடித்தான். ஆனால் மனிதன் கண்டுபிடித்த பணம் மட்டும் மனிதனை மனிதத்தன்மையற்ற செயல்களில் ஈடுபட வைக்கிறதே... ஏன்?

! ஆண்டவன் படைப்பிலும் சரி, மனிதரின் படைப்பிலும் சரி, பல அற்புதங்கள் உள்ளன. அவற்றை சரியான முறையில் அளவாகப் பயன்படுத்தும்போது பிரச்னை இல்லை. அவற்றையே தவறான முறையில் பயன்



• சூப்பர் பல்டி!

• படத்தைக் காணோம்






• விபரீத அர்த்தம்

• வைராக்கியம் விரிசலடையுமா?





• உணர்ந்து பேசினார்

படுத்துவதன்மூலம், தனக்குத் தானே அழிவைத் தேடிக் கொள்கிறான் மனிதன். இது பணத்துக்கு மட்டுமல்ல... எல்லா அம்சங்களுக்குமே பொருந்தும்.

● **புளியரை கணேசன், சென்னை - 30.**

? அரசின் முக்கியமான நியமனங்கள் குறித்து, காங்கிரஸ் தலைமையைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று கேசரி எச்சரிக்கை விடுத்துள்ளாரே...?

! தேவேகௌடாவின் தன்மானத்துக்கு விடப்பட்ட சவால்.

● **எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.**

? 'ஹைதராபாத்திலுள்ள பன்னிரண்டு ஏக்கர் திராட்சைத் தோட்டத்தைத் தவிர, பிற மாநிலங்களில் எந்தச் சொத்தும் எனக்குக் கிடையாது' என்று ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?

! பிற நாடுகளில் இருக்கிறதோ என்னவோ!

● **எம். எஸ். மீரா, தூத்துக்குடி - 2.**

? 'இளைஞர்கள் கெட்டுப்போக நான் தூண்டுதலாக இருக்க மாட்டேன். இனி வரும் படங்களில் சிகரெட் குடிப்பது போல் நடிக்க மாட்டேன்...' என்று நடிகர் கமல்ஹாசன் கூறியது பற்றி....?

! அதே வைராக்கியம் காதல் காட்சி, டூயட், டான்ஸ் மூவ்மெண்ட்ஸ் முதலியவற்றில் கண்ணியம் காப்பது குறித்தும் ஏற்பட்டால் மேலும் நல்லது.

● **ஆர்.கே.எஸ். சங்ககனி, டி. மாரியூர்.**

? 'ஊழல் செய்யவில்லை; என் தந்தை அப்பாவி; நேர்மையானவர்' என்று முன்னாள் பிரதமரின் மகன் ரங்காராவ் பேட்டி அளித்துள்ளாரே?

! வேலிக்கு ஓணான் சாட்சி!

● **ஜோதி, சென்னை - 47.** ❐

? காலத்தின் கட்டாயத்தால் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாகத்தானே இத்தனை பணம் தின்ற பெருச்சாளிகளும் பிடிபட்டிருக்கிறார்கள்! ஆட்சி மாற சந்தர்ப்பம் ஏற்பட்டிராவிட்டால் அவர்கள் ராஜ்யம் அது பாட்டுக்கு அமோகமாகக் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்திருக்கும் இல்லையா...?

! அதுதான் ஜனநாயகத்துக்கும் யதேச்சாதிகாரத்துக்கும் இடையே உள்ள வித்தியாசம். கொடிய சர்வாதிகாரியை மக்கள் புரட்சி அல்லது ராணுவப் புரட்சிதான் அப்புறப்படுத்த முடியும். ஆனால், ஜனநாயகத்தில், தலைக்கனம் ஏறிய தலைமையை மக்களின் வோட்டுக்களே நீக்கிவிடும்.

● **ச. ஜான் ரவி, கோவில்பட்டி.**

? நாங்கள் சுடுகாட்டுக்குப் போனாலும் போவோமே தவிர, ஜெயலலிதாவை விட்டுப் போக மாட்டோம் என்று சேடப்பட்டி முத்தையா கூறியுள்ளாரே?

! ஐய்யயோ! தலைவியையும் அழைத்துக் கொண்டுதான் அங்கே போவோம் என்றல்லவா அர்த்தமாகிறது!

● **இரா. திலீப், திருச்சி - 14.**

? பல்டியில் உம்மைக் கவர்ந்த பல்டி....? (சு. சுவாமி என்கிற பதில் வேண்டாம்...)

! சுக்ராமின் அந்தர் பல்டிதான்! 'பணம் யாருடையது என்று இந்தியா திரும்பிய பிறகு சொல்வேன்...' என்றார். இந்தியா வந்த பிறகு அது கட்சிப் பணம் என்றார். இப்போது, தம் மீது பழி சுமத்துவதற்கென்று தமது வீட்டில் கொண்டு வந்து வைக்கப்பட்ட பணம் என்கிறார். வழக்கு முடிவதற்கு முன் இன்னும் எத்தனைவித மாற்றமோ!

● **சு. கந்தையா, நாகர்கோவில்.**

? அடுத்த பிரதமராகும் வாய்ப்பு சீதாராம் கேசரிக்கு இருக்கிறதா...?

! அவருக்கு அப்படி ஓர் ஆசை இருந்தாலும் அதை நடக்கவிடாமல் செய்வதில் இதர காங்கிரஸ் தலைவர்கள் மிக ஒற்றுமையாக இருப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

❐ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஜோதி,
17, டிஎன்.எச்.பி.,
சானடோரியம், தாம்பரம்,
சென்னை - 600 047.

பாலம் பாலம் பாலம்

●● *1989 முதல் 95 வரை ஏழு ஆண்டுகளில் இந்தியாவில் என்னென்ன தபால் தலைகள் புதிதாக எந்தெந்த நாட்களில் வெளியாகின? விவரம் தெரிவிக்க அன்பர்களை வேண்டுகிறேன்.*

ந.சேதுராமன்,
11, கணபதி அக்ரஹாரம்,
கொடுமுடி – 638 151

●● பழமலய் கவிதைகள் குறித்து எம்.பில். ஆய்வு செய்து வருகிறேன். அவரது கவிதைத் தொகுப்புகள், கட்டுரைகள், விமர்சனங்கள், கடிதங்கள், அரிய தகவல்கள் வைத்திருப்போர் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

மு.கா.நெடுமாறன்,
393, கோவிந்தசெட்டி தெரு,
காவேரிப்பட்டணம் (அ),
தருமபுரி மாவட்டம் - 635 112

●● என்னிடம் பல்வேறு நாடுகளின் கரன்சிகள் உள்ளன. பழைய கரன்சி நோட்டுகளை விரும்பி சேகரிப்போர் தொடர்பு கொள்ளலாம்.

ஜே.அல்பினார்,
19A, பெரியார் நகர்,
கரூர் – 639 002.

●● கவிஞர் அடியார், "மனைவி" என்ற தலைப்பில் தொடர்ந்து கவிதைகள் எழுதி வந்தார். அவை நூல் வடிவம் பெற்றிருந்தால் கிடைக்குமிடம் தெரிவிக்க வேண்டுகிறேன்.

ச.நாகராஜன்,
பாலா இல்லம்,
பெரியார்நகர் விரிவாக்கம்,
விராலிமலை – 621 316.

●● என் தந்தை பிரம்மஸ்ரீ வேணுகோபால தீட்சிதர் 1968க்கு முன் பதிவு செய்த சாம வேத பாராயண கேஸட் கிடைக்குமானால் தயவு செய்து தெரியப்படுத்தவும்.

ஏ.பி.ராஜேந்திரன்,
D-12, 3-வது தெரு,
லக்ஷ்மிநகர், நங்கநல்லூர்,
சென்னை – 600 061.

●● பிப்ரவரி 1994, செப்டம்பர் 1995 ரீடர்ஸ் டைஜெஸ்ட் இதழ்கள் இருந்தால் விலை குறிப்பிட்டு எழுதவும்.

வி.எஸ்.கேதாரி சிவசங்கர்,
ஆங்கில ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேநிலைப்பள்ளி,
புவனகிரி – 608 601.

●● இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் சேகரித்த இந்தியா மற்றும் பல வெளிநாட்டு தபால் தலைகள் உள்ளன. விலைக்குத் தர உத்தேசம்.

மா. வெயிலு முத்து,
வி.கே.காம்ப்ளெக்ஸ், மெயின்ரோடு,
டி.வாடிப்பட்டி – 625 218.

●● பி.ஏ.லைக்காலஜி மூன்றாம் வருடம், அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பயின்றவர்கள் Subject notes, study materials அனுப்பி வைத்தால் நன்றியுடன் ஏற்பேன்.

த.சிவமுருகன்,
37, சன்னதி வீதி, ஸ்ரீமுஷ்ணம் – 608 703.

●● வண்டலூர், மண்ணிவாக்கம் கிராமத்தில் 53 வீட்டுமனைகள் உள்ளடங்கிய விக்னேஸ்வரபுரம் லே அவுட்டில் 1965லிருந்து இன்றுவரை எவரும் வீடு கட்டவில்லை. பிளாட் வாங்கியவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டால் கூட்டு முயற்சியில் இனியாவது அந்த நிலத்தைப் பயன்படுத்தலாம்.

கா.தி.புவி.அரசு,
NH1, மறைமலைநகர் 603 209


●● சிட்டி-சிவபாத சுந்தரம் சேர்ந்து எழுதிய "தமிழ்-சிறுகதை வளர்ச்சியும் வரலாறும்' நூல் வைத்திருப்பவர்கள் விலைக்குத் தரக் கூடுமானால் நன்றியுடன் ஏற்பேன்.

சா. பாலசுப்பிரமணியம்.
2/3 சுப்பராயர் அக்ரஹாரம்
காக்கா தோப்புத் தெரு அருகே,
மதுரை – 625 001.

●● 1976ம் வருடம் சென்னையில் மஞ்சள் காமாலை நோயால் தெருவில் மயங்கி விழுந்த எனக்கு, ராணிமேரி கல்லூரி மாணவி உதவினார். பிறகு, ஆஸ்பத்திரியில் மறுபடி சந்தித்து உதவ முன் வந்தார். தன்மானம் கருதி அந்த உதவியை நான் ஏற்கவில்லை." இப்போது ஒரு விபத்தில் வலது கையில் முக்கிய மூன்று விரல்களை இழந்து சிரமப்படுகிறேன். தற்சமயம் அந்தப் பெண்மணி உதவ நினைத்தால் ஏற்கச் சித்தமாய் இருக்கிறேன்.

வெ.க.சுந்தரம்,
1/74 ஆழ்வார் வீடு,
ரவணசமுத்திரம் – 627 424.

சும்மா இருப்பாரா சரத்பவார்?


• ராவ்

பிரதமர் தேவே கௌடா, பதவி ஏற்றுக்கொண்ட பிறகு, நரசிம்மராவை இதுவரை 26 தடவை சந்தித்துப் பேசியிருக்கிறார் என்று ஒரு கணக்கு. நாலு மாதத்தில் இத்தனை தடவை ராவைச் சந்தித்துப் பேசி இருக்கிறவரை, ராவ் தாமாகச் சென்று ஒருமுறை கூட சந்தித்ததில்லையாம். இதற்கெல்லாம் கூடப் புள்ளி விவரங்கள் வைத்திருக்கிறார்கள் தில்லிப் பத்திரிகையாளர்கள்! இவர்கள் 'உறவு' இப்படியிருக்க, ராவ் விஷயத்தில் தயவோ, பரிவோ காட்டக் கூடாது என்று


• லல்லு

இடதுசாரிக் கட்சிகள் சொல்லி வருகின்றன. மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு ஒரு படி மேலே போய், ராவை அரெஸ்ட் செய்வதில் தயக்கமே காட்டக் கூடாது என்று அறிவித்திருக்கிறார்!

● இரண்டு வருடங்களுக்கு முன், ராவுக்கு உடல்நலம் சரியில்லை என்று செய்தி வெளியானவுடன், அது உண்மை அல்ல என்று வன்மையாக மறுத்தனர் பிரதமர் அலுவலக அதிகாரிகள். குறிப்பாக, அவரது பத்திரிகைத் தொடர்பாளர் பி.வி.ஆர்.கே. பிரசாத். இப்போது வழக்குகளில் மாட்டிக்கொண்டு தவிக்கும் ராவுக்கு, டயபடீஸ், ஹைபர்டென்ஷன் என்று ஒரு பட்டியலே கொடுக்கிறார்கள் அவரது வக்கீல்கள்!

● நரசிம்மராவ் நாடாளுமன்றக் காங்கிரஸ் தலைவர் பதவியைத் துறந்தால், அதைக் கைப்பற்ற பவார், வெங்கடசாமி, விஜயபாஸ்கர ரெட்டி ஆகிய மூவரும் போட்டியிடுவார்கள் என்ற செய்தி ஒருபுறம்.


• ம.மோ. சிங்

இன்னொருபுறம், ஓசைப்படாமல் கேசரி மன்மோகன்சிங்கை காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இழுத்துப் போட்டிருக்கிறார். அநேகமாக மன்மோகன் சிங்கைத்தான் நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவராக கேசரி நியமிப்பார் என்கிறார்கள். பவார் சும்மா இருக்க மாட்டார்!


• சரத்பவார்

● லல்லு பிரசாத் யாதவ்வின் பெயர் கால்நடைத் தீவன ஊழலில் அடிபட்ட உடனே தம் பெயர் எந்த ஆவணத்திலும் வராமல், வெகு சாமர்த்தியமாகச் சமாளித்தார் லல்லு. ஆனால் அவரது பெயர் சி.ஏ.ஜி.யின் விசாரணை ரிப்போர்ட்டில் வெளியானது தெரிந்ததும், பயந்து போய் உடனடியாக ஒரு பெரிய குழுவுடன் தில்லி வந்து பிரதமரைச் சந்தித்திருக்கிறார். ராவை எப்படியாவது காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் கௌடா, லல்லுவையும் கைவிட மாட்டார் என்கிறார்கள்.

- நியூஸ்வாலா

"மீண்டும் 'இணைப்பா'? ஐயோ, வேண்டாம்!"

மூன்றரை மணி நேரம் பயணம் செய்தால் போதும், சிங்கப்பூரை எட்டிப் பிடித்து விட முடியும். ஆனால் முப்பது ஆண்டு பயணம் செய்தாலும் அந்த நாட்டின் வளர்ச்சியை நம்மால் எட்ட முடியுமா? சந்தேகம்தான்.

சிங்கப்பூர் அரசியல்வாதிகள் தங்கள் நாட்டின் வளர்ச்சி விகிதத்தை கண் கொத்திப் பாம்பாக கண்காணித்துக் கொண்டிருப்பவர்கள். நாட்டின் வளர்ச்சி என்பதை அண்டர்லைன் பண்ணிக் கொள்ள வேண்டும்.

அப்பேர்ப்பட்ட நாட்டிலேயே இப்போது ஒரு சிறு சலசலப்பு. வருடத்துக்கு ஏழு முதல் எட்டு சதவீத வளர்ச்சி என்பது சாதாரண சாதனை அல்ல. சமீபகாலமாக இந்த வளர்ச்சியில் சிறு தொய்வு.

சிங்கப்பூர் மக்கள் சோம்பேறிகளாகி விடுவார்களோ என்று அந்நாட்டுத் தலைவர்களுக்கு அச்சம் தோன்ற ஆரம்பித்து விட்டது.

லீ க்வான் யூ சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர். சிங்கப்பூர் பிரதமர் என்பது அவர் வகித்த பதவி மட்டுமே. ஆனால் சிங்கப்பூரின் பிதாமகர் என்பது மக்கள் அவருக்குத் தந்துள்ள நிரந்தரப் பதவி. நவீன சிங்கப்பூரின் சிற்பி அவர்.

சென்ற ஜூன் மாதம் வெளிநாட்டு பத்திரிகையாளர் கூட்டமொன்றில் லீ க்வான் யூ பேசியபோது "இப்படியே போனால் மலேசியாவுடன் சிங்கப்பூர் மீண்டும் இணைய வேண்டி வரலாம்" என்று சுருக்கமாய் ஒரு கருத்தை வெளியிட்டார்.

அவ்வளவுதான்.. மக்கள் மனதில் இது பல்வேறு எண்ணங்களைக் கிளறிவிட்டது.

ஒரு சின்ன ஃபிளாஷ்பேக். 1965வரை மலேசியா (அப்போ மலேயா)வின் ஒரு பகுதியாகவே சிங்கப்பூர் இருந்தது.

பயங்கரமாய் வெடித்த இனக்கலவரங்கள், வன்முறை காரணமாக சிங்கப்பூர் பிரிந்தது. 'பிரிக்கப்பட்டது' என்றாலும் தப்பில்லை.

அதன்பின் சிங்கப்பூரின் வளர்ச்சி ஒரு சரித்திர சாதனை. 21-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகின் மிக முன்னேறிய நாடுகளின் பட்டியலில் இடம் பெறும் அந்தஸ்து சிங்கப்பூருக்குக் கிடைத்துவிடும் என்கிறார்கள்.

வளர்ச்சியில் காணப்படும் ஒரு சிறு தொய்வைக்கூட உடனே சரிப்படுத்திவிட வேண்டும் என்கிற வேகத்தில் மக்கள் மீது எய்யப்பட்ட அஸ்திரம்தான் இந்த மலேசியாவுடன் மீண்டும் இணைவது!

பிரதமர் கோ சோக் டாங் அவர்களும் கருத்தை மீண்டும் வெளியிட்டு மறுபடியும் மக்களை உலுக்கி இருக்கிறார்.

"மலேசியாவுடன் சேர்ந்தால் பெரிய அளவில் உலக மார்க்கெட்டைப் பிடிக்க முடியும் என்கிற பொருளாதார சிந்தனையின் வெளிப்பாடே இந்த இணைப்புக் கருத்து என்கிறார் அவர்.

"சரிதான். இதில்கூட ஒரு பாயிண்ட் இருக்கத்தான் செய்கிறது" என்று சிங்கப்பூரின் இளைய தலைமுறையில் ஒரு பகுதி கருதுகிறது.

"போதும்டா சாமி. 1960களில் இனக் கலவரத்தில் பட்டபாடு போதும். மீண்டும் மலேசியாவுடன்.... ஐயய்யோ" என்கிறது முதிய தலைமுறை.

வேண்டாம் என்பது தான் மெஜாரிட்டி.

"சரி... அப்படியானால் உழையுங்கள். நாட்டை இன்னும் முன்னேற்றிக் காட்டுங்கள். மலேசியாவுடன் இணைந்தால் நம்மால் பெற முடியும் என்று நினைக்கிற வளர்ச்சியை இணையாமலேயே பெற்றுக் காட்டுங்கள்." என்று மறைமுகமாக உசுப்பி விட்டிருக்கிறார்கள் லீக்வான் யூவும், பிரதமரும்.

இந்த அணுகுமுறை பலனளிக்காமலா போகும்?

— ராணிமைந்தன்



• கோ சோக் டாங்



இப் புகைப்படத்தில் காணும் எண்ணற்ற குழந்தைகள் சிவானந்த குருகுலத்தில் சேர்க்கப்பட்டு அன்பும், அரவணைப்பும் கிடைக்கப் பெற்று இலவச கல்வி, உணவு, உடை, இருக்க இருப்பிடம் அளிக்கப்பட்டு தங்களுடைய கருணையால் அமைதியான சூழ்நிலையில் வளர்கின்றனர்.

இப்படிப்பட்ட எண்ணற்ற சிறார்களுக்கு மனமகிழ்ச்சி தருவது தங்களுடைய அன்பும், ஆசியும், பொருளுதவியும்.

வருகின்ற தீபாவளித் திருநாளை புத்தாடை, இனிப்பு பட்டாசுகளுடன் சிறப்பாக கொண்டாட உங்கள் உதவியை நாடுகிறோம். இத்தீபாவளித் திருநாளை தங்கள் குடும்பத்தாருடன் மகிழ்ச்சியுடனும், குதூகலத்துடனும் கொண்டாட எங்கள் பிரார்த்தனையுடன் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவானந்த ஆசிரமத்திலுள்ள சுமார் 200 ஆதரவற்ற குழந்தைகளும், முதியோர்களும் இந்தத் தீபாவளி திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட பொதுமக்கள் மனமுவந்து உதவுமாறு வேண்டுகிறோம். இதனைப் படிக்கும் தாங்கள் தங்களுடைய காணிக்கையாக ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் தலா ஒரு ரூபாய் இவ்வறப்பணிக்கு அர்ப்பணம் செய்தால், இத்திருப்பணி தங்கள் ஆசியுடன் பரிபூரணமாக நிறைவேறும் என்பதோடல்லாமல் இந்நாட்டில் உள்ள அனைத்து ஆதரவற்றோரும் பயன்பெறுவர்.

சிவானந்த ஆசிரமத்திற்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமானவரி இலாகாவின் பிரிவு 80G படிவத்தின்படி விலக்கு சான்றிதழ் உண்டு.

பொதுமக்கள் அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடை - பணம், பொருள் எதுவாக இருந்தாலும் இக் குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாக அல்லது பொருட்களாக.

நிர்வாகி,
"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"
நெ. 20 கம்பர் தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 058.
தொலைபேசி எண்கள் : 2369078, 2369444.

ஆண்களுக்கு அணிகலன்!





உலகம் முழுவதும் தங்கச் சந்தையை உன்னிப்பாக கவனித்து வரும் உலக தங்க கவுன்சில் (World Gold Council) சமீபத்தில் ஒரு புள்ளி விவரம் வெளியிட்டுள்ளது.

1993-ல் 405 டன் தங்கம் இந்தியாவில் அதிகாரபூர்வமாக விற்பனை ஆகியுள்ளது. இதுவே 1994-ம் ஆண்டு 415 டன்னும் 1995-ம் ஆண்டு 477 டன்னும் விற்பனை ஆகியுள்ளது. (இது போக,கணக்கில் வராத கடத்தல் தங்கம் எவ்வளவு இருக்கும் என்று கணக்கிட முடியவில்லையாம்.) இந்த ஆண்டின் விற்பனை கிட்டத்தட்ட 500 டன் வரை செல்லக்கூடுமாம். இது உலகத் தங்க சந்தையின் மொத்த விற்பனையில் கிட்டத்தட்ட பதினைந்து சதவிகிதம் - இந்த 477 டன் தங்கத்தின் மதிப்பு, சுமார் 20,000 கோடி ரூபாய்!

இந்தத் தொகை, கல்விக்காக வருடா வருடம் மத்திய அரசு செலவிடும் தொகையைவிட நான்கைந்து மடங்கு அதிகம். இந்திய ராணுவத்தின் கிட்டத்தட்ட ஒரு வருடத்தின் மொத்த ஒதுக்கீட்டுத் தொகை!

அப்படி என்னதான் ரகசியம் உள்ளது இந்தத் தங்கத்தில்? ஏன் இவ்வளவு மோகம்?








பல காலமாகவே, பெண்களின் மோகத்தினால்தான் தங்கம் இவ்வளவு தூரத்திற்கு விற்பனை ஆகிறது என்றும், அதன் விலையும் இவர்களால்தான் ஏறுகிறது என்றும் ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. ஆனால் இந்த உலக தங்கக் கவுன்சிலின் வேறொரு புள்ளி விவரம், இது விஷயத்தில் ஒரு புதிய தகவல் தருகிறது : பெண்கள்தான் நிறைய தங்க நகைகள் வாங்குகிறார்கள் என்பதே தவறாம்!

"எங்களின் ஆராய்ச்சிப்படி ஆண்கள்தான் அதிகமாக நகைகளை வாங்குகிறார்கள். ஆனால் இவர்கள் வாங்குபவை



ஜப்பானிலிருந்து வெளிவரும் 'ஆசாகி சிம்பன்' என்ற செய்தித்தாளில் "உலக விஷயங்கள் - ஒரு இந்தியனின் பார்வையில்" எனும் தலைப்பில் பால் தாக்கரேயின் கார்ட்டூன்கள் வெளிவருகின்றன. மேலும் அவரது மூன்று கார்ட்டூன்கள் வின்ஸ்டன் சர்ச்சிலின் 'ஆட்டோபயாகிரபி இன் கார்ட்டூன்ஸ்' என்ற நூலில் வெளியிடப் பட்டுள்ளன.

தகவல்: பழனி
(நன்றி: மிட்டே)

பெண்களுக்கான நகைகளாக இருக்கலாம்!" என்கிறார் உலக தங்க கவுன்சிலின் தென்பிராந்திய மேலாளர் ஷிவ்ராம்.

இதுபோன்ற புள்ளி விவரங்கள் சாதாரண மக்களுக்கு வெறும் ஆச்சரியத்தை மட்டுமே ஏற்படுத்தும். ஆனால் கூர்மதி படைத்த எந்த ஒரு நகை மாளிகை அதிபரையும் நகை உற்பத்தி செய்யும் தொழிலதிபர்களையும் சிந்திக்க வைக்கவே செய்யும். சிந்திக்க வைத்திருக்கிறது.

ஆண்களுக்கென்று எவ்வளவு விதமான நகைகள் உள்ளன? ஏன் அவர்களுக்காகவே புத்தம் புதிய வடிவங்களில் ஆபரணங்களை ஏற்படுத்தக் கூடாது? – இந்த எண்ணம் சென்னை லலிதா ஜுவல்லர்ஸ் அதிபர் சுகுமாரனுக்குத் தோன்றியதன் விளைவாக ஆண்களுக்கென்றே பிரத்யேகமான 'மார்க்' தங்க ஆபரணங்களை, லலிதா அறிமுகப்படுத்தியுள்ளது.

"மார்க் (M.A.R.K.) என்பது Mens Accessories in Real Karat என்பதின் சுருக்கமே. அதுவுமில்லாமல் ஒரு புதிய துறையில் நாங்கள் காலடி வைக்கிறோம் என்பதையும் இது குறிக்கும்" எனப் பெருமையுடன் சொல்கிறார் சுகுமாரன்.

'ஆண்களுக்கென்றே தனியாக நகைகள் ரொம்ப காலமாகவே இருந்து வருகின்றன. கழுத்து செயினும், புலிநகம், புலிப்பல் செயின்களும், யானைமுடி மோதிரமும், தற்கால ஃபேஷனான காப்பும் (Bracelet) ரொம்ப நாளாகத் தெரிந்த விஷயங்கள்தாம். ஆனால் எங்களது மார்க்கில் புதிதாக ஆண்களின் சட்டை "காலர்" 'பின்'களும், முழுச்சட்டையின் கை பட்டன்களும் (Coffliks) டை (tie) பின்களும் இப்போது அறிமுகப்படுத்துகிறோம். அது மட்டுமில்லாமல், பேண்ட் பெல்ட் பக்கிளை ஆபரணம் போன்ற வடிவத்தில் அறிமுகப்படுத்துகிறோம்" என்றார்.

"நீங்கள் சொல்லும் நகை வகைகளை ஆண்கள் ஏற்றுக் கொள்கிறார்களா?" என்று கேட்டதற்கு, "ஆண்களுக்காக நாங்கள் அறிமுகப்படுத்தியிருக்கும் இந்த 'மார்க்'ஐ நகைகள் என்று நாங்கள் குறிப்பிடுவதில்லை. இதை அணிகலன் என்றுதான் அழைக்கிறோம். நகைகள் என்றாலே அது என்னமோ பெண்களுடன் சம்பந்தப்பட்டதுதான் என்கிற ஒரு மனப்பான்மை நம்மிடையே ஊறியிருக்கிறது. 'ஆண்களுக்கு நகைகள்' என்று சொன்னால், வாடிக்கையாளர்கள் ஏற்காமல் போகும் அபாயம் உண்டு. அதனால்தான் இவற்றை அணிகலன் என்று அழைக்கிறோம்" என்கிறார்.

ரெடிமேட் ஆடைகள், எலக்ட்ரானிக் சாதனங்களுக்கு உள்ளது போல், நகைகளுக்குப் பொதுவாக பிராண்ட் பெயர் கிடையாது. இந்த விஷயத்திலும் இப்போது மாற்றம். 'மார்க்' ஒரு பிராண்ட் பெயராகப் பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது.

இதெல்லாம் சரி! சட்டை காலருக்கு அணிகலன்கள், சட்டை பட்டனுக்கு பதில் தங்க, வைர அணிகலன்கள்... இதெல்லாம் யார் சார் வாங்குகிறார்கள்?

"என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? நாங்கள் அறிமுகப்படுத்திய நாட்களிலிருந்து நடக்கும் விற்பனை எங்களை மிகவும் உற்சாகப்படுத்தியுள்ளது" என்கிறார் சுகுமாரன்.


என்ன விலை என்று விசாரித்தபோது, "ஐந்தாயிரம் முதல் ஐந்து லட்சம் வரையில் வெரைட்டி உண்டு" என்றார்கள்!

- ராஜூ

● பனிப்பிரதேசத்தில் வாழும் எக்ஸிமோக்களுக்கு ஜலதோஷம் பிடிப்பது இல்லை. ஜலதோஷத்தைப் பரப்பும் கிருமிகளால் பனிப்பிரதேசங்களில் வாழ முடிவதில்லை என்பதே காரணம்.

-எஸ்.முகமது

சுஜாதா பக்கம்



தொலைக்காட்சியில் எனக்கு மிகவும் பிடித்தது, அதை அணைக்கும் ஸ்விட்ச் என்று சொல்வது நியாயமாகாது. தொலைக்காட்சியை அளவோடு பார்க்கலாம். இந்தப் பட்டியல் உங்களுக்கு பயன்படுமோ தெரியாது. தொலைக்காட்சியில் நான் விரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சிகள் இவை :

காலை ஆறு மணி சங்கீதக் கச்சேரிகள் ('பார்த்து' ஆக வேண்டும் என்று கட்டாயமில்லை. அடுத்த அறையில் இருந்தும் கேட்கலாம்.) நல்ல கச்சேரிகள் அடிக்கடி வருகின்றன. ஒரு யோசனை - இப்போது இளைய சமுதாயம் தீவிரமாக கர்நாடக சங்கீதத்தை எடுத்துக் கொண்டிருப்பது ஆரோக்கியமான விஷயம். அவர்களுக்கு ஊக்கமளிக்க ராம், சஞ்சய், விஜயசிவா, உன்னிகிருஷ்ணன் போன்ற பாடகர்கள், எண்ணற்ற இளம் வயலினர்கள் (கார்த்திக் என்று ஒருவர் அப்படி கடம் வாசிக்கிறார்) இவர்களுக்கெல்லாம் சாயங்கால வேளைகளில் இளைய பாரதம் என்ற பெயரில் மாமாக்கள் அபஸ்வரமாக ஆர்கெஸ்ட்ரா பாடுகிறார்களே, அவர்களைத் துரத்தி விட்டு, வாய்ப்பளிக்க வேண்டும்.

'குட்மார்னிங் இண்டியா' என்று வினோத் துவாவும் அந்த வசீகரமான பெண்ணும் தரும் சுமார் ஒரு மணி நேர நிகழ்ச்சி, எப்போதும் பார்க்கத்தக்கது. ப்ரணாய் ராய், துவா இருவரும் இந்த தேசத்தின் மிகச் சிறந்த ஒளிபரப்பாளர்கள்.

துவா இந்தி வெறியர். ஒருமுறை அமைச்சர் அருணாசலத்திடம் படபடவென்று இந்தியில் பொறிந்து தள்ளி, கேள்வி கேட்க, அமைச்சர் அமைதியுடன் முழுவதும் கேட்டுவிட்டு, "எனக்கு ஒரு வார்த்தை கூடப் புரியவில்லை; ஆங்கிலத்தில் கேளுங்கள்" என்று சொன்னது சந்தோஷமாக இருந்தது.

தென்னிந்தியர்களை வட இந்தியர்கள் தாழ்வாகக் கருதுவதைப் பற்றி ஸிபிஐயைச் (CPI) சேர்ந்த சீதாராம் பச்சோரி போன்றவர்களிடம் கேட்க வேண்டும். இதற்கு ஒரே மாற்று, அவர்கள் இந்தியில் கேட்டால் நாம் தமிழிலோ, கன்னடத்திலோ பதில் சொல்வது.

தேவேகௌடா கன்னடத்தில் எழுதி வைத்து இந்தியில் பேச மெனக்கெடுவது தமாஷாக இருக்கிறது. தேவையில்லை...

பிற்பகலில் டீவி பார்க்காமல் இருப்பது ஆரோக்கியம். அதற்குப் பதிலாகப் படிக்கலாம். நான் தூர்தர்ஷனின் விசுவாசி. கேபிள் போட்டுக் கொள்ளவில்லை. கேபிளில் நமக்கு பத்து பதினைந்து சானல்கள் இருப்பதாக எண்ணுவது மாயை. ஒரு சானல்தான். பத்து பெயர்களில் எல்லாரும் தருவது ஒரே நிகழ்ச்சிதான். தலைப்பும் அறிவிப்பாளரும் தான் மாறுகிறார்கள். இந்த நிலை மாறும் வரை கேபிள் போட்டுக் கொள்வதாக இல்லை. (சன் டீவியுடன் என் கசப்பான அனுபவமும் காரணம்). ஈஎஸ்பிஎன்னில் கிரிக்கெட், பாஸ்கெட்பால், பெண்களின் வாலிபால் அவ்வப்போது தெரிந்தவர் வீடுகளுக்குச் சென்று பார்ப்பேன். டிடியிலேயே டென்னிஸ் நிறைய காட்டுகிறார்கள்.

தமிழாக்கத் தொடர்களில் 'சாந்தி' மந்திரா பேடிக்காகவும் அவருக்காகப் பேசும் பெயர் தெரியாத அந்தப் பெண்ணின் இனிய குரலுக்காகவும் அவ்வப்போது சாம்பிள் பார்ப்பேன். மாலை வேளைகளில் 'சூடாமணி கதைகள்' போன்ற தொடர்கள் அரிதாகக் கிடைக்கும். (டைரக்ஷன் - கம்பர் ஜெயராமன்) தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்துத் தரும் தொடரும் சிறப்பாக உள்ளது. (அண்மையில் அசோகமித்திரனின் 'மாலதி') லாசராவின் 'கழுகு' லோ, லோ. வயலும் வாழ்வில் நிஜ விவசாயிகளை இயற்கையான சூழ்நிலையில் காணும் பேட்டிகள் சுவாரஸ்யமாக உள்ளன. சஃபாரி அணிந்து வியர்க்கும் அதிகாரிகளின் ஸ்டுடியோ பேட்டிகளை விஷம் போலத் தவிர்க்கிறேன். (புத்தக விமர்சனம் தவிர) அதுபோல் நாட்டுப்புறக் கலைகளை ஸ்டுடியோவில் காட்டினால் உடனே அணைத்து விடுவேன். வில்லுப்பாட்டு தவிர அண்மையில் ஜான்சிராணி என்கிற இளம்பெண்மணியின் சிசுவதம், நாட்டுப்புறக் கலைகளை தொலைக்காட்சி உயிருடன் வைத்திருப்பதற்கு உதாரணம். கிராமிய சூழ்நிலையிலேயே எடுத்தால் நல்லது. சாயங்காலம் 'ப்னாஸம்' வால்ட் டிஸ்னி, இரவில் 'மேரி ஆவாஸ் சுனோ' பார்க்கிறேன். சூப்பர் ஹிட் முக்காபுலா ஆறு வாரத்துக்கு ஒருமுறை பார்த்தால் போதும். சித்தார்த் பாசுவின் 'க்விஸ் சம்மிட்' வாரம் தவறாமல் பார்க்கிறேன். புதன்கிழமை டிடி மூன்றிலும் வெள்ளி, சனி இரண்டாவதிலும் சில நல்ல சினிமாக்கள் நம் அதிர்ஷ்டத்தைப் பொறுத்து அகப்படும்.

ந்யூஸ் டுனைட் தவறாமல் பார்ப்பேன். எட்டரை மணி ந்யூஸ் தலைப்புச் செய்திகள் மட்டும் கேட்டு விட்டு கவனம் கலைந்து கடைசியில் நமக்குத் தெரிந்தவர்கள் யாராவது மைக் முன்னால் மௌனமாக வந்தால் அவருக்கு போன் செய்வது பொழுது போக்கு. மூன்றாவது சானல் சிலதான் திரையில் மூன்று நான்கு பிம்பமாகத் தெரியும். ட்ரான்ஸ்மிஷன் கோளாறு. சீக்கிரமே மூன்றாவது சானலை அவர்கள் மூடிவிட்டாலோ, குணம் மாற்றி விட்டாலோ ஆச்சரியமில்லை. அவ்வப்போது உயிர் இருக்கிறதா என்று போட்டுப் பார்ப்பேன். மிகுந்த கலாசார சத்தியங்களுடன் துவங்கிய இந்த சானல், பட்ஜெட் பற்றாக்குறையாலும் விளம்பரம் இல்லாததாலும் காட்டியதையே காட்டுகிறார்கள். குஷ்வந்த் சிங் மோடியைப் பேட்டி கண்டதை இதுவரை நூறு முறை போட்டிருப்பார்கள்.

தொலைக்காட்சி ஹோமியோபதியைப் போல. கொஞ்சமாக உட்கொண்டால் குணம்.

(மீண்டும் அடுத்த வாரம்)

முதலடி

வேதா கோபாலன்

எட்ட வைத்துப் பார்த்தேன். கிட்ட வைத்துப் பார்த்தேன். நம்ம அப்பாவா! அந்தக் கடிதத்தை மீண்டும் மீண்டும் திருப்பிப் பார்த்தேன். அப்பா கடிதம் எழுதியிருக்கிறார் என்பதையே என்னால் நம்ப முடியவில்லை. சிங்கம் இறங்கி வந்துவிட்டதா என்ன? சின்னதாய் மனதுக்குள் ஒரு நடுக்கம் பரவியது. அவர் கடிதம் எழுதுமளவுக்கு இறங்கி வந்து விட்டார் எனில்... அப்படி என்ன நேர்ந்து விட்டது? அவரின் கம்பீரம் குறைவதை, அது என் பொருட்டு எனினும் நான் ஜீரணிக்கத் தயாரில்லை.

"யார்கிட்டேயிருந்து லெட்டர்?" தனக்குப் பரிச்சயமில்லாத தமிழை இப்போது ஓரளவுக்குச் சுமாராய்ப் பேச ஆரம்பித்திருந்த வேற்று பாஷைப் பெண்டாட்டி ஆர்வமாய்க் கிட்டே வந்து கேட்டாள்.

''அப்பா...'' ஒற்றை வார்த்தைக்கு மேல் பெயர மாட்டேன் என்றது.

"யுவர் ஃபாதர்!" ஜென்னி முகம் தாமரையாகக் கேட்டாள்.

நான் பதில் சொல்லவில்லை. அந்தக் கடிதத்தைக் கத்தரிக்கோல் வைத்துச் சிராய்க் கவர் பிரித்துப் படிக்க ஆரம்பித்தேன். அப்பாவின் பர்ஃபெக்ஷனுக்கு நான் தரும் மரியாதை. ''வீட்டை விட்டு வெளியே போடா...'' என்று சீறிய அப்பாவின் மேல் ஏனோ கோபம் வர மறுத்தது. அவரின் காரெக்டர் உணர்ந்த யாருமே இப்படி நடக்கவில்லையென்றால்தான் வியந்திருப்போம்.

'ஜகன்னாதா...' என்று பக்கத்தில் உட்கார்ந்து நேரில் தலைவருடிப் பேசுவது போல் துவங்கியிருந்தது அந்தக் கடிதம். துவக்க நிமிஷத்திலேயே தடக்கென்று கண்ணில் ஜலம் ரொப்பியது. அப்பாதான் இத்தனை வைராக்யமாய் இருந்தார் என்றால் நான் ஏன் இத்தனை பிடிவாதமாய் இருந்தேன் என்று எனக்கே கோபம் எழுந்தது.

அந்தக் கடிதத்தைப் பிரித்தபோதே முதல் உறுத்தல் மனத்தில். இது சத்தியமாய் அப்பாவின் கையெழுத்தல்ல. என் கை முட்டியில் ஸ்கேலால் அடித்து அடித்து என் கையெழுத்தைச் சீர்ப்படுத்தி இன்று என்னைச் சுற்றியுள்ள அனைவரும் திகட்டத் திகட்ட, கையெழுத்து என்ற ஒரு சமாசாரத்துக்காகவே புகழுமளவுக்குச் செய்திருக்கும் அந்த மனிதர் என்னை விடவும் நூறு மடங்கு அழகாய் எழுதுவார். இது ஏதோ இறுக்கல். ஆனால்...


'நான் படுத்த படுக்கையில் இருப்பதால் எழுத முடியவில்லை. பாராலிஸிஸ். ஜக்கு... நினைத்துப் பார்த்தால் இத்தனை பிடிவாதம் தேவையா என்று என்னை நானே கடிந்து கொள்கிறேன். நீ இள ரத்தம். உனக்கு ஆத்திரம் இருக்கும். நினைத்தவளைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று ஒற்றைக் காலில் நின்றது ஓரளவு நியாயப்படுத்தக்கூடிய விஷயம். ஆனால் நான்... அப்போது... பதினைந்து வருஷத்துக்கு முன்னே உன் இஷ்டத்துக்கு ஒருத்தியைத் தேர்ந்தெடுத்து அவளுக்குத்தான் உன் மோதிர மாற்றல் என்று ஒற்றைக்காலில் நின்றபோது, உன்னைத் துரத்தியடித்திருக்க வேண்டாமோ என்று யோசிக்கிறேன். காலம் கடந்து என்றும் சேர்த்துக் கொள் ஜகந்நாதா. உன் அம்மா நேற்று மெல்ல வந்து என் வாயில் மாத்திரைக் கசப்புக்களை ஒவ்வொன்றாய்ப் போட்டுக் கொண்டே யதேச்சை போல் கேட்டாள்.

''இன்னும் இந்த வைராக்யம் தேவைதானா? அவனை... கூப்பிட்டு ஒரே ஒரு தடவை...'' என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு என் பார்வைக்குப் பயந்து ஓடியே போய் விட்டாள். என் மனசில் அந்த வார்த்தைகள் வேலை செய்து செய்து... இதோ இந்தக் கடிதம். ஆனால் மை டியர் ஸன்... நான் கடிதம் எழுதும் நிலையில் இல்லாததால் உன் அக்கா மீனாட்சியின் பெண் வந்தனாவை விட்டு எழுதச் சொல்கிறேன். நான்தான் எழுதச் சொன்னேன் என்று யாரிடமும் சொல்லக் கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டேன். தயவு பண்ணி நீயும் சொல்விடாதேடா... நீயாய் என்னைப் பார்க்க வருகிற மாதிரி வா. முதலில் விட்டுக் கொடுத்தவன் நீயே என்றிருக்கட்டும். கொஞ்சம் இரக்கம் காட்டு.'

மைகாட், மைகாட். அப்பாவா? இத்தனை கெஞ்சல்களும் இவ்வளவு தழைதல்களும் அவருக்குச் சாத்தியமா என்ன! நான் எத்தனையோ முறை ஜென்னிஃபரையும் அனி

ருத்தனையும் அழைத்துக் கொண்டு போய் அதிரடியாய் அவரின் பரந்து விரிந்த தாமரைப்பூக் கால்களில் விழுந்து மன்னித் தால்தான் ஆயிற்று என்று பிடிவாதிக்க நினைத்து, இந்தப் பெண் எதிரில் சினிமாக் காட்சிகள் வேண்டாம் என்று தீர்மானித்தது பைத்தியக்காரத்தனம் போலும்.

கடிதத்தின் கடைசி வரியைப் படித்துவிட்டு வெட்கமில்லாமல் அழுதேன். 'நான் செத்துப் போவதற்குள் ஒரு தடவை என் மாட்டுப் பொண்ணையும் பேரனா – பேத்தியா? அதை யும் என் கண்ணில் காட்டி விட்டுப் போவாயா?'



''வர்றேம்ப்பா... வர்றேன்'' மீண்டும் கையெழுத்தைப் பார்த்தேன். லேசாய்க் கிறுக்க லாய் இருந்தாலும் மிகவும் ஸெட்டிலாகியிருந்த கையெழுத்து. ஓ. வந்தனா அப்போது ஆறு வயசுப் பெண். இப்போது எத்தனை பெரியவ ளாய் இருப்பாள்! தம்பி விக்னேஷுக்குக் கல்யாணம் ஆகிவிட்டிருக்கும். நாலைந்து வயசில் ஒரு குழந்தை இருந்தாலும் வியப் பில்லை. ஹூம். நான் கிளம்பி வரும்போது தம்பியே சின்னப் பையன்தான்.

நடுக்கத்துடன் சென்னையில் சிந்தாதிரிப் பேட்டையில் அப்பாவின் வீடு இருந்த தெருவில் நுழைந்தபோது அசாதாரணக் கும்பல் எதுவும் தென்படாதது தெம்பு.

"வாடா... வாடா... வா... வா..." வாசலில் கோலம் போடவோ என்னவோ வந்த அம்மா அப்படியே சின்னப் பெண் போல் துள்ளி ஓடி வந்தாள்.

நல்லவேளை முகவரி மாறவில்லை.

''அம்மா'' தொண்டையை அடைத்தது எத்தனை தளர்ந்திருக்கிறாள். பதினைந்து வருஷத்தில் நிறைவுகள் கிடைத்த மாதிரியே இழந்ததும் நிறையவோ?

"எப்பிடிடா இருக்கே... இதுதான் என் பேரனா? ஐயோடா... அப்பிடியே நம்மாத்து ஜாடைடா..." அம்மா கண்களில் நீர். கட்டி யணைத்து உச்சந்தலையில் பேரனுக்கு முத்த மிட்ட நிமிஷம் பொறாமையுணர்ந்தேன். என்னையும் அப்படிக் கொஞ்சேன்.

ஒரு நிமிஷம் சட்டென்று எதேச்சை போல் ஜென்னிஃபரை நிமிர்ந்தவள் 'உன்னாலன்றோ சகலமும்' போல் விழிகளைத் திருப்பிக் கொண்டாள், என் ஜென்னி இதற்கெல்லாம் அவசரப்பட்டுக் கோபிக்கிற ரகமில்லை. "நமஸ்தே அம்மா" என்றான் இருகரம் குவித்து, நான் கேட்க நினைத்ததை என்னையும்

முந்திக்கொண்டு என் மனைவி கேட்டாள். "அப்பா எப்படிம்மா இருக்கார்?" அன்னியப் பெண்ணிடம் அப்பா என்று அத்தனை உரிமையாய் வந்ததற்குத்தான் வியந்து நிமிர்ந்தாள் என்று நினைத்தேன்.

"அப்பாவுக்கு... உடம்பு சரியில்லைன்னு தெரிஞ்சுதான் வந்திருக்கியா" குரல் தாழ்த்தி ரகசியம் போல் கேட்டாள். "யாராவது உறவினர் சொன்னாளா?"

சட்டென்று சுதாரித்தேன். அப்பா கடிதம் போட்டு வந்ததாக இவளிடம் மட்டும் காண்பித்துக் கொள்ளலாமா என்ன?

"என்னவோ திடீர்னு தோணித்து.. உன்னையெல்லாம் பார்க்க ஆசை..." அபத்தமாய் வாய் குழறி இழுத்தேன்.

"ஐயோ... இத்தனை ஆசையாய் வந்திருக்கே. ஆனால் படுத்த படுக்கையிலும் அந்தக் கிழட்டுச் சிங்கம் பார்வையைத் திருப்பிண்டுடுத்துன்னா என்ன செய்யறதுன்னு பயமாய் இருக்குடா..." அம்மாவின் குரலில் கலக்கம். அப்பா அப்படிச் செய்ய மாட்டார் என்று ஆறுதல் சொல்ல வேண்டும் போல் இருந்தது. வேண்டாம். நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும்.

"அந்த ரூம்லதான் அப்பா படுத்திருக்கார்." அம்மா காண்பித்த அறையில் அரை வெளிச்சம். நீல டிஸ்டெம்பரில் பளிச் சென்றிருந்த அறை இப்போது அழுகிற மாதிரி இருக்கிறது. முன்பு நான் பரீட்சைக்குப் படிக்கும் போது என்னமாய் தகதகக்கும்? இப்போது அப்பாவின் நிலைமைக்காய் அழுகிறதோ?

அப்பாவினருகில் பிளாஸ்கிலிருந்து வெந்நீர் எடுத்துக் கொண்டிருக்கும் பெண் யார்? "இதுதாண்டா உன் தம்பி பெண்டாட்டி..."

"அப்பா... வாயைத் திறங்கோ... மாத்திரை..." என்று அப்பாவினருகில் உரிமையாய்க் குனிந்து சொல்லும் பெண்ணைப் பார்த்தபோது 'என்ன ஒரு குடுப்பினை? பக்கத்திலேயே இருந்து செய்கிறாள்' என்று தோன்றியது.

அப்பா மாத்திரை சாப்பிடும் பொருட்டு லேசாய் வாயை மட்டுமல்லாமல் கண்ணையும் திறந்தார். சுற்றிச் சுழன்று ஜென்னியையும் பேரனையும் பார்த்துக் கண்கள் என் மேல் நிலைத்தன. 'நீயா!' என்றன விழிகள். முகத்தில், நெற்றியில் வரிகள். எனக்கு முகவரி கொடுத்தவரன்றோ.

என் சகல வைராக்யங்களும் கரைய, பெரிய மேருமலை போல் படுத்திருந்த அப்பாவினருகில் சரிந்து அமர்ந்தேன். மென்மையாய்க் கரத்தைத் தொட்டேன். "அப்பா... எப்படி இருக்கீங்க? என்ன உடம்புக்கு?"

அழவே கூடாது என்று நான் திட்டமிட்டிருந்ததெல்லாம் நிமிஷமாய் மறந்து போய்...

"அழாதேடா... வளர்ந்த பிள்ளைகள் அழுதா உங்கப்பாவுக்குப் பிடிக்காதுன்னு தெரியுமோல்லியோ..." அம்மா தலை கோதினாள்.

மெல்லக் கையை என் பக்கம் காட்டி அப்பா தலையை இடமும் வலமுமாய் அசைத்தார்.

"த்சு... அப்படியெல்லாம் சொல்லக் கூடாது... குழந்தை வந்திருக்கான். எல்லாத்தையும் மறந்துடுங்க. மனசில் போட்டு மறுகி மறுகித்தான் உடம்பை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கேளே..."

இப்போ அப்பா என்ன சொன்னார்?

அருள்வாக்கு



"எத்தனையோ வாழ்க்கை ப்ரச்னை எங்களுக்கு. ஆபீஸ் கார்யம், வீட்டுக் கார்யம் என்று அலைகிறோம், அவதிப்படுகிறோம். அது தெரியாமல், எங்கேயோ மடத்தில் உட்கார்ந்து கொண்டு 'அதைக் கத்துக்கோ, இதைக் கத்துக்கோ' என்று நீங்கள் உபதேசம் பண்ணினால் எப்படி?" என்று கேட்கலாம். மனஸிருந்தால் எதையும் செய்துவிடலாம். இத்தனை வாழ்க்கை ப்ரச்னை இருந்தாலும் எத்தனை பொழுது அரட்டை, ந்யூஸ் பேப்பர், ஸினிமா, சீட்டுக்கட்டு இத்யாதியிலே போகிறது? இப்படி வீணாகப் போகிற காலத்தில் பாதி பொதுநலப் பணிகளுக்கு என்றும், பாதி ஏதாவது வித்யாப்யாஸத்துக்கு என்றும் வைத்துவிட்டால் போதும் - ஸமூஹப் பணிகளும் நடந்துவிடும், நம்முடைய வித்யைகளும் ப்ரகாசம் பெற்றுவிடும், நாமும் ப்ரகாசம் பெற்று விடுவோம்.

வேலை - வெட்டி, குடும்பத் தொல்லை

அம்மா என்ன புரிந்து கொண்டாள்?

"என்னம்மா?" புருவம் உயர்த்திக் கேட்டேன்.

"அது பற்றி உனக்கென்ன? ஆரம்பத்தில் அப்பிடித்தான் பந்தா பண்ணுவார். அப்புறம் தானாய் மன்னிப்பார்..."

"அதென்னவோ.. .உனக்காய்த் தோணி வந்திருக்கியே... பகவான் செயல்தான்'' என்றாள் அம்மா தொடர்ந்து.

'இல்லை. அப்பாவின் செயல்' என்று சொல்லத் தோன்றியது. காண்பித்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனாலும் அப்பா என்னை விரோதி மாதிரி பார்க்கிறாராம்! என்ன ஒரு நடிப்பு? தானாய் லெட்டர் போட்டது தெரியாதிருக்க அப்படி ஒரு பிசுக்காரம்.

"அக்கா எப்பிடிம்மா இருக்கா?" வேண்டுமென்றே அக்காவைப் பற்றிப் பேசினேன். அந்தப் பெண் வந்தனாவைப் பார்க்க ஆசையாய் இருந்தது. என்னை வரவழைத்த கடிதத்தை எழுதியவளல்லவா? நன்றியுணர்ச்சி.

"உம்.. போன வாரம் வந்திருந்தா... அவ பெண் வந்தனா. இப்போ எம்.பி.ஏ. பண்ணிண்டிருக்கு. திரும்பவும் திண்டுக்கல் போயாச்சு'' என்றாள்.

பேரன் விடாமல் பாட்டியையே சுற்றிக் கொண்டிருக்க, என் பெண்டாட்டி முதலில் கொஞ்சம் செய்வதறியாது திகைத்தாலும் மிக இயல்பாக அந்தக் குடும்பத்துடன் ஒட்டிவிட்டதைச் சொல்லாமல் சொல்கிற மாதிரி காரியங்களை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்ய... முதலில் முகத்தைத் திருப்பிக் கொண்ட அம்மா கூட இப்போது அவளுடன் முகம் கொடுத்துப் பேச ஆரம்பித்து விட்டாள்.

"இதோ பாருடியம்மா... உன் பெயர் என் வாயில் நுழைய மாட்டேங்கறது. லட்சுமின்னு கூப்பிடறேன்."

"கூப்பிடுங்கம்மா. எனக்கும் அந்தப் பெயர் பிடிக்கும். தினமும் லட்சுமி சுலோகம் சொல்றேன்" என்று அவள் சொன்னபோது அம்மாவின் பிரமிப்பு அருவியாய் வழிந்தது.

நான் அப்பாவை விட்டு நகரவில்லை. ''அப்பா... என்னை மன்னிச்சுடுங்கப்பா. உங்களை ரொம்பவும் இழந்துட்டேம்பா... இந்தப் பதினைஞ்சு வருஷமாய் நானே இந்தத் தவிப்புத் 'தவிச்சேன்னா... என்னைப் பெற்ற நீங்க என்னமாய்த் துடிச்சிருப்பீங்கன்னு புரியது..." வேண்டுமென்றே நான் கடிதம் பற்றி எதுவும் பிரஸ்தாபிக்கவில்லை. நானாய் வந்தது

எறும்பார் கடிக்கிறார்...

"அ.இ.அ.தி.மு.க. மீது கூறப்பட்ட கறைகளைப் போக்க, எந்த தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறேன்..."

— தேர்தல் பிரசார காசெட்டில் ஜெ.



என்று மன்றாடுபவர்களுக்கு 'டைவர்ஷன்' வேண்டாமா என்று கேட்கலாம். ஆசையோடு மனஸ் ஈடுபட்டு ஏதாவது ஒரு வித்யை அப்யஸிக்க ஆரம்பித்தீர்களானால் உங்களுக்கே தெரியும், இந்த அப்யாஸத்தைவிடப் பெரிய 'டைவர்ஷன்' எதுவும் இல்லையென்று. களைத்துப் போன மனஸுக்கு வேண்டிய உத்ஸாஹத்தை இவையே (வித்யைகளே) ஊட்டிவிடும். அப்படியும் ஒரேயடியாக நீங்கள் 'டைவர்ஷன்' என்பதை விட்டுவிடும்படிச் சொல்லவில்லை. அதுவும் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் நீங்களே ஆலோசித்துப் பார்த்து, "இப்படிப் பொழுதை வேஸ்ட் பண்ணுகிறோமே" என்று நினைக்கக்கூடியவைகளை விட்டு விட்டு இப்படி நிறைய அகப்படும் - அந்தப் பொழுதை இப்படியொரு Pursuit-ஐ (தேட்டத்தில்) செலவிட்டால் போதும், ஏதாவதொரு ஸ்வதேச வித்யையில் ஈடுபட்டுத் தேர்ச்சி பெற்று விடலாம். நம் முன்னோர்கள் போன வழி அதுதான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

போலவே இருக்கட்டும். அவர் கடிதம் போட்டதாய்க் குறிப்பிட்டுக் காட்டி அவருடைய கம்பீரத்துக்கு இழுக்கு செய்ய வேண்டாம் என்று தோன்றியது.

"நானே மருந்து கொடுக்கிறேன்" அம்மா கையிலிருந்து வாங்கிக் கொண்டேன். அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டார். நான் கொடுத்து அவர் மருந்து சாப்பிட மாட்டாராம். என் மேல் அத்தனை கோபமாம். எனக்குச் சிரிப்பு வரவில்லை; அழுகைதான்!

"ஒருநாள் தலை சுத்தறதுன்னு உட்கார்ந்தார்டா... அன்றைக்கே பாத்ரூமில் தலை சுத்தி விழவும் செய்தார். ரத்தக் கொதிப்பு அதிகமாய் இருக்குன்னார் டாக்டர். அப்புறம் பாரிச வாயு..."

அதற்கப்புறம் ரொம்ப நேரத்துக்கு அம்மா பேசவில்லை.


"அப்பா... நான்... நான் வந்திருக்கேம்ப்பா... என்னை மன்னிச்சு... வந்தியான்னு ஒரு வார்த்தை கேளுங்கப்பா..." சின்னக் குழந்தையானேன். இன்னும் இரண்டு நாளைக்குத்தான் லீவு. அதற்குள் அப்பாவை முழுவதுமாய் நிறைவு செய்து கிளம்பல் சாத்தியமா? அவர் என்னைப் பார்த்ததும் முகம் மலர்ந்து மகிழ்வார் என்றல்லவா நினைத்தேன்?

அடுத்த நாள், காலையிலிருந்தே மனசு சரியில்லை. நான் எதிர்பார்த்து வந்ததென்ன, இங்கே நடப்பதென்ன? நானாகவே, எல்லாவற்றையும் மறந்தாற்போல் மன்னிப்புக் கேட்கு முகமாக வருகிற மாதிரி வந்தேன். அப்பாவே வரிந்து வரிந்து அவ்வளவு நெகிழ்ந்து, எதிர்பாராத விதமாய் நாலு வரி எழுதிப் போடவும்தான் கிளம்பினேன்.

முகத்தை இவ்வளவு திருப்பிக் கொள்ள வேண்டுமா? முதலில் நடிப்பு என்று நினைத்தேன். சுற்றி உள்ளவர்களுக்காக என்று நினைத்துச் சமாதானம் பண்ணிக் கொண்டேன். இப்போது சந்தேகமாய் இருந்தது. ஏதோ ஒரு வேகத்தில் எழுதி விடவும் இப்போது மீண்டும் ஈகோ தலைதூக்கி, இறங்கி வர அனுமதிக்கவில்லையோ?

"அப்பா... நான்... நான் இன்னிக்குக் கிளம்பணும்..." அவர் முகம் தடவிச் சொன்னேன். ரோஸ் நிற அப்பா நிறையவே நிறம் மாறியிருந்தார். ஆனால் அப்போதும் குணம் மாறினதாகத் தெரியவில்லை.

இடக்கை மட்டும் ஸ்வாதீனம். நெஞ்சு தடவிக் கொண்டார். முகம் வேதனை காட்டியது. "ஊம்..." ஏதோ ஒரு உருவமற்ற உறுமலாய் ஹூங்காரமாய் வெளிப்பட்டு அது நிகழ்ந்து விட்டது.



அம்மா அழுது புரளவில்லை. "போயிட்டாரா... போயிட்டாரா..." என்று அடிபட்ட பார்வையுடன் இரண்டு முறை கேட்டாள். "இப்படியெல்லாம் ஆகும்னு தான் வராதவனை பகவான் வரவழைச்சானா? இத்தனை வைராக்கியத்திலும் பிள்ளை கையால் கொள்ளின்னு குடுப்பினையாக்கும்."

எதிர்பார்த்த மரணம்தான் என்றாலும் தன்னை ஏமாற்றி விட்டு அந்த மனிதன் மட்டும் தப்பித்துப் போய் விட்டது போல் குற்றச் சாட்டுப் பார்வை பார்த்தாள்.

எனக்கும் கூட ஏமாற்றம்தான். இத்தனை தூரம் கடிதம் எழுதி வரவழைத்து விட்டு, அது பற்றி ஒன்றுமே கண்டுகொள்ளாமல்...

திடீரென்று மனசுக்குள் ஒரு பேருண்மை உறைத்தது.

உண்மையில் கடிதம் எழுதியது அப்பா தானா? அம்மாவாய் இருக்குமா? கையெழுத்து தெரியக்கூடாது என்று பேத்தியை விட்டு எழுதச் சொல்லி... அதனால்தான் 'கடிதம் எழுதியது பற்றிக் கண்டுகொள்ளாதே... நீயாய் வருகிற மாதிரி வா' என்று ஒரு குறிப்போ?

அப்படியானால் நடித்தது அப்பாவா, அம்மாவா?

"உடம்பு சரியில்லையென்று தெரிந்து தான் வந்தாயா?" என்று வியப்பாய்க் கேட்டது நடிப்பாகவா இருக்கும்?

மை காட். மை காட்.

ஆக...

அப்பாவைப் பொறுத்தவரையில் அவரின் ஈகோ கடைசி வரையில் அப்படியே தான் இருந்திருக்கிறதா? தன் கம்பீரம் இழக்காமல்தான் போய்ச் சேர்ந்திருக்கிறாரா? அப்பாவைப் பொறுத்தவரைக்கும் நானாகத்தான் மன்னிப்புக் கோரி வந்திருக்கிறேன் என்பதாகிறதா?

அம்மாவின் முகத்தைப் பார்த்தேன். அவள் அப்பாவுடன் ஏதோ மானசீக சம்பாஷணை நிகழ்த்திக் கொண்டிருந்தாள்.

நான் கடைசி வரைக்கும் இவளிடம் எதையும் கேட்கப் போவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டேன். என் அனுமதியின்றி ஜென்னி வாயைத் திறக்க மாட்டாள்.

ஏனெனில் –

ஒருவேளை அப்பாதான் நிஜமாய்க் கடிதம் எழுதியவரெனில், அம்மாவுக்கு அந்த ரகசியம் உடைத்த பாவத்தைச் செய்தவனாவேனல்லவா?



தள்ளிப்போட்டது தப்பாப் போச்சு!

'இன்று ஒரு தகவல்' கேட்கிறவர்களில் சில பேர் அவ்வப்போது எனக்குக் கடிதங்கள் எழுதுவதுண்டு. "தகவல் சொல்ற மாமா அவர்களுக்கு வணக்கம். தயவுபண்ணி ஒரு கையெழுத்துப் போட்டு அனுப்புங்களேன்" என்று கேட்கும் பள்ளிச் சிறுவர்கள். 'அர்த்த பஞ்சகம் பற்றி நீங்கள் சொன்னீர்கள். அது சம்பந்தமாக இன்னும் கொஞ்சம் உங்களிடம் பேச வேண்டும். எப்போ வரலாம்?' என்று கேட்கிற பெரியவர்கள். இவர்களுக்கு மத்தியில்தான் அந்தக் கடிதமும் ஒருநாள் வந்து சேர்ந்தது.

அந்த முதியவரின் கடிதத்தைப் படித்ததும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எல்லா வசதிகளோடும், வானொலியில் மிக உயர்ந்த பதவியிலிருக்கும் '....' அவருடைய தந்தையா இப்படி.. இங்கே?

உடனே அந்தப் பெரியவருக்கு பதில் கடிதம் எழுதினேன் –

'கூடிய சீக்கிரம் உங்களை வந்து பார்க்கிறேன். என்னை உங்கள் மகனாகக் கருதி என்ன வேண்டுமோ கேளுங்கள், நான் செய்கிறேன்!'

ஒருநாள் சாவகாசமாகப் போய் அன்று முழுவதும் அங்கேயே இருந்து பெரியவருடன் உரையாடி விட்டு வரவேண்டும் என்று முடிவு செய்து

அந்த முதியவரின் கடிதத்தைப் படித்ததும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எல்லா வசதிகளோடும், வானொலியில் மிக உயர்ந்த பதவியிலிருக்கும் '....' அவருடைய தந்தையா இப்படி.. இங்கே?

கொண்டேன்.

அவசரமாகப் போய்ப் பார்த்துவிட்டு திரும்பி விடலாம் என்று நினைத்திருந்தால் அப்போதே போயிருக்கலாம். நிதானமாகப் போகலாம் என்று நினைத்ததாலேயே இது தாமதமாகிக் கொண்டு வந்தது!

அவ்வப்போது அவரிடமிருந்து கடிதங்கள் வரும். பதில் எழுதுவேன். இடையில் 23.06.93 தேதியிட்டக் கடிதம் வந்தபோது நான் வெளியூரில் இருந்தேன். ஊர் திரும்பியவுடன் அடுத்த கடிதமும் சேர்த்துக் காத்திருந்தது! "என்னுடைய காலை நீக்கி விட்டார்கள்."

'அவசியம் ஒருநாள் அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வர வேண்டும்' என்று நினைப்பதோடு மட்டுமே நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தேன்.

ஒருநாள்... இரண்டாவது சனிக்கிழமை... விடுமுறை

23.6.93

மதிப்பிற்குரிய 'இன்று ஒரு தகவல்' சுவாமிநாதனுக்கு,

நான் தற்சமயம் என் இடதுகால் முழங்கால் வரை வெட்டுப்படுவதற்காக (Amputation) ஆஸ்பத்திரியில் இருக்கிறேன். எனக்கு உதவ யாரும் இல்லை. தங்களைப் போன்றவர்களின் நல்லாசிகள் என்னை ஒருவிதமாகத் தேற்றும். ஆகையால் தாங்கள் எனக்காகப் பிரார்த்தனை செய்யவும். ஆபரேஷன் ஆனபின், தங்களுக்கு எந்தவித கஷ்டமும் இல்லையென்றால் என்னைப் பார்க்கவர வேண்டுகிறேன்.

நன்றி.

தங்கள் அன்பை எதிர்பார்க்கும்,
பி.ஆர். ராமமூர்த்தி

நான்... அலுவலகத்தில் ஓர் ஒலிப்பதிவை முடித்துக் கொண்டு வெளியே வந்தேன்.

வாசலில் இருந்த ஊழியர், "சார், நீங்க உள்ளேயா இருந்தீங்க? ஒரு நிமிஷத்துக்கு முன்னே ஆட்டோவிலே ஒரு பெரியவர் வந்தார். உங்களை விசாரிச்சார். கால் இல்லேப்பா. அவரை அழைச்சுகிட்டு வர முடியுமா?'ன்னார். "இன்னைக்கு ஆபீசு லீவு ஆச்சுங்களேன்னதும் போயிட்டார்" என்றார்.

இனியும் அவரை சந்திப்பதைத் தள்ளிப் போடக் கூடாது என தீர்மானித்தாலும் அன்று மாலையே விவசாயம் சம்பந்தப்பட்ட ஒலிப்பதிவுக்காக தருமபுரி புறப்பட வேண்டிய சூழ்நிலை. மூன்று நாட்கள் கழித்துத் திரும்பியதும், பிடிவாதமாக ஒருநாள் ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு, அந்தப் பெரியவரைத் தேடிப் போனேன். அங்கே எனக்குக் கிடைத்த செய்தி – "உங்களுக்குத் தகவல் தெரியாதா? அவரு செத்துப் போயிட்டாரு."

28.5.92

அன்புள்ள ஐயா,

நான் எல்.ஐ.சி. ஊழியனாக இருந்து ஓய்வுபெற்றவன். என் சரும வியாதியின் காரணமாக என் குடும்பத்தினரால் விலக்கப்பட்டு வண்டலூரில் உள்ள தொழுநோயாளிகள் குடியிருப்பில் வசிக்கிறேன்.

'இன்று ஒரு தகவல்' நிகழ்ச்சியை சுவையாக நடத்தி வருகிறீர்கள். பாராட்டுக்கள். கடவுள் உங்களை ஆசீர்வதிக்கட்டும்.

இங்கு நாங்கள் முப்பத்தைந்து குடும்பத்தினர் இருக்கிறோம். உங்களை நேரில் சந்திக்க ஆசைப்படுகிறோம். உங்கள் நிகழ்ச்சிக்கான 'தகவல்'கள் கூட இங்கே உங்களுக்குக் கிடைக்கலாம்.

நாங்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும்தான் இருக்கிறோம். சுற்றுப்புறத்தையும் நன்றாக வைத்திருக்கிறோம். ஆகையால் தாங்கள் இங்கே வருவதற்குத் தயங்க வேண்டியதில்லை.

நான், தற்போது உங்கள் இலாகாவில் பெரிய பதவியில் இருக்கிறாரே '......' அவருடைய தந்தை.

உங்கள் அன்புள்ள,
பி.ஆர். ராமமூர்த்தி

'எதையும் தள்ளிப் போடாதே' என்கிற அறிவுரையை எனக்கு உணர்த்திவிட்டு அந்தப் பெரியவர் போய்ச் சேர்ந்து விட்டார். இப்போதெல்லாம் எதையும் நான் தள்ளிப் போடுவதே இல்லை.

தொகுப்பு : அருண்சரண்யா

மணிவண்ணன் காட்டில் மழை!



• பெரிய தம்பி : 'நோ நெருக்கம்!'

வாகினியின் ஆஸ்பத்திரி செட் வாசலில் செல்லுலர் போனுடன் தண்டபாணியைப் பார்த்ததும் அதிர்ந்து விட்டேன்.

''என்ன தண்டபாணி, யாராவது மாஜி அமைச்சருக்குத் தற்காலிக பினாமியா உன்னை அப்பாயின்ட் பண்ணியிருக்காங்களா? கலக்கறே?'' என்றேன்

"செல்ஃபோன் பார்த்துட்டுக் கேக்கறியா? இன்னிய தேதிக்கு போட்டுக்க நல்ல பேண்ட் - ஷர்ட் இல்லாட்டியும் பரவாயில்லை. கையில ஒரு செல்லுலர் இல்லாத சினிமாக்காரனை, சினிமாக்காரனாவே யாரும் மதிக்கறதில்லை! விடு, இந்த வாரம் உனக்கு மூணு இசையமைப்பாளர்கள் பத்தி முத்தான மூணு தகவல் தரப்போறேன்."

"சொல்லு, சொல்லு" என்று சப்புக் கொட்டிக் கொண்டேன்.

"அர்ஜுனோட 'தெனாலி ராஜா'வுல அவரோட ஆஸ்தான இசையமைப்பாளர் வித்யாசாகர் இல்லை. பதிலா, பாலபாரதி."

"அடடா, கல்தா குடுத்துட்டாங்களா?"

"இதை கல்தான்னு சொல்ல முடியாது. வித்யாசாகரோட சமீபத்திய பாட்டுகள் பெரிசா ஹிட் ஆகலை; அதனால தூக்கிட்டாங்கன்னு சில பேர் பேசிக்கறாங்கதான். ஆனா விஷயம் அது இல்லை. பாலபாரதி, டைரக்டர் செல்வாவுக்குப் பிடிச்ச இசையமைப்பாளர். அவரோட முதல் படத்துல அத்தனை பாட்டுங்களும் ஹிட். தலைவாசல் ஞாபகமிருக்கில்ல? ஏதோ போறாத வேளை... தொடர்ந்து அவருக்கு சான்ஸ் கிடைக்கலை. செல்வா, அர்ஜுன் கிட்டப் பேசி, 'இந்த மாதிரி சமாசாரம்... எனக்காக இந்த ஒரு படத்துல பாலபாரதி மியூசிக் பண்ணட்டும்' அப்படீன்னு ரிக்வெஸ்ட் பண்ணிக்கிட்டாப்பலயாம். முதல்ல கொஞ்சம் யோசிச்சாலும் அப்புறம் 'பரவாயில்லை. அவரும் நல்லா வர வேணாமா. ஒரு வாய்ப்பு தந்து பார்ப்போம்'னு அர்ஜுன் ஒத்துக்கிட்டாராம்."

"நல்ல மனசப்பா!"

"இதுல வித்யாசாகர் கொஞ்சம் அப்செட் ஆயிட்டதா கேள்வி. ஏன்னா, இங்க அவருக்குத் தொடர்ந்து வாய்ப்புத் தர ஒரே ஆளு அர்ஜுன்தான். 'விதி இப்படி ஆயிடுச்சே'ன்னு மனுஷன் மௌனமா புலம்பிட்டிருக்காராம்."

"அடடா..."

"அடுத்த நியூஸ் ரகுமான் பத்தி. தெரியுமா? முன்னெல்லாம் டைரக்டர்கள், புரொட்யூசரைத் தேடிப் போய் கதை சொல்லுவாங்க. அவங்களுக்குப் பிடிச்சிருந்தா, அப்புறம் மத்த விஷயங்கள் பத்திப் பேசுவாங்க. இதுதான் நடைமுறையா இருந்தது.



• மணிவண்ணன் : காட்டுல மழை

இப்ப ரகுமான் அதுல ஒரு சின்ன மாறுதல் பண்ணியிருக்கார்."

"என்னது?"

"படத்துல ரகுமான் மியூசிக் வேணும்னா, முதல்ல அவர் கிட்ட போய் கதை சொல்லணும். பிடிச்சிருந்தா, மூணு மாசம் கழிச்சி கால்ஷீட் தருவார். ரகுமான் கால்ஷீட் யார்கிட்டே இருக்குதோ அவங்ககிட்ட, கதை கூட கேட்காம இப்ப தயாரிப்பாளர்கள் வாய்ப்புத் தரத் தயாரா இருக்காங்க."

"அப்புடிப் போடு. உலகம் எப்படி மாறிடிச்சி பார்த்தியா? இதுக்குப் பேர்தான் நேரம்னு சொல்லுவாங்க."

"இன்னொரு இசையமைப்பாளருக்குத் தொடர்ந்து நேரம் நல்லா இருக்கணும்னா, அவரைச் சுத்தி இருக்கற கூஜாக்களை முதல்ல காலி பண்ண வைக்கணும்னு இப்ப ஃபீல்டுல அங்கங்க பேசிக்கறாங்க தெரியுமா?"

"நீ யாரைச் சொல்றே?"

"கார்த்திக் ராஜா! ஏவி.எம்.ல இருக்கற ரெக்கார்டிங் தியேட்டர் ஒண்ணுலதான் அவர் இப்ப தன்னோட வேலைகளைப் பார்த்துட்டு இருக்கார். அவரைப் பார்க்க வரவங்க ரூம்ல வெயிட் பண்ணிட்டிருந்தாங்கன்னு வெச்சிக்க... அவரோட அணுக்கத் தொண்டர்கள் ரெண்டு மூணு பேர் இருக்காங்க. அவங்க வந்து, 'ஐயா வரார், எழுந்திருங்க' அப்படீன்னு ஒரு மாதிரி பயபக்தியோட உட்கார்ந்திருக்கறவங்களை எழுப்பிடறாங்க. சில பெரிய மனுஷங்க, 'இது ஏதடா சின்னப் பையன் வந்தா நாம எழுந்து நிக்க வேண்டியதா இருக்கே'ன்னு முணுமுணுத்தாலும் காரியம் ஆகணுமேன்னு அவங்க சொல்றபடி செஞ்சிட்டு, வெளியில வந்து புலம்பறாங்க."

"அடடா, தப்பாச்சே."

"முழுக்கக் கேளு. கொஞ்ச நாள் முன்னாடி ஒரு பெரிய பைனான்சியர் கார்த்திக் ராஜாவைப் பார்க்க வந்திருக்காரு... அவருக்கு, வந்தவர் எவ்வளோ பெரிய ஆளுன்னு சரியா தெரியலை. 'டைரக்டர், தயாரிப்பாளர் வந்தா சரி; இவர் எதுக்கு வரணும்'னு நினைச்சாரோ என்னவோ, 'சார், கொஞ்சம் வெளியில இருக்கீங்களா?'ன்னு கேட்டாராம்."

"ஐயய்யோ!"

"பார்த்தார் அந்த பைனான்சியர். பயங்கரக் கடுப்பாகிப் போய் எழுந்து போயிட்டாராம். அப்புறம் வந்த டைரக்டர், தயாரிப்பாளரெல்லாம் விஷயம் கேள்விப்பட்டு, 'படியளக்கற பரந்தாமனுக்கு இந்த கதியா'ன்னு அலறி அடிச்சிட்டுப் போய் அவரைத் தேடியிருக்காங்க. கார்த்திக் ராஜா தரப்புலயும் போய் தேடி, கூப்பிட்டு வந்து 'மன்னிச்சிடுங்க, சின்னப் பையன், தெரியாம பண்ணிட்டான்'னு புலம்பி, கால்ல விழாத குறையா கெஞ்சியிருக்காங்க. அப்புறம் இளையராஜா கூப்பிட்டு இவரைக் கண்டிச்சிருக்கார். இப்ப தேர் நிலைக்கு வந்திருக்கறதா கேள்வி."

"போடு! இந்த வம்பு விஷயமெல்லாம் உனக்கு யார் மூலமா கிடைக்குது தண்டபாணி?"

"கடவுள் வந்து கனவுல சொல்வார். ப்ச். கேட்டுட்டுப் போவியா... இன்னும் கேளு. பெரிய தம்பி படப்பிடிப்பு நடக்குது இல்லை?"

"ஆமா? பிரபு – நக்மா..."

"அதேதான். அதுல ஒரு விவகாரம். திடீர்னு 'இனிமே ரொம்ப நெருக்கமாவெல்லாம் நடிக்க மாட்டேன். கொஞ்சம் டிஸ்டன்ஸ் கீப்-அப் பண்ணப் போறேன்'னு நக்மா சொல்லிட்டாங்க."

"வீட்ல போதிமரம் வளர்க்கறாங்களாமா?"

"அது தெரியலை. என்னதான் நெருக்கமா, கவர்ச்சியா நடிச்சாலும் பேரு வர்றதென்னவோ நல்லா நடிச்சா மட்டும்தான். எதுக்காக இத்தனை நெருக்கம் – கவர்ச்சின்னு சிந்திக்க ஆரம்பிச்சி, திட்டத்தை இந்தப் படத்துலேருந்து அறிமுகப்படுத்தியிருக்காங்களாம்."

"நல்ல முடிவுதான். ஆனா தயாரிப்பாளர்களுக்குத்தான் ரொம்ப ஏமாற்றமா இருக்கும்."

"இருந்துட்டுப் போவட்டும். இதைக் கேளு. கவுண்டமணியோட சம்பளம், விலைவாசி மாதிரி கிடுகிடுன்னு உசந்துக்கிட்டே போகற விஷயம் உனக்குத் தெரிஞ்சிருக்கும்."

"ஆமாம்?"

"ஷங்கரோட அடுத்த படம் 'ஜீன்ஸ்'ல நடிக்க முழுசா ஒரு பெரிய நோட்டு ரேட் பேசியிருக்காங்கன்ற விஷயம் தெரியுமா?"

"ஒரு கோடியா?"


• கார்த்திக்ராஜா : தப்பு! தப்பு!


• ராஜீவ்மேனன் : ஆக்ஷன் த்ரில்லர்


• ரகுமான் : 'கதை கேளு, கதை கேளு'

இங்கே கடப்பது மான்... அங்கே கடப்பது?



● வனவிலங்கு சரணாலயங்களின் இடையே செல்லும் சாலைகளில் சில இடங்களில் 'யானைகள் சாலையைக் கடக்குமிடம்', 'மான்கள் கடக்குமிடம்' – மெதுவாகச் செல்லவும் என வாகனங்களில் செல்வோருக்கு அறிவிப்புகள் இருக்கும். ஆனால் பிரான்ஸ் நாட்டில் 'தவளைகள் இங்கே சாலையை கடக்கின்றன' என்ற அறிவிப்பு பலகை உள்ளது! தவளைகளும் தேரைகளும் தாங்கள் வசிக்கும் இடங்களிலிருந்து குளிர்காலம் முடிந்து வசந்த காலம் வந்ததும் வெளியேறி, கூட்டம் கூட்டமாக இனப்பெருக்கத்திற்காக வேறு இடம் செல்கின்றன. சாலையைக் கடக்கும்பொழுது வாகனங்களில் சிக்கி ஆயிரக்கணக்கில் இறந்து போகின்றன. இதற்காகவே அந்த அறிவிப்புகள்.

ஆதாரம் : யுனெஸ்கோகூரியர்
தகவல் : எஸ். ஆலன்

"உரக்கப் பேசாதே. ஷங்கர் மாதிரி பெரிய டைரக்டர்களைப் படம் பண்ண வைக்கிற அளவுக்கு வசதியுள்ள தயாரிப்பாளர்களுக்கு இது ஒரு பிரச்னை இல்லை. பல்லைக் கடிச்சிட்டு, கேட்டதைக் குடுத்துடுவாங்க. ஆனா மொத்தப் படத்தையே ஒரு கோடிக்குள்ளாற முடிக்கற பிளான்ல இருக்கறவங்கதானே ஃபீல்டுல ஜாஸ்தி?"

"அதனால?"

"கவுண்டமணியை அணுகற நினைப்புல இருந்தவங்க எல்லாரும் இப்ப ஒட்டுமொத்தமா மணிவண்ணன் வீட்டை நோக்கிப் படை எடுக்க ஆரம்பிச்சிருக்காங்க."

"கேள்விப்பட்டேன்."

"அது மட்டுமில்லை. கவுண்டமணிக்குன்னா டயலாக் யோசிச்சி, அவர் பாணியில எழுதித் தரணும். கிளிக் ஆனா உண்டு. இல்லாட்டி இல்லை; ஆனா மணிவண்ணன் விஷயத்துல காமெடிக்குன்னு மெனக்கெடவே வேணாம்; அவர் ரோல் என்னன்னு சொல்லிட்டா ஹ்யூமர் விஷயத்தை அவரே கவனிச்சிக்கறாராம்."

"என்ன இருந்தாலும் ரைட்டர் – டைரக்டர் இல்லையா?"

" 'முன்னாள்'னு சொல்லு. 'எதுக்கு மெனக்கெட்டு கதை யோசிச்சு, செலவு பண்ணி, படம் எடுத்து, போகுமா போகாதான்னு கவலைப்பட்டுட்டு இருக்கணும்; பேசாம இனி டைரக்ஷனை விட்டுட்டு முழு நேர நடிகரா ஆயிடலாம்'னு முடிவு பண்ணிட்டாராம் மணிவண்ணன்!"

"உத்தமம்!"

"முதல் படம் டைரக்ட் பண்ண ஆரம்பிச்சி முக்கால்வாசிதான் படம் முடிஞ்சிருக்குன்ற நிலையில, அடுத்தப் படத்துக்கு ஸ்கிரிப்ட் ரெடி பண்றார் ஒரு டைரக்டர். தெரியுமா?"

"யார் தண்டபாணி?"

"ராஜீவ்மேனன். மின்சாரக் கனவு ஷூட்டிங் ஒரு மாதிரியா அறுபது பர்சென்ட் முடிஞ்சிருக்கு இப்பத்தான். ஆனா சைட்-பை-சைட் இவர் வேற ஒரு படத்துக்கு இப்ப தீவிரமா ஸ்கிரிப்ட் எழுதிட்டிருக்காராம். அவரே சொன்னார்."

"என்னவாம் படம்?"

"பீகார்ல நடந்த ஏதோ ஒரு நிஜ சம்பவத்தை அடிப்படையா வெச்சி ஒரு முழு நீள ஆக்ஷன் த்ரில்லர்."

"ப்ரொட்யூசர் யாரு? அதே ஏவிஎம்மா?"

"அதெல்லாம் இல்லை. இந்தப் படத்தைத் தமிழ்ல எடுக்கற ஐடியாவே இல்லையாம் அவருக்கு. ஹிந்தி அல்லது வேற ஏதாவது மொழி. தமிழுக்கான சப்ஜெக்ட் – இது இல்லைன்னு சொன்னார்."

"நான் ஒண்ணு கேள்விப்பட்டேன். சேகர் கபூருக்காக இவரை ஒரு படம் எடுத்துத் தரச் சொல்லிக் கேட்டிருக்காங்களாம்? அதுக்குத்தான் ஒருவேளை இந்த ஸ்கிரிப்டோ?"

"தெரியலை. அடுத்தவாட்டி பார்க்கறப்ப கேட்டுச் சொல்றேன்."

- கிச்சா

"இவர் எதுவுமே செய்யாமல் சும்மா இருந்ததனால்தான் நாட்டு நிலைமை மேலும் மோசமடையாமல் இருந்தது. எனவே இவருக்குப் பாராட்டு விழா எடுப்பதில் மகிழ்ச்சி..."





"இந்த எம்.பிக்களையெல்லாம் கட்சியை விட்டு வெளியேத்தணும். 'சம்பாதிச்ச'ப் பணத்தையெல்லாம் இப்படியா அசட்டுத் தனமா வீட்டுலயே வைச்சிருந்து மாட்டிப் பாங்க...!"

– இந்தியன் ஃஃபீச்சர்ஸ் சிண்டிகேட்

ஆஹ்... ஹாஹ் ஹா...

"ஐயா! உங்க அன்பளிப்பை மறந்துட் டீங்களே...!"



"நாம ஒண்ணும் பணக்காரங்களைப் புறக் கணிக்கலையே.... ஏழைகளுக்கான இந்தத் திட்டங்களோட பலனெல்லாம் கடைசில பணக்காரங்களுக்குத்தான் போய்ச் சேரும்!





டாட்டா பிர்லா

டாட்டா-பிர்லா போலப் பணக்காரர்களாக நினைப்பது தப்பில்லை. ஆனால், படத்தில் கதாநாயகர்கள் கவுண்டமணியும் பார்த்திபனும் அதற்குத் தேர்ந்தெடுக்கிற வழி - கொள்ளை! (டாட்டா-பிர்லா மன்னிப்பார்களாக!)

ஒரு பேங்க், ஒரு பைனான்சியர் வீடு என்று சின்னதாகத் திருட்டு முயற்சித்து விட்டு, வேறொரு சம்பந்தப்படாத கொலை வழக்கில் மணிவண்ணனிடம் மாட்டிக் கொண்டுவிடுகிறார்கள். அவருக்கொரு முக்கியமான குடும்பப் பிரச்னை. அண்ணன் சொத்தை அடைவதற்குத் தடையாக அநாவசியத்துக்கு அவன் மகள் ஒருத்தி குறுக்கே நிற்கிறாள். 'அந்தப் பெண்ணைக் கொன்று விடு; உன்னைப் பணக்காரனாக்குகிறேன்' என்று அவர் பார்த்திபனிடம் சொல்ல, கொல்ல வந்தவருக்குக் காதல் வந்துவிட...

சும்மா சிரிக்க வைப்பது ஒன்றே நோக்கம் என்று எதன் மீது வீர சபதம் செய்துவிட்டு வந்தார்களோ, தெரியவில்லை. முதல் அரை மணி நேர அறுவையை ஒருவாறு பாப்கார்ன் கொறித்துக் கொண்டு சமாளித்துவிட்டால், பின்னால் இடுப்பு ஒடிய சிரிக்கலாம்.

கவுண்டமணிக்கு, ஜனங்களை எங்கே தொட்டால் சிரிப்பார்கள் என்கிற ஃபார்முலா அத்துபடி ஆகிவிட்டது. மணிவண்ணனுக்கு, எங்கே தொட்டால் விழுந்து விழுந்து சிரிப்பார்கள் என்பது. லேசான கொங்கு வாசனையுடன் போகிற, போக்கில் அவர் தூவிப் போகிற சில கமெண்ட்களுக்கு படம் முடிந்தபின் பஸ்ஸில்கூட சிரிப்பு வருகிறது.

இந்த முழு நகைச்சுவைப் படத்தில் டைரக்டர் ரங்கநாதன் ஒரு புதுப்பாணி தமாஷை அறிமுகப்படுத்தியிருக்கிறார். அதாவது, சினிமா அபத்தங்களையே கிண்டல் செய்து, நகைச்சுவைக் காட்சிகளாக்குவது. உதாரணமாக, 'இந்த சிச்சுவேஷனுக்கு ஒரு பாட்டு வெச்சா ஜனங்க வேணான்னா சொல்லப் போறாங்க?' என்று கேட்டுவிட்டு, ஒரு பாட்டு.

படம் முடிகிற தருவாயில் ரக்ஷனா மணிவண்ணனிடம்: "சித்தப்பா, நீங்க இவ்ளோ மோசமானவர்னு இப்பத்தான் தெரியுது." மணிவண்ணன்: "கிளைமாக்ஸ் வந்தாச்சு. இப்பக்கூட தெரிஞ்சுக்காட்டி எப்படி?"

இந்த டெக்னிக்கை இனி நிறையப் பேர் பின்பற்றப் போகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு தகவல்:

பத்திருபது வருஷங்களுக்கு முன்னால் சாய் பராஞ்பே என்கிற பெண் இந்தி டைரக்டர் (அல்லது இந்தி-பெண்-டைரக்டர்) இதே உத்தியை மட்டுமே கையாண்டு 'சஷ்மே பதூர்' என்றொரு முழு மசாலா எடுத்து ஜூபிளி பார்த்திருக்கிறார்.

இவை தவிர, படத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டிய விஷயங்கள் இன்னும் இரண்டு உள்ளன.

1. தமாஷ் படமாச்சே என்று பிள்ளைகளைக் கூட்டிப் போக வேண்டாம். தமது இரண்டாவது படத்திலேயே மிஸ் கல்கத்தா செய்திருக்கிற தியாகத்தைப் பார்த்தால் தலை சுற்றுகிறது.

2. இத்தனை மோசமான எடிட்டிங் இதுவரை கண்ட ஞாபகமில்லை. சண்டைக் காட்சிகளில் எல்லாரும் காற்றைச் சாடுகிறார்கள்! வயிற்றில் அடி விழுந்தால், தலையைப் பிடித்துக் கொள்கிறார்கள்!

-ஆர்.பி.ஆர்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

நவராத்திரியை முன்னிட்டு எங்கள் விசேஷ சேமிப்பு திட்டம்

சில்வர் டெபாசிட் திட்டம்



டெபாசிட்டுகள் வரவேற்கப் படுகின்றன

EXPRESS

FINANCIAL EXCHANGE LIMITED

பாங்க் ஆப் அமெரிக்காவின் சார்பு நிறுவனம்

- வாகனங்களுக்கான கடன்கள்
- பங்குகள் மீதான கடன்கள்

அங்கீகரிக்கப்பட்ட டீலர் **அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்** டிராவலர்ஸ் செக்குகள்

பதிவு அலுவலகம்: நெ. 9, அட்லேப் டவர், தெற்கு போக் சாலை, சென்னை-600 017.
போன்: 4340325, 4340329, 4341403, ஃபாக்ஸ்: 4341518.

• சென்னை • ஹைதராபாத் • விஜயவாடா • விசாகப்பட்டினம் • பெங்களூர் • திருச்சி
• கும்பகோணம் • கோயம்புத்தூர் • பாண்டிச்சேரி

1996 மார்ச் 4ந் தேதி [illegible] வெளியான [illegible] இந்த விளம்பரம் வெளியாகிறது.

Helios & Mathison

Registered with the Registrar of Newspaper of India under No. 10411/57 * Registered No. TN / MS (S) MH/202 * Licensed to post
without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka



அனுப்ரியா

சாரதா'ஸ்ல்

இலட்சம் உடை கொட்டி கிடக்கு!
மொத்த கூட்டம் இங்கே இருக்கு!!
எந்த வயசுக்கும் துணி இருக்கு!!!
உங்க வசதிக்கு உடை இருக்கு!!!!

பட்டுடைவகைகளில்
இந்த வருடத்திய புதிய டிசைன்கள் . . .



நவப்ரியா

சாரதாஸ்

(முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

827, அண்ணா சாலை,
தன்பில்டிங், சென்னை - 2
போன் : 852 11 77

32, என்.எஸ்.பி.ரோடு,
திருச்சி - 2
போன் : 27077

சாரதாஸ் திருச்சி - 2, சென்னை - 2
தவிர வேறு எங்கும் கிளைகள் கிடையாது.